# தமிழர் இந்துக்களா?



பசுந்தீவு கோவிந்தன் B.A.(Hons.) Econ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் இந்துக்களா?

ஆசிரியர்:
பசுந்தீவு கோவிந்தன் B.A. (Hons.) Econ.
முன்னைநாள் போதனாசிரியர் - இலங்கை
ஓய்வுநிலை வங்கியாளர் - கனடா

வெளியீடு:
*கோ. சரோஜினிதேவி*
*சிற்பனை முருகன் வீதி*
*6ம் வட்டாரம்*
*வேலணை - இலங்கை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூல் தலைப்பு : தமிழர் இந்துக்களா?

ஆசிரியர் : பசுந்தீவு கோவிந்தன் B.A.(Hons.) Econ.

முதற்பதிப்பு : பெப்ரவரி, 2015

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

பக்கங்கள் : xx +102

அச்சமைப்பு &
அச்சுப்பதிப்பு : ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, *B.A.* தம்பி லேன்,
யாழ்ப்பாணம்.

வெளியீடு : கோ. சரோஜினிதேவி
சிற்பனை முருகன் வீதி
6ம் வட்டாரம்
வேலணை - இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



தன் வாழ் நாள் முழுவதும் ஆத்மீக வாழ்வு வாழ்ந்து
சொல்லாலும் செயலாலும் சிந்தனையாலும்
எழுத்தாலும் தமிழ் மக்களுக்கு மத்தியில்
சமய விழிப்புணர்வு ஊட்டிய
ஆன்மீக வள்ளல், ஞானசுரபி

**ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள்**

அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் M.A., S.L.E.A.S.

ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சப்த தீவுகளில் ஒன்றாகிய நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பசுந்தீவு கோவிந்தன் பொருளியலில் பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர். தமிழிலே பல சிறுகதைகளை, நாவல்களை எழுதி வெளியிட்டவர். தமிழனுக்குரிய பாரம்பரிய சமயம் சைவசமயம். தமிழும் சைவமும் தான் தமிழினத்தின் நாகரிக வளர்ச்சிக்கு இரு கண்களாக இருந்து உதவியவை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராகவே இவர் காணப் படுகின்றார். சைவம் இன்றேல் தமிழன் இல்லை, தமிழன் இன்றேல் சைவம் இல்லை என்ற கொள்கையை உடையவர்.

உலகப் பெரும் மதங்களில் ஒன்றாக இருக்கின்ற இந்து சமயத்தைப் பலகோடி மக்கள் உலகம் முழுவதும் பின்பற்றி வருகின்றார்கள். இந்துசமயம் சைவம், சாக்தம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என ஆறு பெரும் பிரிவுகளையும் அதற்குள்ளே பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய மகா சமுத்திரம் போல அமைந்திருக்கும் பெரும் சமயமாகும். சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சைவர்களிடையே காஸ்மீர சைவம், கன்னட சைவம் (வீரசைவம்), சித்தாந்த சைவம் என்ற பிரிவுகள் உண்டு. இதே போல விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்ற வைணவ சமயத்தவர்களிடையே வடகலை வைணவம், தென்கலை வைணவம் என்ற பிரிவுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறசமயப் பிடியிலிருந்து இந்து சமயத்தைப் பாரத நாட்டில் பாதுகாத்த பெருமை சங்கராச்சாரியாரையே சாரும். இந்து சமயத்தின் பிரஸ்தானத்திரயம் என்று போற்றப்படுகின்ற உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றின் சாறாக அத்வைத தத்துவத்தை சங்கரர் இந்து சமயத்திற்கு உபகரித்துள்ளார். ஞானமார்க்கந்தான் இறைவனை அடைவதற்குரிய வழி என்பதை அத்வைத தத்துவத்தின் ஊடாக விளக்குகின்றார். ஆனால் சாதாரண மக்களுக்குரிய மார்க்கம் பக்தி மார்க்கம் என்பதை உணர்ந்து கொண்ட சங்கரர் பக்திரசம் ததும்பும் நூல்கள் பலவற்றையும் தந்துள்ளார். சிவன்மீது சிவானந்த லஹரியும் சக்திமீது சௌந்தர்ய லஹரியும் விஷ்ணுமீது பஜகோவிந்தமும் விநாயகப் பெருமான் மீது கணேச பஞ்சரத்தினமும் முருகன் மீது சுப்பிரமணிய புஜங்கமும் இலக்குமி மீது கனகதாராவும் எனப் பக்திரசம் ததும்பும் தோத்திர நூல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.

பல பிரிவுகளாக சிதறிக்கிடந்த இந்து சமயத்தை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்காக சங்கராச்சாரியார் அரும்பாடுபட்டார். ஆனால் நம்மவர்கள் இன்று இந்து சமயத்தைப் பல பிரிவுகளாக உடைத்து அதன் கட்டுக் கோப்பைச் சீரழிக்க முற்படுகின்றனர் என்பதை நூலாசிரியர் இந்நூலில் தெளிவாக விளக்கி எழுதியுள்ளார். பரத கண்டம் முழுவதும் பரந்து நிற்கும் மிகப்பெரிய மக்கள் கூட்டத்தை இந்துக்கள் என்ற பெயரினால் இணைத்து வைத்திருக்கும் இணையற்ற சக்திதான் இந்து சமயம் என்கிறார். இந்து சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கலாசார பிணைப்புச் சாதனமாகவே உள்ளது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல நமது சமயம் இவ்வாறு பிளவுபட்டால் நம்மவர்களை மதமாற்றம் செய்யமுற்படுபவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடும் என்கிறார்.

சாதாரண மக்களிடம் சமய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவே உருவ வழிபாடு தோற்றம் பெற்றது. தெய்வ வடிவங்களுக்குள்ளே பெரிது சிறிது கற்பிக்கக்கூடாது என்பது நூலாசிரியரின் கருத்தாகும். பாரம்பரியமாக வழிபட்டு வந்த தெய்வ வடிவத்தை குலதெய்வம் என்றும் மனதிற்குப் பிடித்தமான தெய்வ வடிவத்தை இஷ்ட தெய்வம் அல்லது உபாசனா மூர்த்தி என்றும் இந்து சமயம் கூறுகின்றது. இஷ்ட தெய்வ வழிபாட்டிலும் பக்தர்கள் தமக்குப் பிடித்த தெய்வ வடிவத்தையே வழிபட்டு வருகின்றார்கள். உதாரணமாக: முருகப் பெருமானை பால முருகனாகவும், வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமார சாமியாகவும், ஆறுமுக சுவாமியாகவும், தண்டாயுத பாணியாகவும் உள்ள பல்வேறு வடிவங்களில் ஒன்றினைத் தெரிவு செய்து முருக உபாசகர்கள் வழிபட்டு வருகின்றார்கள். இதனைச் சமய வழிபாட்டில் தனிமனித சுதந்திரமாகக் கொள்ளலாம்.

தமிழர்கள் மத்தியில் சிவ வழிபாட்டின் முதன்மை குறைந்து மற்றைய தெய்வ வடிவங்களின் வழிபாடுகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றமை காலத்தின் கோலம் என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். ஆஞ்சநேயர் வழிபாடு இன்று தமிழர் மத்தியில் வேகமாகப் பரவி வருகின்றது. ஆஞ்சநேயருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்திற்கும் என்ன தொடர்பு என்று வினாவுகின்றார். பக்தி உணர்வை ஏற்படுத்தவேண்டிய ஆலயங்களில் பெரும் பாலானவை இன்று வர்த்தக நிலையங்களாக மாறிவருகின்றன. ஆலயத்தை நடாத்துபவர்களினதும் சிவாச்சாரியார்களினதும் வியாபார தந்திரமே ஒழியக் காலத்தின் கோலம் என்று இதனைக் கூறமுடியாது. விளம்பர வித்தைகளும், வியாபார தந்திரங்களும் மலிந்த இந்தக் காலத்தில் இவ்வாறான செயல்களே சமூகத்தில் இடம்பெறும்.

மாற்றமுள்ளது உயிர்வாழ்கின்றது, மாற்றமற்றது மறைந்து போகின்றது என்பதுதான் உலக வரலாறு புகட்டும் பாடமாகும். எனவே பழையன கழிதலையும் புதியன புகுதலையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் நூலாசிரியர். பழையவற்றில் தேவையற்றவை தானாகவே கழியும். அறிவியல் உலகம் ஏற்றுக்கொண்ட புதிய விடயங்கள் தானாகவே புகுந்துவிடும். ஆனால் நம்மவர்களில் சிலர், "பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்," என்ற கொள்கையோடு செயற்படுகின்றார்கள். நமது முன்னோர்கள் நமக்கு அளித்த அரும்பெரும் செல்வங்களையெல்லாம் பழையன என்று தூக்கி எறிந்துவிட முடியாது. "யாமிருக்கப் பயம் ஏன்," என்ற வாசகத்தோடு கூடிய முருகப் பெருமானின் படத்தினை தமது வீட்டு வாசலில் தூக்கிய இந்துக்கள் எல்லாம் இன்று ஆஞ்சநேயர் படத்தினையே தூக்கி வைத்திருக்கின்றார்கள். பாரம்பரியமாக நம்மவர்கள் பூசித்து வந்த பழைய கோயில்கள் பல நித்தியக் கிரியைகள் நடை பெறுவதற்குக்கூட வழியில்லாமல் தவிக்க, கிராமங்கள் தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிது புதிதாக ஐயப்பன் ஆலயங்களும் ஆஞ்சநேயர் ஆலயங்களும் தோற்றம் பெற்றுவருகின்றன. பணம் தேடுவது ஒன்றையே நோக்கமாகக்கொண்டு செயற்படும் செயல்களை எல்லாம் காலத்தின் கோலம் என்று ஏற்றுவிட முடியாது. அதனையும் தாண்டிச் செய்யப்படும் மாற்றமாகவே கருத வேண்டியுள்ளது.

அஞ்ஞானிகளும் வேடதாரிகளும் நமது சமூகத்தில் அதிகரித்துவிட்டார்கள் என்ற உண்மையை நூலாசிரியர் எதுவித தயக்கமும் இன்றித் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். வேடதாரிகளை இனங்கண்டு வாழ்வதற்கு தமிழினம் முயற்சிக்க வேண்டும். தவறின் தமிழினத்தை இறைவனாலும் காப்பாற்ற முடியாது என்கிறார்.

இராவணன் சிவபக்தன், இசை மேதை; சிவனையே தனது இசையினால் உருகச் செய்த இசைஞானி. நாள்தோறும் சிவபூசை செய்பவன். இப்படிப்பட்ட ஓர் ஆற்றல்மிக்கவனை பெண்பித்தன், தர்மத்தை மதிக்காதவன் என்று இராமாயணம் சித்தரிப்பது தவறானது என்று நூலாசிரியர் கூறுகின்றார். கோயில்களில் இடம்பெறும் உயிர்ப்பலி மிகப்பெரிய பாவச் செயல் என்கிறார். சமயம் பார்த்துச் சமயம் மாற்றுபவர்களின் செயல்களைக் கண்டிக்கிறார். இவ்வாறு ஆரோக்கியமான பல சிந்தனைகளை நூலாசிரியர் தனது நூலில் முன்வைத்திருக் கின்றார். சைவமும் தமிழும் சேர்ந்தவன்தான் தமிழன். இந்த உண்மையை எவ்வளவு வேகமாகத் தமிழன் மறக்கிறானோ அவ்வளவு வேகமாகத் தமிழினம் மறைந்துவிடும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவந்தான் தமிழனுடைய சமயம் என்பதை அழுத்தம் திருத்தமாய்க் கூறும் ஆசிரியர், சைவசமயம் இந்துசமயத்தின் ஒரு பிரிவு என்பதையும் அதிலிருந்து சைவ சமயத்தை எக்காரணம் கொண்டும் பிரித்தெடுக்க எவரும் முயற்சிக்கப் படாது என்பதையும் ஆணித்தரமாய்க் கூறுகின்றார். தமிழனை இந்து என்றும் அழைக்கலாம்; அவ்வாறு அழைப்பதில் எந்தத் தவறுமில்லை என்கிறார். வேண்டுமாயின் தமிழனை "சைவ-இந்து" என்றுகூட அழைக்கலாம் என்று ஒரு புதிய சிந்தனையை முன்வைத்துள்ளார். இது எம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறது. இவையே இந்நூலின் சாராம்சமாகும்.

பொருளியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற பசுந்தீவு கோவிந்தன் தமிழ் இலக்கியத்துறையில் எழுத்தாளராகப் பணிபுரிந்து வருகின்றார். இன்று மொழி, சமயத்துறைகளிலும் ஆர்வம் கொண்டு எழுதுகின்றார். இவருடைய பணிகள் சிறப்படைய எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருட்துணை பூரணமாகக் கிடைக்க வேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

*அன்புடன்*

*சிவ. மகாலிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

மா. கணபதிப்பிள்ளை M.A., S.L.E.A.S., J.P.
இளைப்பாறிய பணிப்பாளர் மும்மொழி விருத்தி (தமிழ்)
பிரதி அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு
இந்துமாமன்ற கல்விக்குழுச் செயலாளர்

நாகநீள்நகர் என்ற நெடுந்தீவின் பிரசித்திபெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான பசுந்தீவு கோவிந்தன் அவர்கள் எழுதும் **"தமிழர் இந்துக்களா?"** என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் சந்தோசம் அடைகின்றேன்.

"காலத்தின் தேவையறிந்து மக்களை எவன் விழிப்புணர்வு ஊட்டுகின்றானோ அவன் அறிஞன்," ஆவான் என்பது சாக்கிரட்டீசின் கருத்தாகும். இன்று தமிழ்பேசும் மக்கள் உள்ள நாடுகளில் எல்லாம் எம்முன்னுள்ள பிரதான கேள்விகளில் ஒன்று, "தமிழர் இந்துக்களா? அல்லது சைவர்களா?" என்பதாகும். தமிழில் ஒரு வழக்கு உண்டு, பொதுப் பெயர்ச்சொல், சிறப்புப் பெயர்ச்சொல் என்பதாகும். கோயில் என்றால் அது சிதம்பரம். பூ என்றால் அது தாமரை. இவை பொதுப் பெயர்ச்சொற்கள். திருப்பெருந்துறைச் சிவன் கோயில், செவ்வந்திப் பூ என்றால் இவை சிறப்புப் பெயர்ச் சொற்கள். இதுபோன்று இந்து என்பது பொதுப் பெயர்ச்சொல், சைவன் என்பது சிறப்புப் பெயர்ச்சொல். இதை விளங்கிக் கொண்டால் போதுமானது.

ஆசிரியர் பசுந்தீவு கோவிந்தன் குறிப்பிடுவது போல் எம்மைக் கூறுபோட எத்தனையோ சக்திகள் முயன்ற வண்ணமே இருக்கின்றன. இலங்கையில் 1970களில் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் செயலாளராக இருந்த கலாநிதி. பிரேமதாச உடகம அவர்கள் இலங்கைத் தமிழர் கல்வியை எப்படி நாசம் செய்யலாம் என்று திட்டங்கள் தீட்டியவர். அதில் ஒன்று பல்கலைக் கழக அனுமதிக்கு தரப்படுத்தல்; மற்றையது அதுவரை இந்துசமயம் என்று படிப்பித்த சமய பாடத்தைச் சைவசமயம் என்று மாற்றவேண்டும் என்பது. அவரின் அடிப்படை உள்ளார்ந்த நோக்கம்: தமிழர்கள் இந்து சமயம் படித்தால் உலகத்தில் உள்ள மக்களின் கணிசமான அளவான நூறுகோடி மக்களின் அங்கமாகுவர். இவர்கள் சைவசமயத்தைப் படித்தால் மூன்றரைக்கோடி மக்களுடன் குறுகிநிற்பர் என்பதாக இருந்தது. இதை எமது தமிழ்ப் பேராசிரியர்களும் தமது அரைவேக்காட்டுத்தனத்துடன் ஆதரித்தனர். அதன் விளைவு சைவ சமயம் தற்போது **“சைவநெறி”** ஆகி இலங்கைத் தமிழரின் சமய பாடமாய் குறுகிப்போயுள்ளது. எமது பொருத்தமற்ற சிந்தனைகளால் நாமே நம்மை அழித்துக் கொண்டிருக்கின்றோம்.

1977ம், 1983ம் ஆண்டுகளில் இலங்கையில் நடை பெற்ற வன்செயல்களின் போதும் 2009ல் இடம்பெற்ற தமிழர் அழிப்பு யுத்தத்தின் போதும் இலங்கையில் பல இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டன. அப்போது அவைகள் சைவக் கோயில்கள் என்று பரப்புரை செய்யப்பட்டதால், இந்தியாவின் இந்துக்கள் கொதிப்படையவில்லை. இந்த விளைவைச் சரியாகத் திட்டம் தீட்டிச் செயற்பட்டவர் கலாநிதி பிரேமதாஸ உடகம. தனி மனிதனின் தீர்க்கதரிசனம் வெற்றிபெற்றது. அன்றாடம் காற்றுக்குப் பறக்கும் கடதாசிகளான எமக்கு அதன் தாக்கத்தை இன்னமும் புரிந்துகொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்த நாடுகள் மதிற்சுவர்களை உடைத்துவிட்டு ஒன்றுசேர நினைக்கின்றன. ஆனால் சேர்ந்திருக்கும் நாமோ தனியாக அடையாளம் காட்ட நினைக்கின்றோம். அவ்வாறு அடையாளம் காட்டினால், அதிக நன்மை எனின் அக்கறை இல்லை. இது அவ்வாறன்றி எமது அடையாளத்தையே அழிக்கும் திட்டம் என்பதை நாம் விளங்கிக்கொள்ளவில்லை என்பதை ஆதிசங்கரருடைய கருத்துடன் தொடர்புபடுத்தி, சனாதன தர்மம் என்ற சிந்தனையை ஆசிரியர் சிறப்பாகக் காட்டியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்நூலின் பத்துப் பாகங்களில் தனது கருத்துக்களை மிகப் பொருத்தமான உதாரணங்களுடன் எளிய மொழிநடையில் பசுந்தீவு கோவிந்தன் அவர்கள் தந்துள்ளார். பல்லினத் தன்மைக்குச் சிறந்த தீர்வு சமஸ்டி. அப்படியானால், பல்பிரிவு கொண்ட எமது மதத்தின் இணைப்புப் பாலமாய் அமைந்த சமய சமஸ்டியான இந்து என்ற சொல்லை ஏன் வெறுக்கின்றீர்கள்? என்று ஆசிரியர் கேட்கும் குரல் எம்மைச் சிந்திக்கவைக்கின்றது.

'இந்து' என்றால் கள்வன் என்று ஒரு பைத்தியக்காரன் சொன்னான். அதற்காக நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும்! இலங்கையிலும் 'தமிழன்' என்றால் கள்வன் என்று களனிப் பல்கலைக்கழகப் பேராசான் என்ற இனவாதி எழுதியுள்ளான். என் தாயைப் பழித்தால் மனம் பொங்கி எழ வேண்டாமா? பதிலாக தாயை மாற்றவேண்டும் என்று சொல்வோமா? அந்நிலைதான் இங்கும். உண்மையில் இந்துக்கள் கள்வர்கள் தான், "உள்ளங்கவர் கள்வர்கள்" ஆவர். யாரின் மனதையும் நோகப் பேசாதவர்கள். அதனால் அல்லவா எத்தனையோ அன்னியரின் ஆக்கிரமிப்புக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ மொழிகள், எத்தனையோ மதங்கள், எத்தனையோ பண்பாட்டுக் கோலங்கள் எம்முள் நுழைந்துள்ள போதும், எல்லாவற்றையும் அரவணைத்து எம்மோடு வைத்திருக்கின்றோம். அதனால் நாம் உள்ளம் கவர் கள்வர்கள் அல்லவா?

"பருமரத்தைச் சுற்றிய பல்லிக்குப் பயமில்லை," என்பார் பண்டிதமணி. இந்து என்ற பருமரத்தைச் சுற்றியிருக்கும் வரை இந்து மதத்தின் பிரிவினருக்குப் பயமில்லை. தனித்தனியாகப் பிரிந்தால் அடையாளம் தெரியாமல் அழிந்து போவோம் என்பது உறுதி.

சாமுக்கியரின் தெய்வமாகிய விநாயகரை நாம் எமது முதற்தெய்வமாக ஏற்றுக்கொள்ளவில்லையா? மரங்களையும் ஆவிகளையும் பாம்புகளையும் வழிபட்ட எமது வழிபாட்டில் பல உருவங்கள் வந்து கலந்துகொண்டதே! மாற்றம் நிரந்தரமானது. நாம் மட்டுந்தான் மாறுகின்றோமா? இன்று கத்தோலிக்க கோயில்களில் எல்லாம் பொங்கல் நடக்கின்றதே! ஜெருசலேத்தில் யேசுநாதரும் மேரிமாதாவும் பொங்கிப் படைத்தார்களா? "சமயம் என்பது உணர்வு சார்ந்தது," என்று குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் ஆசிரியரின் ஆளுமையை வெளிப்படுத்துகின்றன.

"ஊர் இரண்டுபட்டால் கூத்தாட்டிக்குக் கொண்டாட்டம்," என்று தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டு, "வாருங்கள் வருமுன் காப்போம், சாத்தான் எம்முடன்தான் இருக்கிறான். எம்மை அழிக்கும் உட்பகைவர்களை இனங்கண்டு சமூகத் துரோகிகளாக அடையாளப்படுத்துவோம்," என்ற கருத்தை வெளியிட்டுள்ள ஆசிரியரின் திறமை கண்டு பொங்கும் உள்ளம் வியக்கவைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் எமக்காக விரிந்துகிடக்கும்போது, இந்துவாக தலைநிமிர்ந்து வாழாமல், ஏன் கூனிக்குறுகி சைவனாக மூலையில் முடங்கிக்கிடக்க முயலுகின்றாய்? தூய சைவர்களை எங்களால் உருவாக்க முடிந்ததா? பிறிதொன்றின் உடலின் புண்ணை உண்ணும் நீ உன் புண்ணை உண்பாயா?

"உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றன்

புண்ணது உணர்வார்ப் பெறின்,"

என்ற வள்ளுவர் வாக்கை உன்னால் நடை முறைப்படுத்த முடிகின்றதா? பஞ்சமா பாதகங்களைத் தடுக்க முடிந்ததா? எதையும் செய்யமுடியாத எம்மால் ஆகக்குறைந்த பட்சம் விவேகானந்தர் போன்று எம் மதத்தை உலகெலாம் கொண்டு போக முடிந்ததா? எமது திருவாசகத்தின் பெருமையை உலகுக்குக் கொண்டு சென்றவர் தமிழ்த்தூது கிறிஸ்தவ பாதிரியார் தனிநாயகம் அடிகள் அல்லவா? எதையுமே செய்யாமல் "சைவன்" என்று சொல்லிக் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டு இருக்காது, உங்கள் பிற்காலச் சந்ததிக்கு நல்லனவற்றை விட்டுச் செல்லுங்கள் என்று பசுந்தீவு கோவிந்தன் விடுத்திருக்கும் அறைகூவல் காலத்தின் தேவைக்குப் பொருத்தமானது.

நண்பன் பசுந்தீவு கோவிந்தன் நெடுந்தீவின் மேற்கே இராமநாதன் சேதுப்பிள்ளை தம்பதிகளின் நான்காவது பிள்ளை ஆவார். 1945 செப்ரெம்பர் 2ல் தோற்றம் பெற்று இளமைக் கல்வியை தனது கிராமமாகிய வெட்டாக்காட்டிலுள்ள பாரதி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியைப் பல்துறைப் புலமையாளர்களை ஆக்கித்தந்த நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் கற்று, க.பொ.த. (உயர்தர) கல்வியை பார்புகழ் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் கற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி, அங்கு பொருளியலை சிறப்புப் பாடமாய்க் கற்று 2ம் தர சிறப்புச் சித்தி பெற்றதன் மூலம் B.A.(Hons.) Econ. எனும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இளமையிலேயே சிந்திக்கும் ஆற்றலும் கற்பனா சக்தியும் கொண்டிருந்த இவர், தான்காணும் காட்சிகள், கற்கும் படிப்புக்கள், பெறும் அனுபவங்களை மறக்காது மனதில் வைத்திருப்பவர் என்பதை அவரோடு உரையாடும் போது நீங்கள் அவதானிக்கலாம். சிறந்த பெறுபேற்றுடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறிய இவர் யாழ்/ பல்தொழில்நுட்பக் கல்லூரியில் போதனா சிரியராகக் கடமையாற்றினார். எமது நாட்டின் கோர யுத்தங்களும் இனக்கெடுபிடிகளும், பொருளாதார நெருக் கடிகளும் பெருந் தாக்கத்தைத் தந்தமையால், தனது குடும்பத்துடன் கனடாவில் குடியேறினார். அங்கு கொம்பியூட்டர் கல்வியைப் பெற்று கனடியன் இம்பீரியல் வர்த்தக வங்கியில் (Canadian Imperial Bank of commerce) கணக்கு உத்தியோகத்தராகக் கடமையாற்றி தனது 65வது வயது நிறைவில் ஓய்வுபெற்றார். இவருடைய நான்கு பிள்ளைகளும் கனடாவில் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து சிறப்புடன் வாழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிறர் ஈனநிலை கண்டு பொங்கும் இயல்பு படைத்த பசுந்தீவு கோவிந்தன் அவர்கள் தானுண்டு தன் தொழிலுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழாமல், பயனுள்ள பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவையாவன:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வாடாத றோசா (நாவற் தொகுப்பு)
2. தீர்ப்பு (நாவற் தொகுப்பு)
3. கூதிர் காலம் (பிரயாணக் கதை - நெடுந்தீவு)
4. படுக்கையின் கீழ் பாம்பு (நாவற் தொகுப்பு)
5. வாடாத றோசா - இலங்கை (நாவற் தொகுப்பு)
6. ஏன் நாங்கள் சமயம் மாறக்கூடாது? என்பனவாகும்.

"கூதிர் காலம்" என்ற நூல் ஒரு பிரயாணக் கட்டுரையாகக் காணப்படுவதுடன், 1964ம் ஆண்டு வரையான நெடுந்தீவு பற்றிய ஒரு வரலாற்று நூலாகவும் காணப்படுகின்றது. தற்புகழ்ச்சி அற்று உள்ளதை உள்ளபடி உரைக்கும் வரலாற்று அணுகுமுறையை அந்நூலில் காணலாம்.

"நாங்கள் ஏன் சமயம் மாறக்கூடாது?" என்ற நூல் சிறந்த பல விடயங்களை எமக்குத் தருகின்றது. 1893ல் சிக்காக்கோவில் விவேகானந்தர் பேசிமுடித்ததும் ஒரு கன்னியாஸ்திரி வந்து அவரிடம் "உங்கள் மதத்திற்கு எவ்வாறு மாறலாம்?" என்று கேட்டார். சுவாமி விவேகானந்தர், "நீங்கள் உண்மையான கத்தோலிக்கரா?" என்று கேட்டார். "ஆம்," என்றாள் கன்னியாஸ்திரி. "அப்படியானால் நீங்கள் உண்மையான இந்து," என்றார் விவேகானந்தர். "நான் மதம் மாற்றுவதற்காக இந்தியாவில் இருந்து அமெரிக்காவிற்கு வரவில்லை," என்றும் சொன்னார். அப்படிப்பட்ட பெரியார் பிறந்த மதத்தின் சொந்தக்காரர் மதம் மாறுவதா? என்ற ஆதங்கத்தை இந்நூலில் வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நான்கு நூல்களும் நாவற் தொகுப்புகளாகும். சிறந்த மொழிநடை, காட்சிப்படைப்புக் கொண்டவை. புத்தகத்தை எடுத்தால் வாசித்து முடிக்காது வைக்க முடியாத கதையோட்டம் "சபாஸ்" போட வைக்கின்றது. அவரின் இந்த முயற்சியிலெல்லாம் இவருக்குத் துணையாய் நிற்கும் இவரது வாழ்க்கைத் துணைவி திருமதி. சரோஜினிதேவி அவர்களின் பங்களிப்பு குறைத்து மதிக்கமுடியாதது.

சமூகப் பற்றுடன் பசுந்தீவு கோவிந்தன் வெளிவிடும் ஏழாவது புத்தகமே **"தமிழர் இந்துக்களா?"** என்பதாகும். பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்றில்லாமல், தான் வாழும் சமூகத்திற்கு நல்லது செய்யவேண்டும் என்ற அவரது உள்ளம் பாராட்டத்தக்கது. வள்ளுவர் பெருமானின்,

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப்படும்" எனும் வாக்கிற்கு இணங்க இவரது நூல்கள், இவரது வாரிசுகள் எல்லாமே வாழும் காலத்திலேயே சிறப்பாகத் துலங்குகின்றன; காலங்கடந்தும் பாராட்டப்படும்.

இவரின் பேனா தொடரவும், உடலும் உள்ளமும் சிறந்திருக்கவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

*அன்புடன்* | *ஜனவரி 10, 2015*

*மா. கணபதிப்பிள்ளை* | *இலங்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நூலாசிரியரின் உரை

உலகமக்கள் இன்புற்று வாழவேண்டும், எனது நாட்டு மக்கள் இன்புற்று வாழவேண்டும், எனது ஊர் மக்கள் இன்புற்று வாழவேண்டும், எனது கிராம மக்கள் இன்புற்று வாழவேண்டும், எனது குடும்பம் இன்புற்று வாழவேண்டும், நான் இன்புற்று வாழவேண்டும் என்று செல்லும் எனது சிந்தனையின் வெளிப்பாட்டின் விளைவாக, 2003ம் ஆண்டி லிருந்து எழுதுவதற்கு ஆரம்பித்தேன். "வாடாத ரோசா" எனும் நாவலுடன எழுத்தை ஆரம்பித்த நான் இதுவரை பத்துக்கு மேற்பட்ட நாவல்களை எழுதிப் பத்திரிகையில் பிரசுரித்ததோடு நின்றுவிடாமல், அவற்றை ஐந்து நூல்கள் வடிவில் வெளியிட்டேன். எனது ஆறாவது நூல் "நாங்கள் ஏன் சமயம் மாறக்கூடாது?" என்பதாகும். ஏழாவது நூலாகிய "தமிழர் இந்துக்களா?" எனும் இந்நூலை நான் எழுதுவதற்கு என்னைத் தூண்டிய காரணி: நான் எனது இனத்தின் மீது கொண்டிருக்கும் பற்றும் அதீத அக்கறையுமே ஆகும். எனது இனத்தை, எனது மொழியை, எனது சமயத்தை, எனது கலை கலாசாரம் பண்பாட்டை, எனது ஊரை நான் எப்பொழுதும் மனதார நேசிக்கிறேன். அவற்றிற்குப் பங்கம் வரும் போதெல்லாம், அவற்றை வெறுமனே பார்த்துக்கொண்டு என்னால் சும்மாவிருக்க முடிவதில்லை. அந்த வகையில் எமது சமயமாகிய இந்து சமயத்திற்கு ஏற்படவிருக்கும் பங்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு நான் மேற்கொள்ளும் என்னாலியன்ற முயற்சியே இந்நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் மூலம் தமிழர் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கி, ஏற்பட விருக்கும் பங்கத்திலிருந்து, இந்து சமயத்தையும் இந்து சமய வாழ்க்கை நெறியையும் காப்பாற்றும் முகமாக மக்கள் எழுச்சியை ஏற்படுத்துவதே எனது நோக்கமாகும். "தனிமரம் தோப்பாகாது," என்பதைப் போல நான் மட்டும் அக்கறைப்பட்டு எதுவும் ஆகப்போவதில்லை. உறங்கும் சனத்திரள் விழிப்படைந்து செயற்பட வேண்டும். அதன் மூலம் இந்து சமயமும், இந்து சமய வாழ்க்கை நெறியும் காப்பாற்றப்பட்டுத் தொடர்ந்து பேணப்பட வேண்டும். அப்பொழுதுதான் எனது இலட்சியம் வெற்றிபெறும். அதீத இனப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்றுடைய அனைவரும் இந்நூலிலுள்ள கருத்துக்களை மக்கள் அனைவரிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். அதன் மூலந்தான் நாம் எமது முயற்சியில் வெற்றிபெற முடியும். பொது மக்கள் அனைவரினதும் பூரண ஆதரவு, ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடன் இந்நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். என்னால் தனித்து எதுவும் செய்யமுடியாது. உங்களுடைய ஆதரவும் ஒத்துழைப்புமே எனது முயற்சியை வெற்றிபெறச் செய்யும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. இது எமது இனத்துக்கான முயற்சி என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட முன்வரும்படி அன்புடன் வேண்டுகின்றேன். மக்களாகிய உங்களுடைய ஆதரவும், ஒத்துழைப்பும் இருப்பின், எமது வெற்றியை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தமுடியாது. இந்நூலிலுள்ள கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்கள் எழுதுவதிலே அதிக காலத்தைச் செலவிட்டுக் கொண்டு இருந்த நான் சமய விடயத்தில் எழுதுவதற்கு, என்னைத் தூண்டியது எமது சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் விரும்பத்தகாத நிகழ்வுகளே ஆகும். சிலபல சுயநலவாதிகளுடையதும் சந்தர்ப்பவாதிகளுடையதும் செயற்பாடுகள், நாம் உரிய வேளையில் விழிப்படையத் தவறின், எமது இனத்தையே அடியோடு அழித்துவிடக்கூடும் என்பதை நாம் எப்பொழுதும் மனதில் இருத்திச் செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது இனத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் உத்தரவாதம் உண்டு. இது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த உண்மையை உணர்ந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். காலத்தின் தேவையறிந்து, தேவையின் முக்கியம் அறிந்து, முக்கியத்துவத்தின் தன்மையறிந்து செயற்படாத இனம் இப்பூவுலகில் சிறப்புடன் நீடித்து வாழமுடியாது என்பது வரலாறு சொல்லும் பாடமாகும்.

சமயம் என்பது ஆன்மிகத்துடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. அதையும் தாண்டி அது ஒரு இனத்துக்குரிய சீரிய வாழ்க்கை நெறியையும் வழங்கவல்லது. அதுமட்டு மல்ல ஒரு இனத்துக்குரிய கலை, கலாசாரம், பண்பாடு என்பனவும் சமயம் என்ற தளத்தின் மீதுதான் கட்டப்படுகின்றன. இவற்றையெல்லாம் உள்ளடக்கிய ஒரு இனத்தின் அடையாளமே அதன் சமயத்தை அடிப்படையாகக் கொண்டே உருப் பெறுகின்றது. அந்த வகையில் சமயம் அந்தந்த இனத்துக்கு மிகமிக அவசியமானது, பாதுகாக்கப்பட வேண்டியதும், வளர்க்கப்பட வேண்டியதும் ஆகும். கடவுள் நம்பிக்கை இல்லாத நாஸ்திகனும் அவனது இனத்துக்குரிய சமயம் அளித்த வாழ்க்கை நெறியிற்தான் வாழ்ந்து வருகிறான். எனவே சமயம் செல்வாக்குச் செலுத்தாத மனிதன் இவ்வுலகில் இருக்கவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனத்துக்கென்று ஓர் அடையாளத்தை அளித்தது இந்து சமயம். அதன் ஓர் அங்கந்தான் சைவசமயம். இந்து சமயம் ஒரு விருட்சம் என்றால், சைவசமயம் அதன் ஒரு கிளையாகும். கிளை நீடித்து உயிர்வாழ வேண்டுமாயின், அது செழித்து வளர வேண்டுமாயின் விருட்சத்தைக் காப்பற்ற வேண்டும், அதைப்பேணி வளர்க்க வேண்டும். விருட்சத்தை மறந்து அதன் கிளையொன்றை வளர்க்க முயற்சிப்பது எவ்வளவு முட்டாட்தனம் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றில்லை. எவருடையதும் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு ஏமாந்துபோகாமல் இருப்பது தமிழினத்தின் கடமையும் உரிமையும் ஆகும்.

இந்து சமயம் எனும் பெருவிருட்சத்தை வேரோடு வெட்டி வீழ்த்த பல சக்திகள் முயன்றுகொண்டிருக்கின்றன. திட்டம் தீட்டிச் செயற்படுகின்றன. சந்தர்ப்பத்தைச் சாதக மாய்ப் பயன்படுத்த விடாமுயற்சி செய்கின்றன. இவற்றை யெல்லாம் அறிந்து அவற்றிலிருந்து எமது சமயத்தைக் காப்பாற்றத் தவறுவோமானால், எமது அடையாளங்கள் மட்டுமல்ல எமது இனமே மறைவது உறுதியாகும்.

ஒரு நூலை உருவாக்கி வெளியிடுவதென்பது ஆசிரியரால் மட்டும் தனித்துச் செய்யக்கூடிய காரியமல்ல. அதிலும் சமய விடயத்தைப்பற்றி எழுதவேண்டுமாயின் பலரதும் ஆலோசனைகள் அறிவுரைகள் பெறப்பட்டே ஆகவேண்டும். நான் ஒரு ஞானியோ அல்லது அறிஞனோ அல்ல, நான் ஒரு சாதாரண மனிதன் என்ற வகையில் இந்நூலை ஆக்குவதற்குப் பலருடைய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெறவேண்டி இருந்தது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் எனது படைப்பை முதலில் செவ்வை பார்த்து ஆலோசனையும் அறிவுரையும் வழங்கிய எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்களுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலை எழுதுவதற்குரிய மனவலிமையையும் ஊக்கத்தையும் அளிக்கும் வகையில் பல ஆலோசனைகளையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வழங்கிய ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் செயலாளர் திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம் அவர்களுக்கு எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்," எனும் பழமொழிக்கிணங்க, இந்நூலின் அகத்திலிருக்கும் உட் பொருளை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்காட்டுமாப்போல் இதன் முகவுரை அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. இவ்வாறான ஒரு சிறந்த முகவுரையை அளித்திருக்கும் ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள் ஒரு சிறந்த அறிவாளி, சமயப்பற்றுக் கொண்டவர், சமூகசேவையாளர் ஆவார். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இவருக்கு ஓய்வு நேரம் கிடைப்ப தென்பது சிரமமான விடயம். அவ்வாறான சிரமத்தின் மத்தியிலும் எனது வேண்டுகோளை ஏற்று சிறந்ததோர் முகவுரையை வழங்கி இந்நூலைச் சிறப்பித்துள்ளமைக்காக எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, என்றென்றும் நன்றியுணர்வுடன் ஞாபகமூட்டுவேன் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூலுக்கு அணிகலமாய் அமைவது அது கொண்டிருக்கும் அணிந்துரையாகும். இப்பெரும் காரியத்தைச் செய்து முடிப்பதில் முழுப்பங்கை எடுத்து சிறந்ததோர் அணிந்துரையை வழங்கி இந்நூலைத் துலங்கச் செய்துள்ள நண்பன், றோயல் கல்லூரி பிரதி அதிபர் திரு. மா. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நன்றி சொல்வதுடன் மட்டும் நின்றுவிடாது, இப்பெரும் உதவிக்காக என்றென்றும் நன்றியுணர்வுடன் என்னுள் ஞாபகமூட்டுவேன் என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனது படைப்பைச் சிறந்ததோர் நூலாக்குவதற்கு அச்சமைப்பு, அச்சுப்பதிப்பு செய்துதவிய ஸ்ரீ சுப்பிரமணிய அச்சக உரிமையாளர் திரு. தி. ஜெயராஜா அவர்களுக்கும் அவரது துணைவியாருக்கும், அச்சகத்து ஊழியர்களுக்கும் சிரமம் பாராத அவர்களுடைய சேவைக்காக எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், தமிழுக்காகவும் சைவ சமயத்துக்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துச் சேவையாற்றியவரும் கடனா இந்து சமயப் பேரவையின் ஸ்தாபகரும் கனடா ஆத்மஜோதி இல்லம் அமையக் காரணமாய் இருந்தவருமாகிய ஆன்மிக ஒளிச்சுடர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களுக்கு அன்னாரின் ஞாபகார்த்தமாக இந்நூலை அவரின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பணம் செய்து வணங்கி நிற்கின்றேன்

வணக்கம்!

*பூக்கழி வீதி,* *அன்புடன்,*
*வெட்டாகாடு, நெடுந்தீவு மேற்கு,* *பசுந்தீவு கோவிந்தன்*
*இலங்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

# தமிழர் இந்துக்களா?

## பகுதி - 1

உலகத்தில் பலநூறு இனங்கள் தோன்றி நாகரிகமடைந்த வரலாற்றை நோக்கும் பொழுது, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகரிக வளர்ச்சி பெற்றுச் சிறப்புற வாழ்ந்த இனங்களுள் தமிழ் இனமும் ஒன்றாகும் என வரலாறு சான்று பகர்கின்றது. அந்த வகையில் அதற்குத் தனிச் சிறப்பும் புகழும் உண்டு. அதன் காரணமாக இந்த இனம்,

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த இனம்" என்ற புகழாரத்தைப் பெற்றுள்ளது.

மனித நாகரிக வளர்ச்சியில் சமயத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது என்றால், அதை யாரும் மறுப்பதற்கில்லை. காரணம், மனிதனை வாழ்வாங்கு வாழ வைப்பதில் சமயம் வகிக்கும் பங்கு அந்தளவிற்கு முக்கியம் வாய்ந்த தாகும். இயற்கையோடு இயற்கையாக காட்டுப் பிராணியாய் வாழ்ந்த மனிதனை, அன்பு, கருணை, சத்தியம், தருமம் ஆகிய மேம்பட்ட மனித குணங்களை அவனுடைய வாழ்வில் புகுத்தி அவனைப் பண்பட்ட மனிதனாக வாழவைத்தது சமயம் ஆகும். இன்று உலகில் காணப்படும் பல்வேறு சமயங்களின் கொள்கைகள் கோட்பாடுகளில் வேற்றுமைகள் இருப்பினும் எல்லாச் சமயங்களுடையதும் அடிப்படை இலக்கு மனிதனைப் பண்படுத்துவதே ஆகும்.

தமிழினம் முந்தி முந்தி நாகரிகம் அடைந்த இனம் என்ற வகையில், அதற்கென்று ஒரு சமயம் பண்டு தொட்டு இருந்தது மட்டுமல்லாது, இன்றுவரை அது நீடித்து நிலைத்து நிற்கின்றது. அதுதான் சைவசமயம் ஆகும். ஆரியரின் வருகை தமிழினத்தின் வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியதை வரலாறு தெரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அறிவர். அதன் ஓர் அங்கமாகத் தமிழினத்தின் சமயமாகிய சைவசமயத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்த மாற்றங்கள் இன்றுவரை நீடிக்கத்தான் செய்கின்றன.

பரதக் கண்டம் ஆங்கிலேடைய ஆட்சிக்கு உட்பட்டு, ஒரு நாடாக உருப்பெற்ற பொழுது, இந்தியா என்ற பெயரைப் பெற்றது என்பது எல்லோரும் அறிந்த விடயம். இந்தியா என்ற பெயர் சூட்டப்பட்டதற்கான காரணம் இந்து சமயத்தை அடிப்படையாகக் கொண்ட "ஒரு பொதுவான வாழ்க்கை நெறி" இந்த உபகண்டம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டதே ஆகும். இதை அவதானித்த ஆங்கிலேயர்கள் இந்தியா என்ற பெயரைச் சூட்டிவிட்டார்கள். இதுவே இந்தியாவை விட்டு ஆங்கிலேயரை வெளியேற்றிய மாபெரும் சக்தியாக எதிர்காலத்தில் உருவெடுத்தது என்பதும் வரலாறு சொல்லும் உண்மை ஆகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழினம் மற்றைய இனங்களோடு சேர்ந்து வாழவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படவே தமிழினத்தின் தனித்தன்மை மருவிச் சென்றது. இது தமிழினத்தின் சமயமாகிய சைவசமயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. இதன் விளைவாக ஆரியரின் வழிபாட்டு முறைகள் மட்டுமல்ல, இந்து என்ற பெயரும் தமிழினத்துள் ஊடுரவிக்கொண்டது. கடவுள் பற்றிய புரிந்துணர்வு பிற்சந்ததியினரிடம் பரந்துபட்டதாயும் எல்லோரையும் அரவணைத்துப் போவதாயும் இருந்த படியினால், "இந்து" என்ற சொல்லின் ஊடுருவலைப் பிற்சந்ததியினர் பெரிதுபடுத்திக் கொள்ள வில்லை. அத்தோடு ஆட்சியாளர் இந்து என்ற சொல்லையே தமது நிர்வாக தேவைக்குப் பயன்படுத்தினர். இதனால் இந்து என்ற பதம் இந்திய மக்கள் மத்தியில் முக்கிய இடம் பிடிக்க, அது தமிழரையும் பதம் பார்த்தது. இதன் விளைவு காலவோட்டத்தில் சைவசமயம் என்ற பெயரைப் பின்னுக்குத் தள்ளி இந்து சமயம் என்ற பெயர் முன்னோக்கி நகர வழிசமைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பிற்பாடு "சைவம்" என்ற சொல் தமிழ்ப் பிற்சந்ததியினர்க்கு, விசேடமாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ப் பிற்சந்ததியினர்க்கு, அறிமுகமில்லாத பெயராகவே இருக்கப்போகின்றது. இதை காலவோட்டத்தின் மாற்ற மாயே கருதவேண்டியுள்ளது. காலவோட்டத்தின் மாற்றத்தைத் தடுத்து நிறுத்துவதென்பது பெரிய கஸ்டமான காரியம், அந்த மாற்றத்தைத் தடுத்து நிறுத்தத்தான் வேண்டுமென்ற அவசியமும் இல்லை என்பதே பரவலான எண்ணமாகும். மாற்றமென்பது இயற்கையின் நியதி.

***இவ்வாறான இன்றைய சூழ்நிலையில்,***

"தமிழர்கள் இந்துக்கள் அல்லர், அவர்கள் சைவர்கள். ஆகையால் தமிழர்கள் தம்மை இந்துக்கள் என்று அழைக்கப்படாது. அதேவேளையில் மற்றையவர்கள் தம்மை இந்துக்கள் என்று அழைப் பதை ஏற்றுக்கொள்ளவும் கூடாது," என்று சில குரல்கள் அண்மைக் காலத்தில் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. **"தமிழர்களுடைய சமயம் சைவசமயம், சைவசமயத்தின் முழுமுதற்கடவுள் சிவன், இந்து என்ற பெயருக்கும் தமிழர்களுக்கும் சம்பந்தம் இல்லை, இந்து என்றால் "கள்வர்" என்பது அர்த்தமாகும். எனவே இந்தச் சொல்லைப் பயன்படுத்தித் தமிழர் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளக் கூடாது"** என்று அவர்கள் கூறுகின்றார்கள். **"சைவசமயத்தின் முழுமுதற்கடவுள் சிவன். சிவன் எப்பொழுதும் சக்தியுடன் சேர்ந்தே இருக்கிறார். சிவனும் சக்தியும் பிரிக்கமுடியாதவை, பிரிக்கக் கூடாதவை. எனவே சக்தியாகக் கருதப்படும் அம்மனைச் சிவனிட மிருந்து பிரித்து அம்மனுக்குத் தனிக்கோயில் கட்டப்படாது என்பதும் அம்மன் கோயில்களெல்லாம் சிவன் கோயில்களாக மாற்றப்பட வேண்டும்"**, என்பதும் அவர்களது வாதமாகும். **"சிவனை மூலமூர்த்தி யாகக் கொண்டிராத மற்றைய கோயில்களில் சிவனை பரிவார மூர்த்தியாக வைக்கப்படாது"**, என்பதும் அவர்களது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடைய வாதத்தைச் சிறிது ஆழமாகப் பார்த்தால், தமிழர்கள் சைவசமயிகளாகையால் தமிழர்களுடைய கோயில்களெல்லாம் சிவன் கோயில்களாகவே இருக்க வேண்டும் என்பதும் சிவன் கோயிலல்லாத மற்றைய கோயில்களெல்லாம் சிவன் கோயில்களாக மாற்றப்பட வேண்டும் என்பதும் இவர்களின் எதிர்பார்க்கையாகத் தொனிக்கின்றது. இவ்வாறான மாற்றம் ஏற்பட்டாற்தான் தமிழ் இனம் இழந்த தமது உரிமைகளைத் திரும்பப் பெற்றுச் சிறப்புற வாழமுடியும் என்றும் சிவ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காது விட்டதன் விளைவுதான் தற்போது தமிழ் இனத்துக்கு ஏற்பட்டிருக்கும் விழ்ச்சியாகும் என்றும் இவர்கள் நினைக்கிறார்கள்.

இந்து சமயத்தையும் சைவசமயத்தையும் பற்றி நன்கு அறிந்து வைத்திருப்பவர்களுக்கு இவர்களுடைய வாதம் எவ்வித கலக்கத்தையோ குழப்பத்தையோ ஏற்படுத்தப் போவதில்லை. எனினும் இந்து சமயம், சைவசமயம் பற்றிய அறிவு குறைவாக உள்ளவர்களது மத்தியில் இவர்களது வாதம் சிறு குழப்பத்தை ஏற்படுத்தலாம். அவ்வாறான குழப்பம் ஏற்படக்கூடியவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்துவதற்காகவே இக்கட்டுரையை எழுதுகிறேன்.

தமிழர்கள் சைவசமயிகள் என்பதும், சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன் என்பதும் மாற்றுக் கருத்திற்கு உட்படாத உண்மைகள். நாயன்மார் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் சிவன் கோயில்கள் தமிழர் மத்தியில் அதிக எண்ணிக்கையில் இருந்தன என்பதும் சிவன் வழிபாடு முன்னணி வகித்தது என்பதும் மறுக்கமுடியாத உண்மை ஆகும். எனினும் அந்தக் காலம் முழுவதும் தமிழ் இனம் தொடர்ந்து எழுச்சி பெற்றுக் கொண்டே வந்தது என்று சொல்வதற்கில்லை. எழுச்சியும் வீழ்ச்சியும் மாறிமாறி ஏற்பட்டன என்பதே வரலாறு சொல்லும் பாடமாகும். எனவே தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் சமயத்தை மட்டும் காரணமாய்க் காட்டுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வில் மாற்றம் என்பது தவிர்க்கமுடியாத ஒன்று. மரபும் மாற்றமும் இணைய வேண்டியதும் ஒன்றையொன்று நெறிப் படுத்தி வளப்படுத்த வேண்டியதும் மனிதசமுதாயத்தின் இருப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதது. அது காலத்தின் கட்டாய மாகும். பழைய செயற்பாடுகளும் சிந்தனைகளும் அனுபவங்களும் மனிதனுக்கு அலுப்புத் தட்டுகின்றன. இதனால் சோர்வு, பிடிப்பின்மை ஏற்படுகின்றன. மனிதன் மாற்றத்தை விரும்பும் சுபாவத்தைக் கொண் டவன். இது மனித இயல்பாகும். தனது வீட்டிலுள்ள பொருட்களையே இடைக்கிடை மாற்றி மாற்றி வைப்பவன் மனிதன். மனிதன் எப்பொழுதும் சுறுசுறுப்பாக, மகிழ்ச்சியாக, செயற்திறனோடு இருப் பதற்கு மாற்றம் அவசியமாகின்றது. மனித சமுதாயத்தின் வளர்ச்சி, முன்னேற்றம், அபிவிருத்தி என்பனவெல்லாம் மாற்றத்தை அடிப்படை யாய்க் கொண்டவைதான். புத்துணர்ச்சியையும் ஆனந்தத்தையும் புதுமை அளிக்கின்றது. மனித வாழ்வில் பங்கு வகிக்கும் எல்லாவற்றிலும் மாற்றம் நிகழவேண்டியது அவசியம். **“மாற்றமுள்ளது உயிர் வாழுகின்றது. மாற்றமற்றது மறைந்து போகின்றது”** என்பது தான் உலக வரலாறு புகட்டும் பாடமாகும். எனவே பழையன கழிதலையும் புதியன புகுதலையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இது சமயத்திற்கும் பொருந்தும், காரணம் சமயம் மனித வாழ்வில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. எனவே சிவ வழிபாட்டுக்குத்தான் எப்பொழுதும் தமிழர்கள் முக்கியத்துவம் அளித்து வாழ வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. பிற்காலத்தில் சிவ வழிபாட்டின் முக்கியத்துவம் குறைந்து மற்றைய மூர்த்தங்களான விநாயகர், முருகன், அம்மன், ஐயப்பன், பெருமாள் வழிபாடுகள் அந்தக் குறையை ஈடு செய்யுமாப்போல் அதிகரித்து வந்துள்ளமை காலத்தின் கட்டாயம் என்றே கொள்ள வேண்டும். இதனால் சமய வாழ்க்கை கெட்டுப்போய்விட்டது என்றோ அல்லது தமிழ்ச் சமூகம் வீழ்ச்சியடைந்து விட்டதென்றோ கொள்ளமுடியாது. தமிழ் இனத்தின் அரசியல், பொருளாதார, சமூக சம்பந்தமான வீழ்ச்சிக்கு இந்த வழிபாட்டு மாற்றத்தைக் காரணமாய்க் கொள்வது எந்தவகையிலும் பொருத்தமற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமயமும் அதனோடு பின்னிப்பிணைந்த எமது கலை, கலாசாரம், பண்பாடு என்பன தொடர்ந்து உயிர் வாழவேண்டுமாயின் காலவோட்டத்துக்கு ஏற்ப, சூழலுக்கேற்ப மாறியே ஆகவேண்டும். இன்று வடஅமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் குடிபெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்கள் தமது சமயம், பண்பாடு என்பன நீடிப்பதற்கும் மற்றைய சமயங்கள் பண்பாடுகளினால் விழுங்கப்படாதிருப்பதற்கும் வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தியே ஆகவேண்டும். அதுவே சரியான செயற்பாடாக அமையும்.

அண்மைக் காலமாகச் சக்தி வழிபாடு அதிகரித்து வருவது கண்கூடு. மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி, சமயபுரம் மாரியம்மன், மதுரை மீனாட்சி அம்மன் போன்ற தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்க ளினதும், நயினை நாகபூஷணி அம்மன், தெல்லிப்பளை துர்க்கை அம்மன், வற்றாப்பளை கண்ணகி அம்மன் போன்ற ஈழத்திலுள்ள ஆலயங்களினதும், துர்க்கேஸ்வரம் துர்க்கை அம்மன் போன்ற கனடா விலுள்ள ஆலயத்தினதும் வளர்ச்சி, அவற்றிற்குச் செல்லும் பக்தர் குழாமின் அதிகரிப்பு என்பன இந்த உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன. சைவசமயத்தைச் சேர்ந்த தமிழர் மத்தியில் சிவவழிபாடு தான் அதிகரித்துச் செல்ல வேண்டும், அம்மன் கோயில்களெல்லாம் சிவன் கோயில்களாக மாற்றப்பட வேண்டும் என்று கூறுபவர்களுக்கு இது பெரும் நெருடலாய் இருக்கலாம்.

தற்போதைய மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டில் "திருவால வாய்ச் சிவன்" என்றே அழைக்கப்பட்டது. இங்கே குடி கொண்டிருக்கும் சிவன் சுந்தரேஸ்வரர் (சோமசுந்தரப்பெருமான்) என்று அழைக்கப்படுகின்றார். இது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்றாகும். பின்வரும் தேவார அடிகள் இந்த உண்மைக்குச் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை

..............................

அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த

ஆலவாயாவது மிதுவே,"

அத்துடன் திருநீற்றுப் பதிகத்தில் வரும் தேவாரங்கள் இத்தலத்திலேயே பாடப்பெற்றன என்பதற்குப் பின்வரும் வரிகள் சான்றாகும்.

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு

.......................

செந்துவர் வாயுமை பங்கன்

திருவாலவாயான் திருநீறே"

திருவாலவாய்ச் சிவன் ஆலயம் எப்படி மீனாட்சி அம்மன் ஆலயமாக மாற்றம் பெற்றது? இதன் வளர்ச்சியும் இங்கு செல்லும் பக்தர் குழாமின் அளவு தொடர்ந்து அதிகரித்துச் செல்வதும் கண்கூடு. இது விவாதத்துக்குரிய விடயமல்ல. தெய்வீகத்தோடு சம்பந்தப்பட்ட எந்தவொரு விடயமும் விவாதத்துக்குரியவை அல்ல. இறைவனை அறிவதை விட உணர்வதுதான் சாத்தியமானது. மேடைபோட்டு விவாதித்து இறைவனை அறியமுடியாது.

இவற்றையெல்லாம் காலவோட்டத்தின் மாற்றமென்றே கொள்ள வேண்டும். காலவோட்டந்தான் மனிதனுடைய செயற்பாடுகளை மாற்றுகின்றதேயொழிய, மனிதனுடைய செயற்பாடுகள் காலவோட்டத்தை மாற்றமுடியாது. காலவோட்டம் என்பது இறைவனின் செயற்பாடு. அதை மனிதன் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு மனிதன்தான் கட்டுப்பட்டாக வேண்டும். சிவனும் சக்தியும் ஒன்றே என்ற உண்மையை மனிதன் புரிந்துகொண்டால், வீண் முரண்பாடுகள் எழாது. அவை தேவையற்றன என்ற உண்மை புலப்படும். அன்று ஆண்கள் கோயில்களுக்கு அதிக எண்ணிக்கையில் சென்றனர். இன்று பெண்கள் கோயில்களுக்கு அதிக எண்ணிக்கையில் செல்கின்றனர். அன்று வீடுகளில் முடங்கிக்கிடந்த பெண்கள் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்மாசனக் கதிரை வரை சென்று ஆட்சி புரிகின்றனர். இவற்றின் விளைவுகள் சமூகத்தில் வெளிப்படத்தான் செய்யும். இவ்விளைவு களில் ஒன்றாக அம்மன் ஆலயவழிபாட்டின் அதிகரிப்பும் இருக்கலாம். இது காலவோட்டத்தின் நியதி. இதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இந்தக் காலகட்டத்தில் அம்மன் கோயில்களை யெல்லாம் சிவன் கோயில்களாக மாற்றவேண்டும் என்று சொல்லு வதைக் குழந்தைப் பிள்ளைத்தனம் என்றே கருதவேண்டும்.

இவ்வாறான மாற்றத்தின் ஒரு விளைவாகத்ததான் இந்து சமயம் என்ற பெயரும் தமிழருள் புகுந்துள்ளது. சிந்து என்பதிலிருந்து ஹிந்து என்பதும் ஹிந்து என்பதிலிருந்து இந்து என்பதும் உருவாகியதாய் வரலாறு கூறுகின்றது. இந்து என்றால் "கள்வர்" என்று கருதப்படும் என்று கூறுபவர் தெரிந்துகொள்ள வேண்டியது: ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருப்பது ஒன்றும் புதியதல்ல. உதாரணத்துக்கு மதம் என்ற சொல்லுக்கு அகங்காரம் என்ற கருத்தும், சமயம் என்ற சொல்லுக்கு சந்தர்ப்பம் என்ற கருத்தும் உண்டு; எனினும் இந்து மதம், புத்த மதம் என்று சொல்லும் போதும் சைவசமயம், சமணசமயம் என்று சொல்லும் போதும் அகங்காரம், சந்தர்ப்பம் என்ற கருத்துக்களை எவரும் கொள்வதில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்துசமயம் என்றால் அது ஒரு மக்கள் கூட்டத்தினர் பின்பற்றும் சமயம் என்று கருதப்படுகின்றதே தவிர, கள்வர் என்ற கருத்தை யாரும் கொள்ளுவதில்லை. இது எல்லோரும் பல்லாண்டு காலமாக அறிந்த விடயம். இந்நிலையில் **கள்வர்** என்ற, எவரும் அறியாத ஒரு கருத்தைக் கண்டுபிடித்துவிட்டு, அதைப் பயன்படுத்தினால், "தமிழர் தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்வதாகும்," என்ற வியாக்கியானத்தைக் கொடுப்பது அவசிய மற்றது. ஏதோ ஓர் உள்நோக்கம் கொண்டது. இதன் விளைவு சாதாரண மக்களைத் தேவையற்ற குழப்பத்தில் ஆழ்த்துவதைத் தவிர வேறு எந்தவித பிரயோசனத்தையும் அளிக்கப் போவதில்லை. இச் செயலைப் பார்க்கும் போது, "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்ற பழமொழியே ஞாபகத்திற்கு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்துசமயம்" (Hinduism) என்பது ஆறு பகுதிகளைக் கொண்ட ஒரு தொகுதி (ஆறு பகுப்புக்களைக் கொண்ட ஒரு தொகுப்பு) ஆகும். இந்துசமயம் ஒரு சமய நெறிமட்டுமல்ல ஒரு வாழ்க்கை நெறியுமாகும். மனிதன் தர்மத்தின் அடிப்படையில் வாழ்ந்து பிற்பாடு ஆன்ம ஈடேற்றம் பெறவேண்டும் என்பதற்கான வழிமுறையை இது வகுத்துக் கொடுத்துள்ளது. அந்தவகையில் இந்து சமயம் "சனாதன தர்மம்" என்றும் அழைக்கப்படுகின்றது. வேறு வார்த்தையிற் சொன்னால், இந்து சமயம் மனிதன் பூவுலக சிற்றின்ப வாழ்க்கையைத் தருமவழியில் (வாழ்வாங்கு) வாழ்வதற்கு வழிசமைத்துக் கொடுத்திருப்பதோடு, ஆன்மாக்கள் பிறவிக் கடலி லிருந்து விடுபட்டு இறைவனோடு இரண்டறக் கலந்து பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுவதற்கான வழிமுறையையும் சீரியமுறையில் வகுத்துக் கொடுத்துள்ளது. எனவே இந்துசமயம் ஒரு சமயநெறி மட்டுமல்ல ஒரு சீரிய வாழ்க்கை நெறியுமாகும்.

வாழ்க்கை நெறி என்று பார்க்கும் போது அங்கே கலை, கலாசாரம், பண்பாடு என்பன பொதிந்திருக்கும். ஒரு பொதுவான கலை, கலைசார, பண்பாட்டின் அடிப்படையில் பரதக் கண்டத்தில் நீண்டு பரந்து கிடக்கும் மிகப்பெரிய மக்கள் கூட்டத்தை இந்துக்கள் என்ற பெயரினால் இணைத்து வைத்திருக்கும் இணையற்ற சக்திதான் இந்து சமயம். எனவே இதை ஒரு சமயம் என்று அழைப்பதைவிட, ஒரு கலாசாரப் பிணைப்புச் சாதனம் என்று அழைப்பதே மிகப் பொருத்தமானதாகும்.

பரத கண்டம் வடக்கே இமையமலைத் தொடரையும் தெற்கே கன்னியாகுமரியையும் மேற்கே சிந்துவெளியையும் கிழக்கே மியன்மார் எல்லையையும் கொண்ட மிகப்பெரிய பூமியாகும். பௌதிகப் புவியமைப்பில் மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், பீட பூமிகள், நதிகள், ஆறுகள், ஏரிகள், குளங்கள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள், பாலைவனங்கள் என்று பல்வேறு நில அமைப்புக் களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகாலப் பூர்வீகத்தையும் பல்வேறு நீண்ட நாகரிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியையும் கொண்டவர்கள். அந்தவகையில் பல்வேறு தெய்வீகக் கோட்பாடுகளும் வாழ்க்கை முறைகளும் இருந்தன என்பது தெள்ளத் தெளிவு. இந்த வேறுபாடுகள் மேலும் விரிவடைந்து சென்றுவிடக் கூடாது, இந்தத் தெய்வீக பூமியும் இங்குள்ள தெய்வீகமும் சிதைந்துவிடக் கூடாது என்பதற்காக ஏறக்குறைய 1200 ஆண்டு களுக்கு முன் இறைவனால் அனுப்பப்பட்டவர்தான் மிகப்பெரிய மகானாகிய ஆதிசங்கரர் ஆவார். இவர் ஓர் அவதாரபுருசர் என்பதற்கு மறுப்புக் கிடையாது. இவர் பிறந்த மண் பண்டைய தமிழ்நாடு. இவரால் உருவாக்கப்பட்டதுதான் காஞ்சிக் காமகோடிப் பீடம். இது இன்றுவரை இந்துக்களின் மையபீடமாய் இயங்கி வருகின்றது.

பரத கண்டத்தில் இவர் செய்த மிகப்பெரிய சேவை: பரந்து விரிந்து சிதறிக் கிடந்த தெய்வீகக் கோட்பாடுகளையும், பண்பாடு களையும் ஆறு உபபிரிவின் கீழ் ஒன்றிணைத்து பின் அவற்றைத் தொகுத்து இந்து சமயம் என்ற மகா சக்தி உருவாக வழிசமைத்த தாகும். இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும்.

இன்று இந்துக்கள் என்று அழைக்கப்படும் நூறு கோடிக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட ஒரு மாபெரும் சக்திக்கு அத்திவாரம் அமைத்துக் கொடுத்தவர் பகவான் ஆதிசங்கரர். இதைச் சாதிப்பதற்காக போக்குவரத்து வசதி அற்ற அன்று பாரதம் முழுவதும் சென்று பிரசாரம் செய்திருந்தார் என்பதை அறியும் பொழுது, இவர் ஓர் அவதாரபுருசர் என்பது நிரூபணமாகின்றது.

பரத கண்டத்திலே வாழ்ந்த மக்கள் உய்யவேண்டும், மேன்மை அடைய வேண்டும் என்பதற்காக குரு வடிவில் இறைவன் அனுப்பிய அவதாரபுருசர்கள் மூவர். முதலாமவர் வேதவியாசமுனிவர், இரண்டாமவர் குருதட்சணாமூர்த்தி, மூன்றாமவர் பகவான் ஆதிசங்கரர். இதிலிருந்து இவரின் தெய்வீகத் தன்மையையும் ஆற்றலையும் அறியமுடிகிறது. உலகத்திலே இந்தியா என்ற பெயருடன் மிகப் பெரிய ஒரு ஜனநாயக நாடு உருவாகி இருப்பதற்கு அடிப்படைக் காரணம் இந்து என்ற பெயரும் அதன் கீழ் ஒன்றிணைக்கப் பட்டிருக்கும் நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் கூட்டமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு சாதிகள், பல்வேறு புவியியல் அமைப்புக்களென்று பிளவுபட்டுக் கிடந்த இந்த மக்கள் திரளை இந்து சமயம், இந்துக் கலாசாரம், இந்துப் பண்பாடு என்ற சங்கிலி கொண்டு பிணைத்து இந்திய தேசியத்துவத்தை உருவாக்கிய காரியம் வியப்புக்குரியது என்பதை எவரும் மறுக்கமுடியாது. இவ்வியத்தகு காரியத்தின் பெருமை பகவான் ஆதிசங்கரரையே சாரும் என்று அறியும்போது இவரது தெய்வீக வல்லமை வெள்ளிடை மலையாகும். இந்திய தேசியத்துவத்தின் தந்தை சங்கராச்சாரியார் என்றால் மிகையாகாது. பாகிஸ்தான் போன்று மற்றைய மாநிலங்களும் பிரிந்து போகாது, இந்திய தேசியத்துவத்தை ஏற்று ஒரு நாடாக உருப்பெற்றதற்கு இந்து என்ற உணர்வே அடிப்படையாகும்.

பரத கண்டம் முழுவதும் பரந்து கிடந்த தெய்வீகக் கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் தெய்வ நம்பிக்கை களையும் பண்பாட்டையும் ஆறு பகுப்பின் கீழ் சேர்த்து பின் அவற்றைத் தொகுத்து இந்து சமயம் என்ற தலைப்பில் ஒன்றிணைத்து, இதை ஒரு மாபெரும். சக்தியாக உருவாக்கிய பொழுது, அது சனாதன தர்மமாக உருவெடுத்தது, அதனால் இந்து சமயம் சனாதன தருமம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதன்கீழ் வரும் ஆறு பிரிவுகளாவன:

(1) காணபத்தியம் - கணபதி :- கடவுளை ஓங்கார வடிவினராக வழிபடும் நெறி

(2) சௌரம் - சூரியன் :- கடவுளைப் பேரொளி வடிவினராக வழிபடும் நெறி

(3) கௌமாரம் - முருகன் :- கடவுளைப் பேரின்ப வடிவினராக வழிபடும் நெறி

(4) வைணவம் - விஷ்ணு :- கடவுளை எங்கும் நிறைந்தவராக வழிபடும் நெறி

(5) சாக்தம் - சக்தி :- கடவுளைத் தாயாக வழிபடும் நெறி

(6) சைவம் - சிவன் :- கடவுளைத் தந்தையாக வழிபடும் நெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆறு சமயங்களையும் ஒன்றாகத் தொகுத்ததற்கு அடிப்படைக் காரணம், இவை ஆறும் வேதங்கள், ஆகமங்கள், சித்தாந்தம், உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கு பவை ஆகும். அதனால் இவை வைதீக சமயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றினிடையே வேற்றுமைகள் இருந்த போதும் இவற்றின் ஆணிவேர் ஒன்றேயாகும். வேறு வார்த்தையிற் சொன்னால் இவைகள் ஓர் ஆணிவேரைக் கொண்ட ஆறு கிளைமரங்கள் எனலாம். இதன் காரணமாய்த்தான் இவற்றினால் ஒன்று சேர்ந்து இயங்க முடிகின்றது.

இவைகள் தமக்கிடையே மோதிக்கொண்ட வரலாற்று நிகழ்வுகள் அதிகம் உண்டு. அதற்கான அடிப்படைக் காரணம்: இவற்றின் ஆணிவேரைச் சரியாகத் தெரிந்து கொள்ளாத அறிவிலிகளின் காரியங்களும் குறுகிய மனப்பான்மை கொண்ட சுயநலவாதிகளின் செயற்பாடுகளுமே ஆகும். இந்தக் குறைபாட்டைப் போக்கவே ஆதிசங்கரர் இறைவனால் அவதாரபுருசராக அனுப்பப்பட்டார். இந்த மாபெரும் மகானால் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு (Unity in diversity) அதை நிலைநிறுத்த முடிந்தமை இறைவன் செயலே ஆகும்.

அண்மைக் காலத்திலும், அதற்குச் சிறிது முன்பிலிருந்தும் விநாயகர் கோயில்கள், முருகன் கோயில்கள், ஐயப்பன் கோயில்கள் தமிழர் மத்தியில் அதிக அளவில் உருப்பெற்று வருவது கண்கூடு. ஒப்பீட்டளவில் சிவன் கோயில்களின் உருவாக்கம் குறைவாகவே உள்ளது. இது தவறு என்றோ, அம்மன் கோயில்களெல்லாம் சிவன் கோயில்களாக மாற்றப்பட வேண்டுமென்றோ, மற்றைய கோயில்களில் சிவலிங்கத்தைப் பரிவார மூர்த்தியாகப் பிரதிஸ்டை செய்யப்படாது என்றோ கூறமுடியாது. அப்படிக் கூறுவது தவறு, அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தப் பிரபஞ்சத்திற்கு இறைவன் ஒருவன் தான். அவரையே ஆதிபரம்பொருள் அல்லது பிரம்மம் என்று நாங்கள் அழைக்கின்றோம். வேறு சமயத்தவர்கள் வேறு பெயர்களைக் கொண்டு அழைத்தாலும் இறைவன் ஒருவனே. அவன் உருவம் இல்லாதவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில்லாதவன். அவருக்கு உருவத்தையும் பெயரையும் கொடுத்தது நாங்கள். அதற்காகப் பல்வேறு பெயர்களில் பல்வேறு இறைவன் இருக்கிறான் என்று கொள்ள முடியாது.

இந்த உண்மைக்கு பின்வரும் திருவாசகம் சான்றாகின்றது.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாமம் அறிய அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தென்னேணம் கொட்டாமோ

உருவமோ, பெயரோ, பால் வேறுபாடோ இல்லாத பரம்பொருளுக்கு நாங்கள் உருவத்தையும் பெயரையும் கொடுத்து விட்டு, அந்தக் கடவுள் பெரிது இந்தக் கடவுள் சின்னன் உந்தக் கடவுள் பெண் தெய்வம் அந்தக் கடவுள் ஆண் தெய்வம் என்று வாதாடுவது எமது அறிவீனமேயாகும். கடவுளில் பெரிது, சிறிது, ஆண், பெண் என்று எதுவும் கிடையாது. கடவுள் கற்பனைக்குக் கூட எட்டாத ஒரு மாபெரும் சக்தி. அதனாற்தான் பிரம்மம் என்று எமது ஞானிகள் அழைத்தார்கள். பிரம்மம் என்றால் பிரமாண்டமானது என்பது அர்த்தமாகும். எவ்வளவு பிரமாண்டமானது? பிரபஞ்சத்திலும் பிரமாண்டமானது. பிரபஞ்சத்தின் தோற்றம், பிரபஞ்சத்தின் இருப்பு, பிரபஞ்சத்தின் ஒடுக்கம் ஆகிய மூன்றும் பிரம்மத்துக்குள்ளேயே நடைபெறுமளவிற்குப் பிரமாண்டமானது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கடவுளைப் பற்றித் தனது சைவ வினாவிடையில், “கடவுள் எங்குமுள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்” என்று கூறுகின்றார். “எங்கும்” என்று சொல்லுவதன் அர்த்தம் இந்தப் பூமி முழுவதும் என்பதல்ல, இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே குறிக்கின்றது. இப்பூவுலகத்தைப் பிரபஞ்சத்தோடு ஒப்பிடும் போது கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறு புள்ளியாகவே கருதவேண்டும். பிரபஞ்சம் கோள்களையும், நட்சத்திரங்களையும் ஈரேழு பதினான்கு உலகத்தையும் கொண்ட கற்பனைக்குக் கூட எட்டாத மிகமிகப் பிரமாண்டமான ஒன்று. அவ்வளவு பிரமாண்டமான பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருப்பவர், பரந்திருப்பவர், செறிந்திருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல, "எல்லாம் வல்லவர்" என்பதன் அர்த்தம்; இந்தப் பிரபஞ்சமே அவரின் வல்லமையாற்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதாகும். அவருடைய வல்லமையை எம்மால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது அந்தளவு வல்லமை கொண்டவர். "எல்லாம் அறிபவர்" என்றால், அவரால் அறியமுடியாத எதுவுமே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை என்பது அர்த்தமாகும். மனிதன் தனது மனதில் கொள்ளும் எண்ணங்களையே இறைவன் அறிந்துவிடுவார். இந்தப் பிரபஞ்சத்தில் எதையும் அவருக்கு ஒழிக்க முடியாது. இதே கருத்துக்களை உறுதிப்படுத்துமாப் போன்றே.

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே" என்று மாணிக்க வாசகரும்

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
..........................................
ஊற்றாகி உள்ளே ஒழித்தாய் போற்றி
ஓவாத சத்தத்தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி" என்றும்

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகளொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றும்

திருநாவுக்கரசு நாயனார் பாடும் பாடல்களின் கருத்து அமைந் துள்ளது. இப்படிப்பட்ட ஆதிபரம்பொருளுக்கு பெயரும் உருவமும் கொடுத்துவிட்டு அவர் பெரிய தெய்வம் இவர் சிறிய தெய்வம், உவர் ஆண் தெய்வம், அவர் பெண் தெய்வம் என்று கூறுவது எவ்வளவு பெரிய அறியாமை? மிகப் பெரும் அறியாமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 2

ஆன்மீக வளர்ச்சியில் சிகரத்தைத் தொட்ட இராமகிருஷ்ண பரமஹம்சர் இறைவனை ஒரு படைப்பாகக் கருதியபடியால், அதாவது இறைவனைக் காளி (அம்மன்) என்னும் ஒரு படைப்பாகக் கருதியபடியால், அவர் அடையவேண்டியிருந்த மோட்சம் தடைப் பட்டது. அப்புறம் இறைவனின் நெறிப்படுத்தல் மூலம் குருவைப் பெற்று குருவின் அறிவுரையின் படி காளியை வெட்டிய பிற்பாடுதான் மோட்சம் கிட்டியது. இதிலிருந்து கிடைக்கும் உண்மை என்ன வென்றால், இறைவன் ஒரு படைப்பல்ல என்பதாகும். ஒரு படைப்பல்லாத, பெயரில்லாத பரம்பொருளுக்கு உருவமும் பெயரும், ஆண்பால் பெண்பால் என்பதைக் கொடுத்தது மட்டுமல்லாமல், அவர் பெரிய கடவுள், இவர் சின்னக் கடவுள், உவர் சக்தி வாய்ந்த கடவுள், அவர் சக்தி குறைந்த கடவுள் என்றெல்லாம் கூறுவது அறியாமையின் உச்சக்கட்டம் என்றே சொல்ல வேண்டும்.

அது மட்டுமல்ல, அவர் அப்பாக் கடவுள், இவர் அம்மாக் கடவுள், உவர் அண்ணாக் கடவுள், மற்றையோர் பிள்ளைக் கடவுள்கள் என்று மானிடக் குடும்பத்துடன் பரம்பொருளை ஒப்பீடு செய்து பார்ப்பதும் பொருத்தமற்ற செயலாகும். அப்பாக் கடவுளையும் அம்மாக் கடவுளையும் பிரிக்கப்படாது என்பதும் அப்பாக் கடவுளை மற்றைய கடவுள்கள் வணங்குகின்றன, எனவே அவரே பெரிய கடவுள் என்பதெல்லாம் இறைக்கோட்பாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தும் செயலாகும்.

உருவ வழிபாட்டையும் பெயரிட்ட தெய்வ வழிபாட்டையும் இந்து சமயத்துள் புகுத்தியதற்கான அடிப்படைக் காரணம் : சாதாரண மக்களுக்குத் தெய்வீகத்தை அளிப்பதற்கே ஆகும். உருவமற்ற, பெயரற்ற தெய்வீகத்தைச் சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாது. அதை யோக நிலையையும் ஞான நிலையையும் அடைந்தவர்களால் மட்டும் புரிந்து கொள்ள முடியும். எந்தவொரு சமுதாயத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் 99 வீதமான மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களே ஆவர். தெய்வீகத்தை அவர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டுமாயின் உருவமும் பெயரும் கொண்ட வழிபாட்டு முறை அவசியம் தேவைப்பட்டது. இந்தத் தேவையின் அடிப்படையிற் தான் பெயர் கொண்ட உருவ வழிபாட்டு முறை மகான்களால் உருவாக்கப்பட்டது. இறைவன் பெயரும் உருவமும் அற்றவர் என்பதற்கு மனிதன் இறைவனுக்குக் கொடுத்திருக்கும் ஆயிரம் திருநாமங்களும் பல்வேறு உருவங்களும் சாட்சியாகும். எப்படி என்று கேட்கின்றீர்களா? இறைவனுக்கு ஒரு பெயரும் ஓர் உருவமும் இருந்தால் இவ்வளவு பெயர்களையும் உருவங்களையும் மனிதனால் கொடுத்திருக்க முடியாதே! இறைவனின் பெயரும் உருவமுமற்ற நிலையே மனிதனின் இச்செயலுக்கு வாய்ப்பாக அமைந்தது. மனிதனின், இவ்வளவு நாமங்களையும் உருவங்களையும் கொடுத்த செயலை, அவன் இறைவன் மீது கொண்ட ஆழமான நம்பிக்கையினதும் அதீத பக்தியினதும் வெளிப்பாடாயும் கருதலாம். ஆகையால் அதைப் பிழை என்று சொல்லுவதற்கில்லை. எனினும் அவை தெய்வீகக் கோட்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய அளவிற்கு அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியது.

பேரின்ப வாழ்விற்கு வழிசமைத்துக் கொடுத்துள்ள சனாதன தருமம் சாதாரண மக்களுடைய வாழ்விலும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். அந்தவகையில் சாதாரண மக்களும் தெய்வீக அருளைப் பெற்று இன்புற்று வாழவேண்டும் என்பதற்காக அவர்கள் இறைவனைப் புரிந்து அருள் பெறக்கூடிய வழிபாட்டு முறையாக பெயர் கொண்ட உருவவழிபாட்டுமுறை ஏற்படுத்தப்பட்டது. அதற்காக, அதுதான் உண்மையான இறை தத்துவமும் தெய்வீகக் கோட்பாடு மென்று கருதப்படாது. அவ்வாறு கருத்திற்கொண்டு தவறான விளக்கங்களை சாதாரண மக்களுக்குக் கொடுப்பது, அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதோடு, அரும்பெரும் இந்து சமய தெய்வீகத் தத்துவங்களையும் இறைக்கோட்பாடுகளையும் சிதைத்துவிடும் செயலாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்து என்றால் அதன் அர்த்தம் கள்வர், அம்மனுக்குத் தனிக்கோயில் கட்டப்படாது, சிவலிங்கத்தைப் பரிவாரமூர்த்தியாய்ப் பிரதிஸ்டை செய்யப்படாது, சிவன் பெருந்தெய்வம், மற்றவை யெல்லாம் சிறு தெய்வங்கள்," என்று பிரசாரம் செய்வதை இறைக் கோட்பாட்டைச் சிதைக்கும் செயற்பாடாகவே கருத வேண்டும். இது ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் செயலாகவே அமையும். எனவே தமிழ் மக்கள் விழிப்படைந்து இவற்றிலிருந்து தம்மையும் தமது சமயத்தையும் பண்பாட்டையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழர்களுடைய சமயம் சைவம், சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. தமிழர் மத்தியில் சமயகுரவர்கள் வாழ்ந்த காலத்துக்கு முன்பின்னாக பெரும் எண்ணிக்கையான சிவன் கோயில்கள் தமிழ் நாட்டில் இருந்தன என்பதும், சிவவழிபாடு முன்னணி வகித்தது என்பதும் உண்மைதான். ஆனால் தமிழர்கள் கணபதி வழிபாட்டிற்கோ, முருக வழிபாட்டிற்கோ, சக்தி வழிபாட்டிற்கோ, நாராயண வழிபாட்டிற்கோ, சூரிய வழிபாட் டிற்கோ முரணானவர்கள் அல்லர். சூரிய வழிபாடும் சக்தி வழிபாடும் ஆதிகாலம் தொட்டே தமிழர்களிடம் இருந்து வந்துள்ளது. அதற்கு உதாரணமாக தைப்பொங்கல் விழாவையும் கொற்றவை வழிபாட் டையும் கொள்ளலாம். சூரியனுக்குத் தனிக்கோயிலே தமிழ்நாட்டில் உண்டு. முருகன் தமிழ்க் கடவுள் என்றே தமிழர்களால் போற்றப் படுகின்றார். நாராயணன் வழிபாட்டை தமிழர்கள் வெறுக்கவில்லை. சைவ சித்தாந்தத்தில் சிவனின் ஐந்தொழில்கள் பற்றிக் கூறும் பொழுது, காத்தல் தொழிலைச் செய்பவர் விஷ்ணு என்றே சொல்லப்படுகின்றது. எனவே விஷ்ணு சிவனின் ஐந்து முகங்களில் ஒன்றாகவே கருதப்படுகின்றார். ஆகையால் நாராயண வழிபாடு தமிழர்களுக்கு அன்னியமான ஒன்றல்ல. நான் முன்பு கூறியது போன்று இவை ஆறும் வைதீக சமயங்கள். அதாவது வேதம், ஆகம், சித்தாந்தம், உபநிடதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவை, இவ்வாறிற்கும் ஆணிவேர் ஒன்றேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய குரவர்கள் காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலும் அண்மைக் காலத்திலும் கணபதி, முருகன், அம்மன், ஐயப்பன் பெருமாள் வழிபாடுகள் அதிகரித்து வருவதும் அவர்களுக்கான கோயில்கள் அதிகமாய் நிறுவப்பட்டு வருவதும் பிழை என்று கூறமுடியாது. மாற்றம் என்பது காலத்தின் கட்டாயம், அதாவது காலத்தின் தேவையைக் கொண்டு நிகழ்வது. நான் முன்பு கூறியது போன்று மரபும் மாற்றமும் ஒன்றுக்கொன்று அனுசரணையாய் இருந்து எமது இருப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்ய வேண்டும்.

சைவ சமயத்திற்கு சிவன் முழுமுதற் கடவுளாய்க் கொள்ளப் படுவது போன்று வைணவத்துக்கு நாராயணனும், காணபத்தியத்திற்கு கணபதியும், கௌமாரத்துக்கு முருகனும், சக்தி வழிபாட்டிற்கு அம்மனும், சௌரம் வழிபாட்டிற்குச் சூரியனும் முழுமுதற் கடவுளாகக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கும் கோயில் கட்டும் போது அவரவரே மூலமூர்த்தியாய் நிறுவப்படுவர். மற்றைய மூர்த்திகளை பரிவாரமூர்த்திகளாய் நிறுவுவது தவறில்லை. ஆறு மூர்த்தங்களில் அவர் பெரிது இவர் சிறிது உவர் பெண், அவர் ஆண், அவர் சக்தி வாய்ந்தவர், இவர் சக்தி குறைந்தவர், மற்றவர் சக்தி அற்றவர் என்று பாகுபடுத்திப் பார்ப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. நான் முன்பு கூறியது போன்று கடவுள் என்பது உருவமோ பெயரோ அற்ற ஒரு மாபெரும் சக்தி. அச்சக்தியை பிரம்மம் அல்லது ஆதிபரம்பொருள் என்று எம்மவர் குறிப்பிடுகின்றனர். அந்தப் பிரம்மத்தைக் குறிப்பது தான் இந்த ஆறு மூர்த்தங்களும். பெயர்கள் வேறுபட்டதே தவிர பொருள் ஒன்றுதான். அவ்வாறு இருக்கும் போது, எப்படி அது பெரிது, இது சிறிது, உது ஆண், இது பெண், அது சக்தி கூடியது, இது சக்தி குறைந்தது என்று கொள்ளமுடியும்? முடியாது. எனவே மற்றைய மூர்த்தங்களுக்குரிய கோயில்களில் சிவனைக் குறிக்கும் சிவலிங்கத்தைப் பரிவார மூர்த்தமாய்ப் பிரதிஸ்டை செய்யப்படாது என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படிக் கூறுவது என்னத்தைக் காட்டுகிறது என்றால்; நாங்கள் சைவர்கள், எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதற் கடவுளாகிய சிவன் உயர்ந்தவர், மற்றையவர்களுக்கு மேலானவர், ஆகையால் அவரைச் சிறியவர்களுடைய கோயில்களில் பரிவாரமூர்த்தியாய் வைக்கப்படாது என்பதையே காட்டுவதாகும். இது தப்பான கருத்து, இது பிளவுக்கே வழிகோலும். ஒரே பிரம்மத்தைக் குறிக்கும் வெவ்வேறு மூர்த்தங்களில் பெரிது, சிறிது என்று இருக்க முடியாது.

சைவ சித்தாந்தத்தின் படி பரம்பொருளின் ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றில் அழித்தல் தொழிலைச் செய்பவர் உருத்திரன் என்று சொல்லப் படுகின்றது. உருத்திரன் என்பது சிவனையே குறிக்கின்றது. அழித்தற் தொழிலை செய்யும் சிவனை மற்றைய சமயப் பிரிவினர் கருணை குறைந்த தெய்வமாகவே பார்க்கின்றனர். தமிழர்கள் கூட சிவனைத் தமது வீடுகளில் வைத்து வணங்குவது குறைவு. காரணம் சிவனை வீட்டில் வைத்து வணங்குவதானால் கடுமையான சமயாசார நெறிகளைப் பின்பற்ற வேண்டுமென்று கூறி சிவனை வீட்டில் வைத்து வணங்கத் தயங்குகின்றனர்.

சிவன்தான் உயர்ந்தவர் மற்றைய மூர்த்தங்கள் அவருக்கு கீழ்ப்பட்டவர்கள் என்பதை மற்றைய பிரிவினர் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இராமபிரான் சிவலிங்க பூசை செய்தான், அர்ச்சுனன் சிவபூசை செய்தான் என்பதற்காக வைஷ்ணவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது அர்த்தமற்ற எண்ணமாகும். பூசை செய்ததற்காக, வணங்கியதற்காக சிவனை முழுமுதற் கடவுளாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், தமிழர்கள் முருகனைப் பூசிக்கின்றார்கள், வணங்குகின்றார்கள் என்பதற்காக அவர்கள் முருகனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று கௌமாரப் பிரிவினர் சொல்லலாம். அது உண்மையா? இல்லை. பரம்பொருளின் தத்துவத்தை உணந்தவர்கள் தமது ஞானத்துக்கேற்ப வேண்டிய மூர்த்தத்தை தகுந்த வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குவர். எதையும் முறைப்படி வணங்கினால் இறையருள் கிடைக்கவே செய்யும். இறையருள் கிடைப்பதற்கு எதை வணங்குகிறோம் என்பது முக்கியமல்ல. எப்படி வணங்குகிறோம் என்பது தான் முக்கியம். ஓட்டைப் பானையாய் இருந்து கொண்டு எதை வணங்கினாலும் எந்தப் பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை. அசுரப் பண்புகளை அழித்து கடவுட் பண்புகளை வளர்த்துக் கொள்பவனிடமே இறையருள் தங்கும். எனவே இறையருளைப் பெறுவதற்கு சிவன் பெரிது சக்தி (அம்மன்) சிறிது என்று கோசமிடவேண்டிய தேவை இல்லை. இறையருளைப் பெறுவதற்கு அதற்கான தகுதியைப் பெறுவதே ஒரே வழியாகும்.

சிவன் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான கடவுள் என்று எண்ணுபவர்கள், தங்களுடைய கோசத்துக்கு இராமபிரானையும் அர்ச்சுனனையும் ஆதாரமாகக் கொள்வது மிகப்பெருந் தவறாகும். இராமபிரானுடைய ஆன்மீக பக்குவத்தையும் அர்ச்சுனனுடைய ஆன்மீக பக்குவத்தையும் இவர்களால் கற்பனைகூட பண்ணமுடியாது. இந்த நிலையில் அவர்களை உதாரணம் காட்டித் தமது வாதத்தைச் சரியென நிலைநிறுத்த முற்படுவது ஒருபோதும் ஏற்புடையதல்ல. எல்லாவற்றிலும் இறைவன் நிறைந்திருக்கிறான். இறைவன் எங்கும் நிறைந்தவன் என்பதன் அர்த்தம் அதுவேயாகும். இதைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் தான் சிவன் பெரிது மற்றைய மூர்த்தங்கள் சிறிது என்கிறார்கள். போதாதற்கு இராமபிரானையும் அர்ச்சுனனையும் தமது கருத்துக்கு உதாரணமாய்க் கொள்கிறார்கள். இதெல்லாம் சாதாரண மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்கு உதவுமேயொழிய வேறு எந்தப் பிரயோசனத்தையும் அளிக்கப்போவதில்லை.

அம்மனுக்குத் தனியாகக் கோயில் கட்டப்படாது என்ற கூற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. சைவசித்தாந்தத்தில் சிவனும் சக்தியும் இரண்டறக் கலந்தது, ஒன்றிலிருந்து மற்றையதை பிரிக்க முடியாது, பிரிக்கவும் கூடாது என்று சொல்லப்படுவது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி என்பது இறைவனிலிருந்து வெளிப்படும் அருள். இந்த அருளி னாலேயே ஜீவராசிகள் உய்ய முடிகின்றது. உயர முடிகின்றது. இந்த அருள் இறைவனிடமிருந்து வெளிப்படாதுவிடின் அவர் ஒரு ஜடம். அருள் வெளிப்படுவதனாற்றான் அவர் இறைவன். இறைவனி லிருந்து வெளிப்படும் அருளையே சக்தி என்று அழைக்கிறோம். இந்த இறை சக்தியை ஒரு தாயாக உருவகப்படுத்திப் பார்க்கிறோம். காரணம் தாய்ப்பாசத்துக்கு விஞ்சிய அன்பு வேறொன்றும் இல்லை. எனவே இறையருளை மிக உச்சத்தில் வைத்துப் பார்ப்பதற்காக எமது ஞானிகள் கண்டுபிடித்த ஒப்பீடுதான் தாயைக் குறிக்கும் அம்மன். எனவே அம்மன் அல்லது அம்பாள் என்பது இறைய ருளையே குறிக்கின்றது. வேறு வார்த்தையிற் சொன்னால் சைவர்கள் இறைவனைத் தன்னிலையில் சிவன் என்றும் பயன்படு நிலையில் சக்தி என்றும் கொள்கிறார்கள். இரண்டும் ஒன்றே ஆகும். எனவே சிவனை வழிபட்டாலென்ன சக்தியை (அம்மனை) வழிபட்டாலென்ன ஒன்றே. அதாவது ஒரேவகையான பயன் கிடைக்கும்.

இதற்கு ஓர் ஒப்பீடு சொல்வதானால்: சூரியனையும் அதன் ஒளியையும் கொள்ளலாம். சூரியனிலிருந்து வெப்பத்தோடு கூடிய ஒளி வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வெப்ப ஒளியை நாங்கள் வெயில் என்கிறோம். வெயிலால் பூவுலகிலுள்ள ஜீவராசிகள் உயிர் வாழுகின்றன (உய்கின்றன). சூரியகோளத்தை தன்னிலையில் சூரியன் என்றும் பயன்படு நிலையில் வெயில் என்றும் அழைக் கிறோம். சூரியனிலிருந்து வெயிலைப் பிரக்க முடியாது. இரண்டும் ஒன்றே. சூரியனை வணங்கும்போது வெயிலையும் வணங்குகின்றோம். வெய்யிலை வணங்கும்போது சூரியனையும் வணங்குகின்றோம். அதுபோன்று சிவனை வணங்கும் போது சக்தியையும் (அம்மனையும்) வணங்குகின்றோம். சக்தியை வணங்கும் போது சிவனையும் வணங்குகின்றோம். பிரித்து வேறு வேறாய் வணங்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில், சக்தியை (இறையருளை) உச்சநிலையில் வைத்துப் பார்ப்பதற்காக, தாய்க்கு ஒப்பிட்டு அம்மன் (அம்பாள்) வழிபாட்டைச் செய்கின்ற ஒரு பகுதி மக்களும் எம்மத்தியில் உள்ளனர். இது ஓர் உயர்ந்த பண்பாட்டின் வெளிப்பாடு. இதை யாரும் தப்பு என்று கூறமுடியாது. அம்மனைக் கும்பிட்டாலென்ன சிவனைக் கும்பிட்டாலென்ன அந்தப் பரம்பொருளையே கும்பிடு கிறோம். எனவே சிவனைக் கும்பிடும் போது கிடைக்கும் பயன் அம்மனைக் கும்பிடும் போதும் நிச்சயம் கிடைக்கும். ஆகையால் அம்மனுக்குத் தனிக்கோயில் கட்டுவதில் எந்தத் தவறும் இருக்கப் போவதில்லை. அம்மன் கோயிலில் சிவலிங்கத்தைப் பரிவார மூர்த்தியாய்ப் பிரதிஸ்டை செய்வதிலும் எந்தத் தப்பும் இருக்கப் போவதில்லை. இந்த வகையில் பல அம்மன் கோயில்களில் சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கின்றது எல்லோரும் அறிந்த விடயம். சக்தி வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் அம்மனை மூலமூர்த்தியாய்க் கொண்டு கோயில்கள் அமைப்பது ஒருபோதும் தவறாக இருக்க முடியாது. இந்து சமயத்தில் அடங்கும் ஆறு வழிபாட்டு நெறிகளில் சக்தி வழிபாடும் ஒன்றாகும்.

சிவன் கணவர், அம்மன் மனைவி என்று விளக்கம் கொடுத்து, கணவரிடமிருந்து மனைவியைப் பிரிக்கப்படாது என்றும், மனைவிக்குத் தனிக்கோயில் அமைத்து அதில் கணவராகிய சிவனைப் பரிவார மூர்ததியாய் வைப்பது தவறு என்றும் விளக்கம் கொடுப்பது அறிவீனமாகும். சிவன் கணவருமல்ல சக்தி மனைவியுமல்ல. இவ்வாறு இறைத் தத்துவத்தைச் சிதைப்பது போன்ற விளக்கங்கள் கண்டனத்துக்குரியவை, அது மகாதவறாகும். மகா ஞானிகளால் உருவாக்கப்பட்ட இறைத் தத்துவத்தையும் தெய்வீகக் கோட்பாடு களையும் எமது அறிவீனத்திற்கேற்ப மாற்ற முற்படக் கூடாது. சிவ வழிபாட்டை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சிவன் கோயில்களை உருவாக்கவும் ஏற்கனவே உள்ளவற்றைப் புனருத்தாரணம் செய்யவும் விரும்புபவர்கள் தாராளமாகச் செய்யலாம். அதைவிடுத்து, மற்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு முறைகளைக் கண்டிப்பதோ, அவற்றிற்குத் தவறான விளக்கங்கள் கொடுத்து சாதாரண மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதோ ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

இந்து சமயத்தைக் குறிவைத்து பெரிய திட்டமிட்ட அளவில் மதமாற்றம் மேற்கொள்ளப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்தில் எம்முள்ளே நாங்கள் அடிபட்டுக் கொள்வதும் எமது பொன்னான சமயக் கோட்பாடுகளுக்குத் தவறான விளக்கங்க்ளைக் கொடுத்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதும், **"குளத்தைக் கலக்கிப் பராந்திற்குக் கொடுத்தது போன்ற"** செயலாய்த் தான் முடியும். இந்து சமயத்தின் ஆணி வேராகிய வேதங்கள், ஆகமங்கள், சித்தாந்தங்கள், உபநிடதங்கள், புராணங்கள் மகாஞானிகளால் உருவாக்கப்பட்டவை. அவற்றையோ அல்லது அவற்றை விளக்கும் நூல்களையோ நன்கு படித்து உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதைவிடுத்து சொந்த விருப்பு வெறுப்புக்காகவோ அல்லது குறுகிய இலாபத்துக் காகவோ பிழையாய்க் கூறுவதும் திரித்துக் கூறுவதும் பெரும் பாவமாகும்.

இதற்கு ஓர் ஒப்பீடு சொல்வதானால் : திருவருளைப் பெறுவ தென்பது பலாப்பழத்திலிருந்து சுளையைப் பெறுவதைப் போன்றது. திருவருளைப் பெற்றால் பூவுலகச் சிற்றின்ப வாழ்க்கையை இன்பமாய் அனுபவிக்கலாம். அப்புறம் பரலோகப் பேரின்ப வாழ்வைப் பெற்று ஆனந்தமாய் இருக்கலாம். பலாப்பழத்திலிருந்து சுளையைப் பெற்றால் அதை உண்டு இன்புறலாம். முன்னொரு போதும் பலாப்பழத்தைப் பார்க்காத ஒருவன் முழுப் பலாப்பழத்தைப் பார்த்தால் இதற்குள் இனிமையான சுளைகள் உண்டு என்பதை அறியமாட்டான். திருவருளை அறியாத எமது நிலையும் அவனைப் போன்றது. பலாச்சுளையை ஏற்கனவே உண்டு மகிழ்ந்தவன் அதைப் பற்றி அறியாதவனுக்கு பலாப்பழத்தை முதலில் எப்படி வெட்டுவது, அப்புறம் எப்படி எப்படி வெட்டுவது, அதைத் தொடர்ந்து சுளையை எப்படி எடுப்பது, பிற்பாடு சுளைக்குள் இருக்கும் விதையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மூடியிருக்கும் உறையையும் எப்படிப் பிரிப்பது என்று விளக்கமாகச் சொல்லிக் கொடுத்தால், கேட்பவன் அதைக் கிரகித்துக் கொண்டு அதன்படி வெட்டிச் சுளையை எடுத்த பின் விதையையும் அதன் உறையையும் நீக்கி உண்டு மகிழ்வான். சொன்னதைக் கிரகிக்க முடியாதவனும் பழத்தை வெட்டிச் சுளையை எடுக்கப் பஞ்சிப்படுபவனும் சுளையை உண்டு மகிழ முடியாது. இதில் நாம் கவனிக்க வேண்டிய மூன்று படிமுறைகள்: சொல்லுபவன் சரியாகச் சொல்ல வேண்டும். கேட்பவன் சரியாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். அப்புறம் கிரகித்துக் கொண்டவன் பஞ்சிப்படாமல் சரியான முறையில் பழத்தை வெட்டிச் சுளையை எடுக்க வேண்டும். மூன்று படிமுறைகளும் சரியாக நிறைவேறும் போதுதான் சுளையை உண்டு மகிழமுடியும்.

திருவருளைப் பெறும் விடயத்தில் நம்மில் அநேகர் முன் ஒருபோதும் பலாப்பழத்தைப் பார்க்காதவனுக்கு ஒப்பானவர்கள்தான். எனவே எமக்குச் சரியான நெறிப்படுத்தல் தேவைப்படுகின்றது. அதற்குரிய ஆலோசனைகளை வழங்குபவர்கள் அதற்கான வழிமுறை களைச் சரியாகத் தெரிந்திருக்க வேண்டும். கேட்பவனுக்கு சரியான விளக்கம் கிடைக்கவில்லை என்றால் கேட்பவன் பலாப்பழத்தை காலால் உதைத்துத் தள்ளி விட்டுப் போவான். விளக்குபவன் அதற்கு வழிவகுத்துக் கொடுக்கப்படாது. பலாப்பழத்தை உதைத்து தள்ளிவிட்டுப் போபவன் வேறு பழத்தைத் தேடிப் போவான். இன்று எம்மவர் மத்தியில் இடம்பெறும் மதமாற்றமும் ஓரளவிற்கு இப்படிப் பட்டதுதான். இதற்கு இடமளிக்கப்படாது. திருவருளைப் பெறுவதற் குரிய வழியை நன்கு அறியாதவர்கள் சும்மாவிருக்கலாம். அதைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் அந்த வேலையைச் செய்வார்கள். அறிவிற்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட எந்தக் காரியத்தையும் எவரும் செய்ய முற்படக்கூடாது. அப்படிச் செய்ய முற்படுவது அறிவீனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 3

இதுவரை நான் எழுதியுள்ள கருத்துக்களிலிருந்து, தமிழர்கள் தம்மை இந்துக்கள் என்று அழைப்பது சரியா? அல்லது தவறா? என்பதற்கு விடை பெற்றிருப்பீர்கள். இருந்தபோதும் தொகுப்பாக சிலவற்றை கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்துக்கள் என்ற ஒரு மாபெரும் சக்தியில் ஓர் அங்கமாக தமிழர்கள் இருப்பது அவர்களுக்கு நன்மை பயக்குமா? அல்லது அதிலிருந்து பிரிந்து **தமிழர் சைவர்கள்** என்று ஒரு சிறு குழுவாக இருப்பது நன்மை பயக்குமா? என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை கண்டு (Unity in diversity) ஒரு மாபெரும் சக்தியின் ஓர் அங்கமாக இருப்பதன் மூலம் ஏற்படக்கூடிய நன்மைகளை நான் கூறித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஒற்றுமையில் வேற்றுமையை ஏற்படுத்தி (Diversity in Unity) ஒரு சிறு குழுவாக வாழ்வதனால் ஏற்படப்போகும் தீமைகளைப் பற்றியும் நான் கூறித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்

அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" எனும் வள்ளுவர் வாக்குக்கிணங்க செயற்படவேண்டியது தான் அறிவுடமையாகும்.

இன்று உலகத்திலே நிகழுகின்ற அநேகமான பிரச்சினை களுக்கு அடிப்படைக் காணரம் ஒற்றுமையில் வேற்றுமை காண்ப தாகும். அரசியல் பிரச்சினையானாலும், பொருளாதாரப் பிரச்சினையா னாலும், சமூகப் பிரச்சினையானாலும் ஒற்றுமையில் வேற்றுமை காண முயற்சிப்பதனாலேயே உலக மக்கள் இன்று பல இன்னல்களையும் துன்ப துயரங்களையும் அனுபவிக்க நேருகின்றது. உதாரணமாக இலங்கையை எடுத்துக் கொண்டால், அங்கு இன்று நிலவும் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சனைகளுக்கு மூலகாரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையில் வேற்றுமை காண முயற்சிப்பதன் விளைவேயாகும். இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் எல்லோரையும் இலங்கையர் என்று கருதி, எந்தப் பாகுபாடுமின்றி, அனைவரினதும் நலனுக்காக செயலாற்றி வந்தால் எந்தவொரு பிரச்சனையும் உருவாக வாய்ப்பில்லை.

ஆனால் இலங்கையில் நடப்பது என்னவென்றால் : ஆட்சியைப் பிடிப்பதற்காக மக்களிடையேயும், சமயங்களிடையேயும் பிளவுகளை ஏற்படுத்தி குறுகிய சுயலாபம் பெறும் செயற்பாட்டினால் பொன்னான பூமி மண்ணாகிப் போய்க்கொண்டிருக்கின்றது. சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் என்றும் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் என்றும் நிலவும் வேற்றுமையில் அனைவரும் இலங்கையர் என்ற ஒற்றுமையைக் கண்டு, அதன் அடிப்படையில் எந்தவித பாகுபாடுமின்றிச் செயற்பட்டு வந்தால் இலங்கை சொர்க்க பூமியாக காட்சியளிக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்தே இருக்க முடியாது.

அதுபோன்று சைவம், சாக்தம், வைஸ்ணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு வழிபாட்டு நெறிகளும் இந்து சமயம் என்ற மாபெரும் சக்தியாகத் திகழும்பொழுது, எல்லாப் பிரிவினரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக எவ்வளவோ காரியங்களைச் சாதித்து இன்புற்றிருக்க முடியும். அதைவிடுத்து, தனித் தனியே பிரிந்து செயற்படுவதனால் கிடைக்கப்போவது பகைமையும், அடிபாடும், அழிவுமேயாகும். இலகுவாகப் புரியக்கூடிய இந்த உண்மையைத் தானும் உணராது எவரேனும் செயற்படு கின்றனர். என்றால், அது குறுகிய சுயலாபத்துக்கான ஒன்றாக இருக்க முடியுமே தவிர வேறெதுவாகவும் இருக்க முடியாது.

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன்தான் பெரிய தெய்வம், மற்றவையெல்லாம் சிறு தெய்வங்கள் என்பதும், பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமாகிய சிவனை வணங்கினால், மற்றைய சிறு தெய்வங்கள் அனைத்தும் தாமாகவே அருள் புரிவார்கள் என்பதும் தவறாகும். பிரபஞ்சத்திற்கு ஒரே கடவுளாகிய பிரம்மத்தை (ஆதி பரம்பொருளை) ஒவ்வொரு மதப் பிரிவினரும் வெவ்வேறு பெயர் கொண்டு அழைக்கிறார்களே ஒழிய, அவற்றுள் பெரிய தெய்வம் சிறிய தெய்வம் இருப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. அடுத்து சிவலிங்க வடிவம் சைவ சமயத்துக்கு மட்டும் உரியது என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். ஆராட்சியின் படி சிவலிங்க வழிபாடு தென்னமெரிக்காவில் பெரு நாட்டிலும், வடஅமெரிக்காவில் மெச்சிக்கோவிலும், மத்திய கிழக்கிலும், போர்ணியோத் தீவுப் பகுதியிலும் நிலவியதாய் அறிய முடிகின்றது. இவர்களெல்லாம் தமது கடவுள் சிவன் என்றோ, தமது சமயம் சைவமென்றோ சொல்லவில்லை. பரம்பொருளைச் சிவலிங்க வடிவத்தில் வணங்கி யுள்ளார்கள் என்பது தான் உண்மை. எனவே சிவலிங்க வடிவம் சைவத்துக்கும் தமிழர்களுக்கும் உரியது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

சைவசமயத்தவர் சிவலிங்கத்தைச் சிவ சின்னமாக வைத்து வழிபடுவதற்கான காரணங்கள் பின்வருமாறெனச் சொல்லப்படுகின்றன: கைலாயம் சிவனுடைய உறைவிடம் என்று நம்பும் வைசவர்கள் அதன் தோற்றத்தையே சிவலிங்கமாக வடித்து வணங்குகின்றனர் என்பது ஒரு கருத்தாகும். அதாவது, கைலாயமலை சிவலிங்கத்தின் அம்மிக் குழவி போன்ற முண்டத்திற்கும் மலையின் அடிவாரத்திலுள்ள வட்டமான சமவெளி சிவலிங்கத்தின் ஆவுடைக்கும் மலையின் கீழ்ப்பகுதி (மறைந்திருப்பது) சிவலிங்கத்தின் கீழ்ப்பகுதிக்கும் ஒப்பீடு செய்யப்படுகின்றன. சிவலிங்கத்தை வணங்குவதன் மூலம் சிவனின் உறைவிடமாகிய கைலாயத்தையும் அதில் உறைந்திருக்குய சிவனையும் வணங்குவதாக நம்புகின்றனர். இரண்டாவது கருத்தாக : சிவலிங்கம் சிவனின் ஐந்தொழில்களில் முக்கியமானவையாய்க் கருதப்படும் படைத்தல், காத்தல், அழித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மூன்று தொழில்களைக் குறிப்பதாய் கருதப்படுகின்றது. சிவலிங்கத்தின் கீழ்ப்பகுதி படைத்தற் தொழிலையும், ஆவுடை காத்தற் தொழிலையும் மேலுள்ள முண்டம் அழித்தற் தொழிலையும் குறிக்கின்றன, சிவலிங்கத்தை வழிபடுவதன் மூலம் சிவனுடைய மூன்று முகங்களையும் தரிசித்து அவனுடைய அருளைப் பெற முடிவதாய் நம்புகின்றனர். வேறு சில காரணங்களும் இருக்கலாம்.

சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் சமய தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான சைவர்களாகின்றனர் என்பது எம்மிடையே நிலவும் கருத்து. சைவ சமயதீட்சை மந்திரங்கள் (சிவதீட்சை மந்திரங்கள்) பின்வருமாறு உள்ளன : பஞ்சப் பிரம மந்திரங்கள்

ஓம் விநாயகாய நமக
ஓம் சிவாய நமக
ஓம் உமாதேவியை நமக
ஓம் சரவணபவாய நமக
ஓம் நாராயணாய நமக
ஓம் சிவசூரியாய நமக

மேலுள்ள ஆறு வரிகளும் இந்து சமயத்தில் அடங்கும் ஆறு வழிபாட்டு நெறிக்குரிய மூர்த்தங்களைக் குறிக்கின்றன. இந்த மந்திரத்தை தீட்சை பெற்ற ஒவ்வொரு சைவரும் நாளாந்தம் செபம் பண்ணுகிறான். அதனால் இறையருள் கிடைக்கின்றது. இந்த மந்திரத்தை நாளாந்தம் செபித்துக் கொண்டு, நாங்கள் இந்துக்களல்ல, நாங்கள் சைவர்கள், இந்துக்கள் என்றால் கள்வர் என்பது அர்த்தமற்றது.

சிவன்தான் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான முழுமுதற் கடவுள். சிவனை மற்றைய தெய்வங்கள் எல்லாம் வணங்குகின்றன. எனவே மற்றைய தெய்வங்களெல்லாம் சிவனுக்குக் கீழ்ப்பட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும், அதனால் சைவசமயமே முதற் சமயம், மேலான சமயம் என்பதும், எமது சமயத்தை நாங்கள் தேவையற்றுப் புகழ்ந்துரைப்ப தாகும். "ஒன்றே உலகம் ஒருவனே தேவன்" என்ற தெய்வீகக் கோட்பாட்டிற்கு முரணானது. இது ஒற்றுமையில் வேற்றுமையை ஏற்படுத்தி வீண் பகைமையை உண்டு பணணி பிரச்சினைகளை உருவாக்க உதவுமே தவிர வேறெந்தவொரு நன்மையையும் ஏற்படுத்தப் போவதில்லை. சைவ சமயத்தவர்கள் மற்றைய சமயங்களை ஒருபோதும் வெறுப்பதில்லை. மற்றைய சமயத்தை அழிக்க முற்படுவதில்லை. மற்றைய சமயத்தைத் தூற்றுவதில்லை., தாழ்த்துவதில்லை. தமிழர்கள் எப்பொழுதும் மற்றைய சமயத்தை மதிப்பவர்கள், அனுசரித்துப் போபவர்கள். அதன் வெளிப்பாடுதான் இன்று கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச செல்லும் சைவ மக்களின் பெருக்கம். இவ்வாறான ஒரு சாத்வீக சமயத்தில் இருந்து கொண்டு, இந்து சமயத்துக்குப் புறம்பான சமயங்களையே அனுசரித்துப் போகவேண்டிய இன்றைய காலகட்டத்தில், இந்து சமயத்துக் குள்ளேயே பிளவை ஏற்படுத்தும் குரலை என்னவென்று வொல்லுவது? எதற்காகவென்று எண்ணுவது? சிந்திக்க வேண்டும்.

சக்தியை வழிபட்ட இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் அவர்களும் முருகனை வழிபட்ட அரணகிரிநாதரும், நாராயணனை வழிபட்ட ஆழ்வார்களும் ஆற்றிய ஆன்மீக, தெய்வீக, சமூக அளப்பரிய சேவைகளையும் அதனால் தமிழ் இனம் பெற்ற பலாபலன்களையும் மறுக்க முடியுமா? அன்றி மறைக்கத்தான் முடியுமா? இவர்களெல்லாம் சைவ சமயத்தைச் சாராதவர்கள், சிவனை முழுமுதற் கடவுளாய்க் கொள்ளாதவர்கள் என்பதற்காக இவர்களால் கிடைக்கப்பெற்ற அரும்பெரும் பலாபலன்களை, அறிவுப் பொக்கிசங்களை உதாசீனம் பண்ணலாமா? இவர்களைப் பின்பற்றிய, இவர்களைப் போற்றிய, இவர்களுடைய சேவையைப் பெற்ற தமிழ் மக்களை, சைவ மக்களை அறிவிலிகள் என்றோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்துக்குத் துரோகம் இழைத்தவர்கள் என்றோ சொல்ல முடியுமா? இந்து வேறு சைவம் வேறு என்ற கோசத்தினதும் தமிழர் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்கள் என்ற பரப்புரையினதும் பாதகமான எதிர்விளைவை தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் சைவசமயம் தவிர்ந்த மற்றைய பிரிவினர் தங்கள் ஆலயங்களில் சிவலிங்கத்தையும் வைத்து வணங்குகின்றனர். சைவ சமயத்தவர்கள் தங்களுடைய ஆலயங்களில் மற்றைய மூர்த்திகளையும் வைத்து வணங்குகின்றனர். இது இந்து சமயத்தின் பொதுத்தன்மை, இந்து சமயத்தின் சிறப்பு. இந்தச் சமரசத்தாலும், இந்தப் புரிந்துணர்வாலுமே இந்து சமயம் என்ற மாபெரும் சக்தி இப்பூவுலகில் நிமிர்ந்து நிற்கின்றது, நிமிர்ந்து நிற்பது மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரந்து வளர்ந்து செல்கின்றது. இதை நாம் எல்லோரும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழராகிய நாம் எமது இனத்தின் மத்தியில் சைவம் வேறு இந்து வேறு என்று சொல்லுவது, **"யானை தன்தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிக் கொண்டு"** அவஸ்தைப்படும் செயலுக்கு ஒப்பாகும். பிறப்புரிமை இழந்து, வாழ்வுரிமை இழந்து, அரசியல் சமூக உரிமைகளை இழந்து, அநாதைகளாக, ஏதிலிகளாக வாழ்ந்த பூமியை விட்டு வந்து, வாழ்வு தேடி, நிம்மதி தேடி, முன்னேற்றம் தேடி ஏங்கிக்கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழர் மத்தியில், இப்படியான ஒரு விசமப் பிர்சாரத்தை மேற்கொண்டிருப்பவர்களுடைய நோக்கம் என்ன? என்பதைத் தமிழர் கண்டறிய வேண்டும். புலம்பெயர் நாடுகளில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் இப்படியான பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு உதாரணமாக தமிழ் நாட்டில் அண்மையில் கலைஞர் கருணாநிதி அவர்கள் கூறிய கூற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம், "இந்துக்கள் என்றால் **"கள்வர்"** என்பது பொருளாகும்" என்று கூறியமை பெரும் சர்ச்சைக்குள்ளாகியதோடு மக்களின் எதிர்ப்பையும் பெற்றிருந்தது. கலைஞர் ஓர் அரசியல் வாதி, ஒரு நாஸ்திகன், அவர் தனது அரசியல் இலாபம் கருதி அவ்வாறு சொல்லியிருக்கலாம். ஆனால் புலம்பெயர் நாடுகளில் இவ்வாறான ஒரு பிரசாரத்தை மேற்கொள்ளுவதற்கான காரணம் என்ன? அவர்களுடைய நோக்கம் என்ன? என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஈழத்திலும் இந்து சமயம் என்ற பெயருக்கு எதிரான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. **இந்து சமயம்** என்றிருந்த பாடம் **சைவநெறி** என்று மாற்றப்பட்டிருப்பதை இதற்கு உதாரணமாய்க் கொள்ளலாம்.

அவதாரபுருசர் என்று நம்பப்படும் பகவான் சத்யசாயி பாபா அவர்கள் "அன்பு" எனும் சக்தியை மையமாக வைத்து உலக மக்களை ஒன்று திரட்டிய ஒரு பெரிய மகான் ஆவார். இவர் நாடு, இனம், மதம் மொழி, பண்பாடு, அரசியல் அத்தனையையும் கடந்து இத்தனை வேற்றுமைகளுக்குள்ளும் ஒற்றுமையைக் கண்டு சாயி பக்தர்கள் என்ற ஒரு மிகப்பெரிய சனத்திரளை (பல கோடி மக்கள்) உலகம் முழுவதும் அடங்கலாக உருவாக்கியுள்ளார். சாயி பக்தர்கள் தமக்கிடையே உள்ள அத்தனை வேற்றுமைகளையும் மறந்து சாயிபக்தர் என்ற ஒரே எண்ணத்தோடு பகவானுடையை போதனை யைப் பின்பற்றி மனிதகுல நிம்மதிக்காக உழைத்து வருகின்றனர். இதனால் உலகமே பயன் அடைந்து வருகின்றது என்பது வெள்ளிடை மலை. இவ்வாறான வளர்ச்சிகள் தான் இன்று உலகத்துக்கு அவசியம் தேவைப்படுகின்றன. இவ்வாறான வளர்ச்சிகளினாற்தான் உலகத்தில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி மனித குலத்துக்கு நிம்மதியான வாழ்வை அளிக்கமுடியும். நிம்மதியான வாழ்வுக்குத்தான் உலக மக்கள் இன்று ஏங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றார்கள். இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறி உலக நாடுகளில் தஞ்சம் புகுந்திருப்பதும் நிம்மதியான வாழ்வைத் தேடிய நிகழ்வே ஆகும். இந்நிலையில் சைவத் தமிழர்களை இந்து என்ற ஒரு மகாசக்தியிலிருந்து பிரித்து சைவம் என்ற ஒரு சிறிய வட்டத்துக்குள் வைக்க முயல்வது குறுகிய மனப்பான்மை கொண்ட சுயலாபந்தேடும் முயற்சியாகவே கருதப்பட வேண்டும்.

உலகம் பூராகவும் உள்ள சைவ மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டினாலும், இந்து சமயம் என்ற மாபெரும் சக்தியின் ஒரு சிறிய மூலையளவுக்குக்கூட பங்கு வகிக்கச் செய்ய முடியாது. அப்படிப்பட்ட எம்மால் தனித்து நின்று என்னத்தைச் சாதிக்க முடியும்? எதுவும் முடியாது. நாங்கள் இந்துக்களல்ல சைவர்கள் என்று கூறி எதையோ சாதிக்கப் போகிறோம் எனக் கொடுக்கை வரிந்து கட்டிக்கொண்டு புறப்படுபவர்கள் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது உலகத்திலுள்ள சைவ மக்கள் "நாங்கள் இந்துக்களல்ல, சைவர்கள்" என்பதை ஏற்றுக் கொண்டு ஒருபோதும் கோசமிடுபவர்களுடன் ஒன்று சேரமாட்டார்கள், காரணம் சைவத் தமிழர்கள் புத்திசாலிகள் .

சைவ சமயத்தை வளர்ப்பதையோ, சிவ வழிபாட்டை ஊக்குவிப்பதையோ சிவன் கோயில்களை அதிக அளவில் புதிதாக அமைப்பதையோ, பழையனவற்றைப் புனருத்தாரணம் செய்வதையோ எந்தவொரு சைவ மகனும் எதிர்க்கப் போவதில்லை. அதற்கு எப்பொழுதும் ஆதரவு கிடைக்கும். சைவ சமயத்தை வளர்ப்பதற்காக தமிழர்கள் இந்து சமயத்திலிருந்து பிரிந்து போக வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அதற்கான அவசியம் அறவே கிடையாது. இந்து சமயத்தின் ஓர் அங்கமாய் இருப்பதனால் சைவ சமய வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது என்பது தேவையற்ற ஒரு கற்பனையாகும். அதில் எந்தவித உண்மையும் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தில் ஓர் அங்கமாயிருப்பது சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பதே யாதார்த்தமாகும். சைவ சமயம் இந்து சமயத்தின் ஓர் அங்கமாய் இருப்பதனால் சைவ சமயத்தின் தனித் தன்மை கெட்டுப்போவதற்கு வாய்ப்பு அறவே இல்லை. சைவ சமயத்தின் வளர்ச்சி இந்து சமயத்தின் முன்னேற்றத்திற்கும், இந்து சமயத்தின் வளர்ச்சி சைவ சமயத்தின் முன்னேற்றத்திற்கும் பரஸ்பரம் உதவியாக இருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை.

கடந்தகால வரலாற்று நிகழ்வுகளைப் பார்க்கும் போது, வைணவ சமயத்தின் வளர்ச்சி இடையிடையே சைவ சமயத்தின் வளர்ச்சியைத் தடுத்தது, சைவத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தது என்பதில் உண்மை இருக்கின்றது. வைஸ்ணவ சமயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய இராமானுஜருடைய காலத்தில் (1018 - 1137) சைவசமய வளர்ச்சி பின்னடைவைச் சந்தித்தது என்பது உண்மைதான். வைஸ்ணவ சமயத்தை வளர்ப்பதற்கு இராமானுஜர் மேற்கொண்ட விடாமுயற்சியால் சைவசமய வளர்ச்சியில் இடையூறுகள் ஏற்படத்தான் செய்தன. இருந்தபோதும் வைஸ்ணவ சமய வளர்ச்சியால் தமிழர் மத்தியில் சமூகச் சீர்திருத்தம் ஏற்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை. உதாரணமாக சாதி அடிப்படையில் சமய உரிமை மறுக்கப்பட்டிருந்த விடயத்தில் மாற்றம் ஏற்பட்டது. பிராமணருக்குத்தான் மோட்சம் கிடைக்கும். மற்றை யோருக்குக் கிட்டாது என்றிருந்த கொள்கையில் மாற்றம் ஏற்பட்டு, இறையருள் எல்லோருக்கும் கிடைக்கும், மோட்சம் சாதி வேறுபாடின்றிக் கிடைக்கும் என்ற கொள்கை நிலைநிறுத்தப்பட்டது. அதாவது தீமையிலும் ஒருவகை நன்மை ஏற்பட்டது என்பது உறுதியாகும்.

சைவ சமயமும் வைஸ்ணவ சமயமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த் சமயங்களாகையால், வைஸ்ணவ சமயத்தின் வளர்ச்சி சைவ சமயத்தின் வளர்ச்சியை ஓரளவு பாதித்திருந்த பொழுதும், அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சமூகத்துக்குப் பெருந்தீமையை ஏற்படுத்தவில்லை. இதனால் தமிழர்கள் வைஸ்ணவ சமயத்தின் வளர்ச்சியைக் காழ்ப்புணர்ச்சி யோடு பார்க்கவில்லை. ஸ்ரீரங்கத்தின் வளர்ச்சியும் திருப்பதியின் வளர்ச்சியும் இதையே எடுத்துக் காட்டுகின்றன. இருந்தபோதும் சிதம்பரத்தின் வளர்ச்சி வைஸ்ணவர்களால் இடைஞ்சலுக் குள்ளாகியது உண்மைதான். எனினும் இராமேஸ்வரத்தின் வளர்ச்சியில் வைஸ்ணவர்களுடைய பங்கு இருந்தது. இன்றும் இருப்பதை வட இந்தியர்களுடைய யாத்திரையிலிருந்து அறிய முடிகின்றது. இதற்கு இராமபிரானால் அந்தச் சிவலிங்கம் உருவாக் கப்பட்டது எனும் நம்பிக்கை காரணமாய் இருக்கலாம். சைவசமய வழிபாட்டை பிரதிபலிக்கும் சிவலிங்க வழிபாட்டைக் கொண்டுள்ள காசி விஸ்வநாதப்பெருமான் ஆலயம், கைலாயம் ஆகிய ஸ்தலங்கள் வைஸ்ணவர்களின் மத்தியில் இருந்தாலும், அவை பிரசித்தி பெற்று விளங்குவது கண்கூடு. இது சைவத்துக்கும் வைஸ்ணவத்துக்கும் இடையே உள்ள உறவையும் புரிந்துணர்வையும் பிரதிபலிப்பதாயே உள்ளது.

வரலாற்றுக் காலங்களுடனும் வரலாற்றுக்கால நிகழ்வுகளுடனும் இன்றைய நிகழ்காலத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமற்றது. வரலாற்றிலிருந்து சிலபல பாடங்களைப் படித்துக்கொண்டு, அவற்றை தற்காலத்துக்கு ஏற்றபடி பிரயோகப்படுத்த வேண்டுமேயொழிய, வரலாற்றுக்கால நிகழ்வுகளால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சிகளை மனதில் வைத்துக் கொண்டு தற்காலத்தில் செயலாற்ற முயற்சிப்பது அறவே பொருத்தமற்றது. வரலாற்றுக் காலத்திய அரசியல், பொருளாதார, சமூக, சமய, நீதித்துறை, போக்குவரத்து, செய்தித்தொடர்பு ஆகியவற்றின் கட்டமைப்பு தற்காலத்துக்கு முற்றிலும் வேறுபட்டது. இன்று உலகம் ஒரு கிராமமாக மாறிக்கொண்டு வருகின்றது. இளைய தலைமுறையினரின் சிந்தனைகள் செயற்பாடுகள் முற்றிலும் வேறுபட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15ம் நூற்றாண்டிற்குப் பிற்பாடு வந்த 500 ஆண்டுகள் ஐரோப்பியர்கள் ஆசியாவிற்கும் ஆபிரிக்காவிற்கும் படையெடுத்து அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தித் தமது சமயம் பரப்பிய காலமாகும். இன்று ஆசியர்களும் ஆபிரிக்கரும் மேற்குலகிற்குக் குடிபெயர்ந்து சென்று தங்களுடைய சமயம், கலாசாரத்தை நிலைநிறுத்தி வருகின்றனர். இந்து சமயம் தென் அமெரிக்க, வட அமெரிக்க கண்டத்திலுள்ள நாடுகளில் எவ்வளவிற்குப் பரவியுள்ளது என்பதற்கு ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும் உருப்பெற்றுள்ள இந்து ஆலயங்கள் சாட்சியாகும்.

இலங்கையில் நாவலப்பிட்டியில் வாழ்ந்து கொண்டு சைவ நெறியையும் ஆன்மீகத்தையும் வளர்த்து வந்த அமரர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் கனடாவில் ஒரு ஆத்மஜோதி இல்லம் அமைத்துக் கொடுத்து சைவநெறி, ஆன்மீக வளர்ச்சிக்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளாரென்றால், இது எப்படி நடந்தது? எல்லாம் உலகத்தில் ஏற்பட்டு வரும் காலவோட்டத்தின் மாற்றங்கள் தான் காரணமாகும். அதைவிடுத்து, இது ஒரு சிலருடைய முயற்சியாய் ஏற்பட்டது என்று கருதப்படாது. இன்று இந்துக் கோயில்களில் திருநீறு அணிந்த சைவப்பிராமணரும் நாமமிட்ட வைஸ்ணவப் பிராமணர்களும் ஒன்று சேர்ந்து மந்திரம் ஓதுவதையும் நித்திய கருமங்களை மேற்கொள்வதையும் பார்க்க முடிகின்றது. சைவம் வேறு வைஸ்ணவம் வேறு என்று அடிபட்டுக் கொண்டிருந்தால் இது நிகழமுடியாது. "இந்து சமயத்துள் இரண்டும் அடங்கும்", என்று வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டதனாலேயே இது சாத்தியமாகின்றது.

கனடாவில், அமெரிக்காவில் அமைந்துள்ள விநாயகர், முருகன், அம்மன், நாராயணன், சிவன், ஐயப்பன் ஆலயங்களுக்கு தமிழன், ஹிந்திக்காரன், மராட்டியன், குஜராத்தி, மலையாளி, தெலுங்கன், கன்னடக்காரன், வங்காளி, பீகாரி, ஒரிஷாக்காரன் அத்தனை பேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வழிபட்டு வருகின்றார்களே! இது எப்படி நிகழ்கின்றது? எல்லோரும் இந்துக்கள் என்ற உணர்வால் நிகழ்கின்றது. இதை "தமிழர் இந்துக்கள் அல்லர், சைவர்கள்" என்று கோசம் எழுப்புபவர்கள் அறியவில்லையா? நிச்சயமாக அறிவார்கள். இங்கெல்லாம் சிவன் கோயில்களை நடாத்துபவர்கள் இத்தனை இனத்தவரும் வரும் போது உள்நுழைவதற்குத் தடைபோடுகின் றார்களா? இல்லை! ஒருபோதுமில்லை!! அவர்களை வரவேற்று, ஆங்கிலத்தில் கதைத்துப் பேசி விளக்கமளித்து அத்தனையும் செய்து அனுப்பி வைக்கிறார்கள். அவர்கள் சென்ற பிற்பாடு தமிழர்களிடம், "நாங்கள் இந்துக்களல்லர், நாங்கள் சைவர்கள், இந்து என்ற சொல்லையே நாங்கள் உச்சரிக்கப்படாது" என்று கோசமிடு கின்றனர். நன்றாய் இருக்கு வியாபாரம்! இவர்களுடைய செயற்பாடுகளைச் சந்தர்ப்பவாதமாய்க் கருதமுடியுமே ஒழிய, கொள்கையோடு செயற்படுவதாய்க் கருதமுடியாது. எனவே இவர்களுடைய செயற்பாடுகள் புறக்கணிக்கப்பட வேண்டியவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 4

இந்து சமயம் நூறு கோடி மக்களின் மத்தியில் வேற்றுமையில் ஒற்றுமை கண்டுள்ள ஒரு மாபெரும் சக்தி என்பதற்கும், அதனால் மனித குலம் அடைந்திருக்கும் விபரிக்க முடியாத நற்பலன்களை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவதற்கும் சமஸ்டிப் பொறிமுறையை உதாரணப்படுத்துவது பொருத்தமாக இருக்கும். இந்து சமயத்தை ஒரு சமஸ்டிச் சமயநெறிப் பொறிமுறை என்று அழைப்பது மிகப் பொருத்தம் ஆகும். அரசியலில் சமஸ்டி அரசியற் பொறிமுறை (அரசியல் அமைப்பு) யினால் மனிதகுலம் அடைந்திருக்கும் நற்பலன் கள் அளப்பரியது என்றால் மிகையாகாது.

இன்று உலகத்தில் வல்லரசுகளாக விளங்கும் ஐக்கிய அமெரிக்க அரசு (U. S. A), ருஷ்யா ஆகியவற்றை நோக்கினாலும் சரி, அரசியல் சமூக உறுதிப்பாட்டுடன் விளங்கும் கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், சுவிற்சர்லாந்து, இந்தியா போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டாலும் சரி, இவை போன்று அரசியல் சமூக உறுதிப்பாட்டுடன் விளங்கும் வேறு பல நாடுகளை எடுத்துக் கொண்டாலும் சரி அங்கெல்லாம் மக்கள் சிறப்புடன், அதாவது ஓரளவு நிம்மதியாய் வாழ்வதற்கு அடிப்படைக் காரணம் இவை வேற்றுமையில் ஒற்றுமை கண்டிருப்பதாகும். சற்று விளக்கமாய்ச் சொன்னால், வேறுபட்ட மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, இறைநம்பிக்கை, நிறம் என்பவற்றைக் கொண்ட சமூகங்களை அந்தந்த நாட்டின் தேசியத்துவ உணர்வினால் ஒன்றிணைத்து, ஒவ்வொரு இனமும் தமது தனித் தன்மையைப் பேணவும் அதேவேளையில் எல்லோரும் ஒற்றுமையாய் வாழவும் சமஸ்டி அரசியற் பொறிமுறை பெரும் உதவி புரிந்துள்ளது என்றால், இதை யாரும் புறக்கணித்து விடமுடியாது. இந்தப் பொறிமுறையைக் கண்டுபிடித்த அரசியற் சமூக விஞ்ஞானிகள் பாராட்டுக்கு உரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இவ்வுலகின் சில பகுதிகளிலாவது மனிதகுலம் ஓரளவிற்காவது அமைதியாய் வாழமுடிகின்றது என்றால், அதற்கு அடிப்படைக் காரணம் வேற்றுமையில் ஒற்றுமை காணக்கூடிய சமஸ்டி முறை கடைப்பிடிக்கப்படுவதே ஆகும். அந்தவகையில், இந்து சமயம் வேற்றுமையில் ஒற்றுமை கண்ட ஒரு சமய சமூக சமஸ்டி முறையாகும் என்றால், அதற்கு மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. இந்து சமயம் ஆறு வேறுபட்ட சமய நெறிகளையும், பல்வேறு இனங்களையும் மொழிகளையும் கொண்ட நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் சமுத்திரத்தை இந்துக் கலாசாரம், பண்பாடு, சமயம் என்ற ஒரு குடையின் கீழ் ஒன்றிணைத்துள்ளது என்றால் இதை வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டினால் மட்டும் போதாது இந்தச் சமய, கலாசார பண்பாட்டுச் சமஸ்டி அமைப்பு ஒரு போதும் குலைந்து போகாதபடி பார்த்துக் கொள்ளுவதற்கு உறுதுணையாய் இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், இவ்வுலகில் மனித குலத்தின் அமைதியான வாழ்விற்குப் பங்காற்றிய பெரும் பாக்கியம் கிடைக்கும். இதைச் செய்யமுடியாத அரசியல், சமூகவாதிகளினாற் தான் உலகம் இன்று அவஸ்தைக்கு உட்பட்டுத் தவிக்கின்றது.

இவ்வாறு அவஸ்தைக்கு உட்பட்டுத் தவிக்கும் இலங்கை போன்ற பல நாடுகள், அங்கு வாழும் இனங்களுக்கிடையே நிலவும் சமூக, சமய, மொழி, கலாசாரப் பண்பாட்டு வேற்றுமைகளில் ஒற்றுமையைக் கண்டு, அவைகளை ஒரு குடைக்கீழ் வாழவைக்க முடியுமானால், அதுவே மனித குலத்துக்கு அவை செய்யக்கூடிய மாபெரும் சேவையாக இருக்கும். இவ்வாறான அரும்பெரும் காரியங்களைச் செய்வதற்கு இந்து சமயம் போன்ற சமய, கலாசார, பண்பாட்டுச் சமஸ்டிப் பொறிமுறைகளை முன்னோடியாகப் பின்பற்றலாம். இவ்வாறான அரும்பெரும் சாதனைகளைப் புரிவதற்குப் பகவான் சங்கராச்சாரியார் போன்ற அவதார புருஷர்களை இவ்வுலகம் வேண்டி நிற்கின்றது. அவர்களை அனுப்புவது என்பது ஆண்டவனின் சித்தமாகும். இவ்வாறு உலகம் சமாதானத்தை வேண்டி நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில், ஏற்கனவே உள்ள அமைதியையே கெடுப்பது போன்று, இந்து வேறு சைவம் வேறு என்று குரல் கொடுப்பவர்களையிட்டு தமிழ்ச் சமூகம் விழிப்பாயிருக்க வேண்டும்.

தமிழர் மத்தியில் இந்துமாமன்றம், இந்துசமயப் பேரவை, இந்துக் கலாசார மன்றம் போன்ற அமைப்புக்கள் காணப்படுவதுடன், அவை பல்லாண்டுகளாக தமிழர்களுடைய சமயம், கலை கலாசாரம், பண்பாடு என்பவற்றின் வளர்ச்சிக்காகப் பெரும் பணி ஆற்றி வருவது அனைவரும் அறிந்த விடயம். தமிழர்களுடைய கோயில்களெல்லாம், அவை விநாயகர் கோயிலாக இருந்தாலும் சரி, முருகன் கோயிலாக இருந்தாலும் சரி, அம்மன் கோயிலாக இருந்தாலும் சரி, ஐயப்பன் கோயிலாக இருந்தாலும் சரி, பெருமாள் கோயிலாக இருந்தாலும் சரி, சிவன் கோயிலாக இருந்தாலும் சரி பொதுவாக இந்துக் கோயில்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

உலகிலுள்ள தமிழர்களல்லாத அனைத்து மக்களும் தமிழர்களை இந்துக்களாக அடையாளப்படுத்துகிறார்கள். அது தான் இன்றைய யதார்த்தம். தமிழர் இந்துக்களல்லர் அவர்கள் சைவர்கள், சைவம் இந்து சமயத்திலிருந்து வேறுபட்டது என்று எவரும் கருதுவதில்லை. இன்று புலம்பெயர் நாடுகளில் அமைக்கப் பட்டிருக்கும் தமிழர்களுடைய கோயில்கள் அனைத்தும் இந்துக் கோயில்கள் என்ற பெயருடனேயே சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட் டுள்ளன. அரசாங்கத்தினால் வழங்கப்படும் மானியங்கள் அனைத்தும் இந்துக் கோயில்கள் என்ற பிரிவின் கீழ்த்தான் பெறப்படுகின்றன. இந்நிலையில் தமிழர்கள் இந்துகளல்லர், அவர்கள் சைவர்கள் என்று கோசம் எழுப்புவதும் இந்து என்ற பெயரைத் தமிழர்கள் பயன்படுத்தக்கூடாது என்பதும் எந்த வகையில் நியாயமானது? இதனால் தமிழருக்கு என்ன நன்மை ஏற்படப் போகின்றது? இவர்களின் சைவக் கோசம் **"உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்"**, என்ற நிலைக்கே தமிழரை இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளை ஒரு புறம் வைத்து விட்டு இலங்கையைப் பார்த்தால், இலங்கையில் சமய பாடம் கல்வித்திட்டத்தில் ஒரு கட்டாய பாடம். அதில் தமிழர்களுடைய சமயம் **"இந்துசமயம்"** என்றும், தமிழர்களுடைய கலாசாரம் **"இந்துக் கலாசாரம்"** என்றும் இதுகாலவரை பெயரிடப்பட்டிருந்தன. தற்பொழுது **இந்து சமயம்** என்பது **சைவநெறி** என்று மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின் அடிப்படை நோக்கம் என்ன என்பதையும் இதன் நீண்டகால விளைவு என்னவாயிருக்கும் என்பதையும் தமிழ்மக்கள் ஆராய்ந்து அறிய வேண்டியது அவசியமாகும். இதைப் பாராமுகமாய் விடக்கூடாது.

நான் 1962ம் ஆண்டு க.பொ.த (சாதாரண) பரீட்சைக்குத் தோன்றிய போது இந்து சமயத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகமாக வித்துவான் வேந்தனாரினால் எழுதப்பட்ட "இந்து சமய பாடம்", என்னும் பெயரிலான புத்தகத்தையே மாணவர்கள் பயின்றார்கள். இலங்கையில் "இந்து மாமன்றம்" என்னும் ஒரு பெரிய அமைப்பு தமிழர்களுடைய சமய, கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்காக இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அது மட்டுமல்ல தமிழர்களுடைய சமய, கலை கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டிருக்கும் அரசாங்க அமைச்சின் பெயர் **"இந்து சமய, கலாசார அமைச்சு"**, என்றே பெயரிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியிலிருந்து வந்தவர்கள் இந்து வேறு சைவம் வேறு என்றும், நாங்கள் இந்துக்களல்ல என்றும் கனடாவில் குரல் எழுப்புவதன் நோக்கம் என்ன? இவர்கள் இதுவரை யாரும் கண்டிராத ஒன்றைக் கண்டுபிடித்து விட்டார்களா? இந்து என்பதற்கு **"கள்வர்"** என இன்னொரு பொருள் இருப்பதற்காக, பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் மகாசக்தி வாய்ந்த ஒரு அற்புதமான, வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட **இந்து** எனும் பெயரை அகற்றிவிட வேண்டுமென்ற தேவை தமிழ் மக்களுக்கு இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்ராறியோ றிச்மன்ட்கில் பகுதியில் அமைந்திருக்கும் தமிழர்களுடைய கோயில் ஆரம்பத்தில் றிச்மன்ட்கில் **"கணபதி கோயில்"**, என்று பெயரிடப்பட்டிருந்தது. பிற்பாடு அங்கு செல்லும் தமிழர்களல்லாத மக்களையும் கருத்திற் கொண்டு எல்லோரும் விரும்பத்தக்க முறையில் **"றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்"** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது வேற்றுமையில் ஒற்றுமை கண்ட செயற்பாடு மட்டுமல்ல, பாராட்டுக்குரிய செயலுமாகும். இந்தக் கோயிலில் இந்து சமயத்துள் அடங்கும் ஆறு பிரிவினதும் மூல மூர்த்திகள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம் (Richmond Hill Hindu Temple) என்ற பெயர் சூட்டப்பட்டது மிகப் பொருத்தமானதே. இதனால் கனடா வாழ் தமிழர்களுடைய பலம் அதிகரித்துள்ளதேயொழிய சிறிதுகூடப் பாதிக்கப்படவில்லை.

பல இன, மத, மொழி, கலாசார மக்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே கனடாவின் தாரக மந்திரம். அந்த மந்திரத்தின் அடிப்படையில் எழுந்து நிற்கும் நாடு தான் கனடா. இந்த நாட்டிற்கு வந்து இங்கு வாழ்ந்து கொண்டு எவரேனும் இந்த நாட்டுத் தாரக மந்திரத்தை உடைப்பது போன்று செயற்படுவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது இந்நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும். தமிழர் இந்த விடயத்தில் விழிப்படைய வேண்டும். அன்றியும் புத்தி சாதுரியத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

கனடாவில் உள்ள பெரிய சிவன் கோயிலை எடுத்துக் கொண்டால், இங்கு சிவனைக் குறிக்கும் சிவலிங்கம் மூலமூர்த்தியாய் இருக்க பரிவார மூர்த்திகளாக விநாயகர், துர்க்கை, அம்மன், முருகன், ஸ்ரீரங்கப் பெருமான், ஞானவயிரவர் ஆகியோர் அமர்ந்துள்ளனர். இங்கு இந்து சமயத்தில் அடங்கும் அத்தனை மூர்த்திகளும் பிரதிட்டை செய்யப்பட்டிருப்பது, இது ஓர் இந்து ஆலயம் என்பதற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனால் இங்கு ஆறு பிரிவினரும் சென்று வழிபடுகின்றனர். அதாவது தமிழர்களல்லாதவர்களும் சென்று வழிபடுகின்றனர். காணிக்கைகள் செலுத்துகின்றனர்.

கோயில்களின் பெயர்கள் எதுவானாலும், அதாவது விநாயகர் கோயில், விஷ்ணு கோயில், அம்மன் கோயில், முருகன் கோயில், சிவன் கோயில் என்று அழைக்கப்பட்டாலும், அவையெல்லாம் கனடா அரசினால் இந்துக் கோயில்களாகவே கருதப்படுக்கின்றன. இவையெல்லாம் இந்துக் கோயில்கள் என்றே கனடாவில் சட்ட ரீதியான பதிவைக் கொண்டுள்ளன.

இவ்வாறு இருக்கும் போது தமிழர்கள் சைவர்கள், அவர்கள் இந்துக்களல்லர், இந்து என்ற பெயர் கொண்டு தமிழர்களை அழைக்கப்படாது என்பது பொருத்தமாகாது. கனடா அரசிடமிருந்து இந்துக் கோயில் என்ற பெயருடன் அனுமதியைப் பெற்று, மானியத்தையும் பெற்றுக்கொண்டு, தமிழர்கள் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்கள், இந்து என்ற பெயரைப் பயன்படுத்துவது தவறு என்பதும் அது கேவலமுமாகும் என்பதும் ஏற்புடைத்தல்ல. **இந்து** என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். இதற்கு **கள்வர்** என்று ஏன் தமிழில் கருத்துக் கொடுக்க வேண்டும்? இது தேவையற்றது. இது ஓர் இரட்டை வேடச் செயற்பாடாகவே கருதப்படவேண்டும்.

ஒரு காலகட்டத்தில் சைவசமயத்தின் வளர்ச்சிக்கு இடைஞ்சலாயிருந்த வைஷ்ணவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய நாராயணன் இன்று பல்வேறு பெயர்களில் தமிழர்களின் கோயில்களில் விக்கிரகங்களாகவும் படங்களாகவும் வைத்து வழிபாடு செய்யப்படுகின்றார். விஷ்ணுவின் அவதாரம் என்று நம்பப்படும் இராமபிரானினதும் அவருடைய இராமநாம ஜெபத்தில் இயங்கும் மகாபக்தன் ஆஞ்சனேயரினதும் படங்கள் விக்கிரகங்கள் தமிழர்களின் கோயில்களில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வழிபாடு அண்மைக் காலத்தில் தமிழர் மத்தியில் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இதற்கான காரணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினால் இளஞ்சந்ததியினர் வரலாற்று நிகழ்வுகளை அறிந்திராமை, அறிந்திருந்தும் தேவையற்ற காழ்ப்புணர்ச்சியை வளர்த்துக்கொள்ள விரும்பாமை, பிற்சந்ததியினரின் உயர்ந்த புரிந்துணர்வு ஆற்றல், உலகம் சமூகரீதியாகச் சுருங்கிவருதல், வேறுபட்ட கலாசார, சமய, பண்பாட்டு இனங்களுக்கிடையில் ஏற்பட்டு வரும் புரிந்துணர்வும் சேர்ந்த வாழ்வும், எந்த வகையிலாவது தேவையைப் பூர்த்தி செய்யும் ஆர்வம் என்பன காரணங்களாக அமையலாம். காரணங்கள் எதுவாயிருப்பினும் தமிழர்களுடைய கோயில்களில் விஷ்ணுவினுடையதும் அவரது அவதாரங்களுடையதும் வழிபாடு தமிழர் மத்தியில் அதிகரித்து வருவதை பிழை என்று சொல்ல முடியாது. ஆஞ்சநேயர் வழிபாடு இன்று தமிழர் மத்தியில் வேகமாகப் பரவி வருகின்றது. ஆஞ்சநேருக்கும் சைவத்துக்கும் என்ன தொடர்பு? இவற்றையெல்லாம் காலத்தின் கோலமாயே கருத வேண்டும்.

இந்து சமயம் என்ற மாபெரும் அமைப்பில் முக்கிய பங்கு வகிப்பது வைஷ்ணவ சமயம். அதற்கான காரணம் அந்த வழிபாட்டு நெறியைப் பின்பற்றுபவர்களின் சனத்தொகை மிகப்பெரியது. இந்துசமயமெனும் மாபெரும் சக்தியின் பிரதான அங்கமான வைஷ்ணவ சமயத்தின் முழுமுதற் கடவுளைத் தமிழர்கள் தங்களுடைய கோயில்களில் வைத்து வணங்கிக்கொண்டு, தமிழர்கள் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்கள், எனவே இந்துக்கள் என்ற பதத்தை அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்பதன் நோக்கம் என்ன? அறியாமையா? அல்லது சொந்தத் தேவையா? தமிழ் மக்கள் இந்த விடயத்தை ஆராய வேண்டும். ஏமாறுபவன் இருக்கும் வரைதான் ஏமாற்றுபவன் இருப்பான். தமிழன் ஏமாளிகள் அல்ல என்பதைத் தமது செயற்பாடுகள் மூலம சந்தர்ப்பவாதிகளுக்குப் புகட்டவேண்டும். அப்பொழுதுதான் தேவையற்ற இவ்வகைக் குழப்பங்களிலிருந்து தமிழினத்தைக் காப்பாற்ற முடியும் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 5

"தமிழர் சைவர்கள், இந்துக்களல்லர், இந்துக்கள் என்ற பெயரைப் பயன்படுத்துவது நம்மை நாமே தாழ்த்திக் கொள்வதாகும்," என்று கூறுபவர்கள், இன்னொரு உண்மையையும் கருத்திற் கொள்ள வேண்டும். இராமபிரான் விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்று நம்பப் படுகின்றது. தமிழ்க் காவியங்களில் ஒன்றாகிய கம்பராமாயணத்தின் படி இராவணனை அரக்கன் என்றும், பெண்பித்தன் என்றும், பத்துத்தலை கொண்டவன் என்றும் வர்ணிக்கப்படுகின்றது. பத்துத் தலை கொண்ட ஒருத்தன் இருந்தான் என்று கூறும் காவியம், அந்த அரக்கனின் தந்தை, தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர், இனத்தவர் எவராவது பத்துத் தலைகளைக் கொண்டிருந்தனர் என்று கூறவில்லை. இதிலிருந்து வெளிப்படும் ஓர் உண்மை என்ன வென்றால், இராவணன் பத்துத் தலைகள் கொண்டிருந்தான் என்பது ஒரு கற்பனை என்பதாகும். அப்படியானால் அவனுக்கு இருந்தது ஒரு தலைதான். இராவணன் பத்துத்தலைகளைக் கொண்டிருந்தான் என்பதற்கு: அவன் பத்துத் தலைகள் ஒன்று சேர்ந்தால் இருக்கக் கூடிய அறிவு, ஆற்றல், சிந்தனாசக்தி பெற்றவனாய் இருந்திருக்கலாம் என்று கருத்துக் கொள்ளலாம். இராவணனைப் பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர்களின் கருத்தும் இதுவேயாகும். அப்படிப்பட்ட ஓர் ஆற்றல் படைத்தவனை பெண் பித்தன், தர்மத்தை மதிக்காதவன் என்று வர்ணிப்பது சிந்திக்க வேண்டியது.

இராவணன் ஒரு சுத்தத் தமிழன். இவன் ஒரு சிவபக்தன், சாதாரண சிவபக்தனல்ல சிவனிடமிருந்து பல வரங்களைப் பெற்ற மகா சிவபக்தன். சிவனையே தனது இசையினால் உருகச் செய்த ஓர் இசைஞானி. இவன் ஓர் ஒழுக்கசீலன் என்பதற்கு அத்தாட்சியாக சிவனிடமிருந்து பெற்ற வரங்களே போதும். ஒரு நாட்கூட தவறாது சிவலிங்க பூசையில் ஈடுபடுபவன் எவ்வளவு மன ஒடுக்கத்துடன் இருந்திருப்பான் என்பதை சிறு பிள்ளைகூட உணரும். அவனது இறைபக்திக்கும் ஒழுக்கத்துக்கும் ஈடிணை அவனே. இதனாலேயே அவன் ஈஸ்வரன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான். இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்தில் ஈஸ்வரன் என்ற பட்டத்தைப் பெற்றவர்கள் நால்வர். அவர்களாவது; சனீஸ்வரன், சண்டிகேஸ்வரர், நந்தீஸ்வரர், இராவணேஸ்வரன் ஆவர். இதிலிருந்து இராவணேஸ்வரன் எவ்வள விற்குத் தெய்வீகத் தன்மை பெற்றவன் என்பது வெள்ளிடைமலை.

இப்படிப்பட்ட மகா வீரபுருஷனை, தர்ம தேவதையின் சொரூபத்தை தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக பெண்பித்துப் பிடித்த அரக்கன் என்றும், தர்மத்தை மதிக்காதவன் என்றும் கூறி உண்மைக்குப் புறம்பாகப் புனையப்பட்ட கற்பனைக் காவியந்தான் கம்பராமாயணம். தமிழனைத் தாழ்த்துவதும் வீழ்த்துவதுந்தான் இக்காவியத்தின் நோக்கம். இதற்கு உடந்தையாய் இருந்தவர் இராமபிரானைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விஷ்ணுவை முழுமுதற் தெய்வமாய்க் கொண்ட வைஷ்ணவர்கள். தமிழரைத் திட்டமிட்டுக் கழுத்தறுத்தவர்கள். இன்றும் தமிழனுடைய, விசேடமாக இலங்கைத் தமிழனுடைய, கழுத்தைத் திட்டமிட்டு அறுத்துக் கொண்டிருப் பவர்கள். இந்திய அரசைத் தாங்குபவர்கள் இவர்களே. அவ்வாறிருந்தும், இவர்களின் முழுமுதற் கடவுளாகிய நாராயணனையும் அவருடைய அவதாரங்களையும் தமிழர்கள் தமது கோயில்களில் வைத்து வழிபடுகின்றனர். காரணம் நாராயணன் பிரம்மத்தின் சொரூபம் என்று நம்புவதனால் ஆகும்.

நாராயணனை எமது கோயில்களில் வைத்து வணங்கிக் கொண்டு, நாங்கள் சைவர்கள், நாங்கள் இந்துக்களல்லர் என்பது எந்தளவிற்குப் பொருந்தும்! சைவர் என்றால் யார்? நாராயணனையும் அவரது அவதாரங்களையும், ஆஞ்சனேயரையும் வணங்குபவர்களா? இவர்களையெல்லாம் எமது கோயில்களில் வைத்து வழிபட்டுக் கொண்டு, நாங்கள் இந்துக்களல்லர், சுத்தசைவர் என்பதன் நோக்கம் என்ன? இது இரட்டை வேடம் என்பதைத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். முன்னுக்குப் பின் முரணாகச் செயற்பட்டுக் கொண்டு, அதாவது சொல்வதற்கு முரணாகச் செயற்பட்டுக்கொண்டு, அப்பாவி மக்களைக் குழப்பத்திற்கு உள்ளாக்கும் இச்செயல் கண்டனத்துக்கு உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களை இந்து என்ற அமைப்பிலிருந்து பிரித்துப் பார்ப்பதற்கு நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் மேற்சொல்லப் பட்டவையாகத்தான் இருக்கமுடியும். அவற்றைக் கருத்திற் கொள்ளா திருப்பவர்கள், அவற்றை வேற்றுமையாகக் கருதாதவர்கள், வேறு எக்காரணத்துக்காக தமிழரை இந்து என்ற அமைப்பிலிருந்து பிரித்தெடுக்க முயற்சிக்கின்றார்கள்? ஏன் தமிழர் இந்துக்களல்லர் என்று பிரசாரம் செய்கிறார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது. "தமிழர் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்கள், இந்துவுக்கும் தமிழர்களுக்கும் எந்தப் பிணைப்பும் கிடையாது," என்று கூறுபவர்கள், உண்மையாகவே சைவத்தின் மீதும் தமிழர்கள் மீதும் பற்றுக் கொண்டிருந்தால், சைவத்துக்கும் தமிழ் இனத்துக்கும் விசுவாசமுடையவராய் இருந்தால், அவர்கள், அதை நிரூபிக்கும் பொருட்டு, சிவனுக்குத் தனிக்கோயில்கள் அமைக்க வேண்டும். அத்துடன் **இராவணேஸ்வரனுக்கும் கோயில்கள் அமைக்க வேண்டும்.** அதைவிடுத்து பெருமாளுக்கும், இராமனுக்கும் அனுமானுக்கும் கோயில் அமைத்து வழிபட்டுக்கொண்டு, தமிழன் இந்துவல்ல என்று கூறுவதன் நோக்கத்தை, அதாவது உண்மை நோக்கத்தை தமிழ் மக்கள் அறிந்து செயற்பட வேண்டிய நேரம் இதுவாகும். ஏமாளி யிருக்கும் வரைதான் ஏமாற்றுபவன் இருப்பான். எனவே தமிழர்கள் ஏமாளிகள் இல்லை என்பதை நிரூபிப்பது அவர்களின் கடமை.

சைவத்தின் மீதும் தமிழர் மீதும் பற்றுக்கொண்டவர்கள், அவர்களுடைய பற்று உண்மையாயிருப்பின் அவர்கள் செய்வதற்கு நிறையவே தேவைகளுண்டு. உதாரணத்துக்கு முக்கியமான ஒன்றைச் சொல்வதானால், சைவ சித்தாந்தத்திற்கு மாறாக சைவசமயத்துட் புகுந்து புரையோடி இருக்கும் ஒரு பாரதூரமான நிகழ்வு "கோயில்களில் இடம்பெறும் உயிர்ப்பலி அபிசேகம்" ஆகும். சைவசித்தாந்தம் கொலை, புலால் உண்ணல் என்பவற்றை வெறுக்கின்றது. அது மிகப் பெரிய பாவச் செயலாய்க் கருதப்படுகின்றது. அப்படிப்பட்ட ஒரு பாவச் செயல் எப்படி சைவசமயத்துக்குள் புகுந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவின் இருண்டகாலம் என்று சொல்லப்படும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில், அதாவது பண்பான அரச குடும்பத்தைச் சாராத கயவர்களின் ஆட்சி நடைபெற்ற காலப் பகுதியில் சைவசமயம் வீழ்ச்சிகண்டு, நிலைகுலைந்து நின்றது. இக்காலத்தில் சுயநலம் கருதி மக்களைப் பிரித்து ஆழுவதற்காக, மக்களிடையே குழப்பத்தையும் பாகுபாட்டையும் ஏற்படுத்தும் பொருட்டுப் புகுத்தப்பட்டது தான் தற்போதுவரை நீடிக்கும் படுபாதகச் செயலாகிய, "கோயில் உயிர்ப்பலி வேள்வி," ஆகும். அதாவது இரத்த அபிசேகம். இச்செயலை மனிதநேயம் கொண்ட எவரும் ஆதரிக்கமாட்டார்கள். அப்படியிருந்தபோதும் இப்பாதகச் செயலை நிறுத்தமுடியாதிருக்கின்றதென்றால், மனித நேயமற்ற கொடியவர்கள் எம்மத்தியில் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. தமிழர் இந்துக்களல்லர் என்று கோசம் இடுபவர்கள் அதை நிறுத்திக்கொண்டு, மனித நேயமற்ற பாவிகளின் மனதை மாற்ற முனையலாம். இது போன்ற இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்வது சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றும் சிறந்த தொண்டாக இருக்கும்.

அது மட்டுமல்ல கடந்தகாலப் போர்ச் சூழலினால் நொந்து, நலிந்து, மெலிந்து போயிருக்கும் தமிழ் மக்களை **"தவித்த முயல் அடிப்பது போன்று"** சமயம் பார்த்துச் சமயம் மாற்றுபவர்களிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடலாம். இவ்வாறு எத்தனையோ சேவைகளைச் சைவசமயமும் தமிழ் மக்களும் வேண்டி நிற்கும் இக்கால கட்டத்தில், அவற்றைச் செய்ய முன்வர வேண்டும். அதைவிடுத்து, தமிழர் இந்துக்களல்லர் என்று சொல்வதன் மூலம் ஏற்கனவே உள்ள பலத்தையும் கெடுத்து தமிழ் இனத்தை மேலும் பலவீனப்படுத்த முயற்சிப்பது வரவேற்கத் தக்கதல்ல. இதை ஒரு சமூக விரோதச் செயலாகவே கருத வேண்டியுள்ளது.

இந்து சமயத்தின் உட்பிரிவுகளிலோ அல்லது இந்து சமயத்திலோ கை வைக்க வேண்டுமாயின் அதற்கு ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி ஒரு மாபெரும் ஞானிக்குத்தான் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இதுவரை தோன்றிய மாபெரும் ஞானிகளில் அத்தகுதி பெற்றிருந்தவர் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரே என்றால், இந்து சமயத்தைப் பற்றித் தெரிந்த எவரும் மறுக்கமாட்டார்கள். அவர் பரம்பொருளின் அவதாரபுருஷர் என்பதையும் அவர்கள் நன்கு அறிவர். இந்து சமயம் என்ற மகாவிருட்சத்தின் ஒரு சிறிய வேரைப் பற்றித் தானும் தெரியாதவர்கள், அதன் ஆணிவேரைப் பற்றிச் சொல்ல முயல்வது எந்த வகையிலும் பொருத்தமாகாது. இந்த உண்மையைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்து சமயம் என்னும் மாபெரும் விருட்சத்தை உருவாக்குவதற்காக அவதாரபுருஷனை இவ்வுலகிற்கு அனுப்பிய பரம்பொருள், அதில் மாற்றம் தேவைப்பட்டால், அதைச் செய்வதற்கு இன்னொரு அவதார புருஷனை அனுப்பத் தெரியும். அவ்வாறு அனுப்பும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும். அதைவிடுத்து அஞ்ஞானிகளுடையதும், சந்தர்ப்பவாதிகளுடையதும் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு அவர்களுக்குப் பின்னால் போவதற்குத் தமிழ்மக்கள் தயாராகப்படாது.

பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் முன்னைய தமிழ் நாட்டில் பிறந்தவர். ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா சுதந்திரம் பெற்ற போது மாநிலங்களுக்கு எல்லை போட்ட வேளையில் தமிழ் நாட்டின் பல பகுதிகள் மலையாளம் (கேரளா) கர்நாடகம், ஆந்திராவிற்குட் சென்று விட்டன. இதுவும் தமிழ் இனத்துக்கு ஏற்பட்ட பெருங்கொடுமைகளின் ஒன்றாகும். இதன் விளைவாகத்தான் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் பிறந்த இடம் தற்போதைய கேரளாவிற்குட் சென்றுவிட்டது. எது எப்படியாயினும் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் தமிழ் நாட்டிற் பிறந்த தமிழன் ஆவார். நான் இங்கு சொல்லமுனைவது என்னவென்றால், இந்து சமயம் என்ற மகாவிருட்சத்தை உருவாக்கப் பரம்பொருள் ஒரு தமிழனை ஓர் அவதார புருஷனாக அனுப்பினார். அதில் மாற்றம் தேவைப்பட்டால் பரம்பொருள் உரிய காலத்தில் இன்னொரு அவதார புருஷரை இன்னொரு தமிழ் மகனாக அனுப்பிவைப்பார். அது பரம்பொருளின் வேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் அஞ்ஞானிகளும் வேடதாரிகளும் காலத்துக்குக் காலம் தோன்றி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியதும் தவறாக வழிநடத்தியதும் இவ்வுலகுக்குப் புதிய விடயமல்ல. இவ்வாறான கட்டங்களில் மக்கள் விழிப்பாயிருக்க வேண்டுமென்பதற்காக "சொல்லுவார் சொன்னால் கேட்பவருக்கு மதி என்ன?" என்ற பொன்னான முதுமொழியை எம்முன்னோர் எமக்கு அளித்துள்ளார்கள். எம்முன்னோர் தங்கள் அனுபவத்தின் மூலம் அற்புதமான பொன் மொழிகளை வழங்கியிருந்த போதும், அவற்றையெல்லாம் எருமை மாட்டிற் பெய்த மழை போன்று புறக்கணித்துவிட்டுச் சந்தர்ப்ப வாதிகளாய் வாழ்ந்து வருவது எம்மை நாமே அழிவிற்கு இட்டுச் செல்லும் செயலாகும். ஆனபடியால் இனிமேலாவது உண்மையை உணர்ந்து வேடதாரிகளை இனங்கண்டு வாழ்வதற்குத் தமிழ் இனம் முயற்சிக்க வேண்டும். தவறின் தமிழ் இனத்தை இறைவனாலும் காப்பாற்ற முடியாது. இறைவனால் முடியாதது எதுவுமில்லை என்னும் போது, இறைவனாலும் காப்பாற்ற முடியாது என்றால் இதன் அர்த்தம் என்ன? என்று நீங்கள் எண்ணலாம். சத்தியம், தர்மம் என்பவற்றுக்கு முரணாகச் செயற்படும் மனிதரை மக்கள் என்பது தவறு, அவர்கள் மாக்களாவர். எனவே மாக்கள் தமது கன்ம வினைக்கேற்ப பெற்ற பிறப்பினை அனுபவித்தே ஆகவேண்டும்.

சத்தியந்தான் கடவுள். கடவுள்தான் சத்தியம். அந்தக் கடவுளின் குணம் தர்மம். எனவே சத்தியத்தையும் தர்மத்தையும் பிரிக்கமுடியாது. சத்தியத்துக்கு எதிராகச் செயற்படுகிறோம் என்றால் அதன் அர்த்தம் கடவுளுக்கு எதிராகச் செயற்படுகிறோம் என்பதாகும். தர்மத்துக்கு எதிராகச் செயற்படுகிறோமென்றால், அதன் அர்த்தம் கடவுளுக்கு எதிராகச் செயற்படுகிறோம் என்பதாகும். இந்நிலையில் சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் எதிராகச் செயற்படுகிறவர்களுக்கு சத்தியம் தர்மமாகிய இறைவன் எப்படி உதவி பண்ண முடியும்? முடியாது என்பது தான் உண்மை. அதுதான் சத்தியம், அதுதான் கடவுள்! வேஷங்கள், நடிப்புகள் எல்லாம் சிறிது காலத்துக்குத்தான், அவை நீடிக்க முடியாது. இதுதான் இயற்கையின் நியதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொல்லியோ அவர் சொல்லியோ அதர்மச் செயற்பாடுகள் நிற்கப்போவதில்லை. தர்மமும் அதர்மமும் எப்பொழுதும் இப்பூவுலகில் இருந்துகொண்டு தான் இருக்கும். காரணம், இருட்டு இல்லையேல் வெளிச்சத்தின் பெறுமதியை (மகிமையை) உணர முடியாது, கசப்பின்றேல் இனிப்பின் மகிமையை உணர முடியாது, வறுமையின்றேல் செல்வத்தின் பெறுமதியை உணர முடியாது, நோயின்றேல் நோயின்மையின் (உடல் நலத்தின்) பெறுமதியை உணர முடியாது, பசியின்றேல் உணவின் பெறுமதியை உணர முடியாது, துக்கமின்றேல் சந்தோசத்தின் பெறுமதியை உணர முடியாது, மரணமின்றேல் பிறப்பின் பெறுமதியை உணர முடியாது, சாவின்றேல் வாழ்வின் பெறுமதியை உணர முடியாது, கோழைத்தனம் இன்றேல் வீரத்தின் பெறுமதியை உணர முடியாது, அடிமைத்தனம் இன்றேல் சுதந்திரத்தின் பெறுமதியை உணர முடியாது. அறிவீனம் இன்றேல் அறிவின் பெறுமதியை உணர முடியாது, அஞ்ஞான மின்றேல் மெய்ஞ்ஞானத்தின் பெறுமதியை உணர முடியாது, பள்ளமின்றேல் புட்டியின் பெறுமதியை உணர முடியாது, பாலைவன மின்றேல் சோலைவனத்தின் பெறுமதியை உணர முடியாது, தாக மின்றேல் தண்ணீரின் பெறுமதியை உணர முடியாது, குழப்பமின்றேல் அமைதியின் பெறுமதியை உணர முடியாது, நிம்மதியீனம் இன்றேல் நிம்மதியின் பெறுமதியை உணர முடியாது, எதிரி இன்றேல் நண்பனின் பெறுமதியை உணர முடியாது, ஏமாற்றுக்காரன் இன்றேல் விசுவாசியின் பெறுமதியை உணர முடியாது, சினமின்றேல் அன்பின் பெறுமதியை உணர முடியாது. இவைபோன்று அதர்மம் இன்றேல் தர்மத்தின் பெறுமதியை உணர முடியாது.

இறைவன் ஒவ்வொன்றையும் சோடி சோடியாய்ப் படைத்தது (நிகழச்செய்வது) எம்மை வேதனைப்படுத்தி வேடிக்கை பார்ப்பதற்காக வல்ல. இறைவன் அருட்பிரவாகம் கொண்டவன். உயிரினங்கள் உய்யும் பொருட்டு அருளைப் பொழிந்து கொண்டிருப்பவன். ஆனபடியால் இறைவன், ஜீவராசிகளின் துன்பத்தில் ஒருபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் காண விரும்பமாட்டான். அப்படியான குணமுடைய பரம்பொருள் எதற்காக கெட்டதையும் நல்லதையும் சோடிசோடியாய் படைத்தான் என்று நீங்கள் எண்ணலாம், அங்கலாய்க்கலாம். பரம்பொருள் காரணமின்றி எதையும் செய்யமாட்டார்.

மனிதன் நல்லனவற்றைச் செய்வதற்கு ஓர் உந்துசக்தி தேவைப்படுகின்றது. அந்த உந்துசக்தியைப் பெறவேண்டுமானால் தீயனவற்றின் தாக்கத்தை அவன் அனுபவித்தே ஆகவேண்டும். இதன் காரணமாய்த்தான், **"பட்டறிந்ததே உண்மையான அறிவு"**, என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். சூடுபட்டாற்தான் நெருப்பு சுடும் என்று உணர முடியும். அனுபவிக்காதவை எல்லாம் வெறும் செய்திகளே. மனித குலம் உய்ய வேண்டும், மேற்கொண்டு ஆன்மீக சக்தியைப்பெற வேண்டும், மேற்கொண்டு மோட்சமடைந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறவேண்டும் என்பதற்காகவே இறைவன் நல்லன வற்றையும் தீயனவற்றையும் சோடிசோடியாய்ப் படைத்தான். இது இறைவன் ஜீவராசிகள் மீது கொண்ட கருணையின் வெளிப்பாடாகும்.

அந்தவகையில், "இந்து வேறு, சைவம் வேறு, தமிழனுக்கும் இந்துவுக்கும் சம்பந்தமில்லை," என்ற குரலும் இறைவனின் திருவிளையாடற்தான். இதில் சரியானதை அறிந்து செயற்பட வேண்டியது தமிழர்களுடைய பொறுப்பு. இதை எழுத வைத்ததும் இறைவனின் சித்தம். உண்மையை (சத்தியத்தை) உணர்ந்து நன்மையைப் பெறுவது அறிவாகும். இறைவன் பாதையைக் காட்டுவானேயொழிய குழந்தைக்குப் போன்று பாலூட்டமாட்டான். குழந்தைக்குப் பாலூட்டினாலும் அது குடித்தாற்தானே! நான் எழுதலாம், ஆனால் அதன் உண்மையை உணர்ந்து, ஏற்று நடப்பது மக்களைப் பொறுத்த விடயந்தானே! எல்லாம் அவன் திருவிளை யாடல்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது. தொடக்கியவன் முடித்து வைப்பான், அதுவரை இறைவன் கொடுத்த பகுத்தறிவைப் பயன்படுத்தி வாழ்வது மனிதனின் கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 6

பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர், இந்து சமயத்தின் பகுதிகளான சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனப்படும் ஆறு பிரிவுகளை இந்துசமயம் எனப்படும் ஒரு குடைக்கீழ் தொகுத்ததற்கு ஆதாரமாயிருந்தது, அவர் உருவாக்கிய அத்வைதக் கொள்கை (கோட்பாடு) ஆகும். இதன் வளர்ச்சிக்காக ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்ட "காஞ்சி காமகோடிப் பீடம்" இன்றுவரை அவரது அத்வைதக் கொள்கையைப் பேணி, வளர்த்து வருகின்றது. அத்வைதக் கொள்கை இந்தியா முழுவதும் பரந்து பெருமை பெற்றுள்ள போதும் தமிழ்நாட்டிலேயே வேரூன்றிச் சிறப்பாய் வளர்ந்து வருகின்றது.

அத்வைதம் சொல்லுவது: பிரம்மம் அல்லது ஆத்மா ஒன்றேயாகும். இதற்குக் குணங்கள் இல்லை. இது மனத்திற்கும் சொல்லுக்கும் எட்டாதது. பிரம்மத்தை இன்னதென்று வர்ணிக்க முடியாது. பிரம்மம் அழிவற்றது. பிரம்மத்திலிருந்தே பிரபஞ்சம் பிறக்கின்றது. பிறந்தபின் அதனிடத்தில் நிலைக்கின்றது. இறுதியில் அதனுள்ளே அடங்குகின்றது. வேறு வார்த்தையிற் சொன்னால் பிரம்மத்தை ஆதாரமாகக் கொண்டே பிரபஞ்சம் தோன்றுகின்றது, நிலைக்கின்றது, ஒடுங்குகின்றது. எனவே பிரபஞ்சம் மாயை அதாவது பிரபஞ்சம் பொய்த்தோற்றம். பிரம்மம் ஒன்றே உண்மையாகும், பிரம்மம் ஒன்றே நித்தியமான வஸ்து, பிரபஞ்சம் நித்தியமானதன்று. இதுவே அத்வைதக் கொள்கையாகும்.

சிறிது விளக்கமாய்ச் சொன்னால், எதனிடமிருந்து எல்லாப் பொருட்களும் எழுந்தனவோ, எதனால் அவை வாழுகின்றனவோ, எதைக் கடைசியில் அடைகின்றனவோ அதுவே பிரம்மம். "ஓ" என்ற பதம் பிரம்மத்தை அல்லது ஆன்மாவைக் குறிக்கின்றது. ஆன்மாவும் பிரம்மமும் வேறல்ல என்பது உபநிடதத்தின் முடிவு. ஆன்மா அஞ்ஞானத்தினால் (ஆணவமலம்) பீடிக்கப்பட்டுச் சம்சார சாகரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழல்கின்றது. பிறந்து இறக்கின்றது. இறந்து பிறக்கின்றது. பழைய கர்மங்களின் பலனை அனுபவிக்கின்றது. புதிய கர்மங்களைச் சேகரிக்கின்றது. மோட்சம் என்பது ஜீவன் பிரம்மத்தை அடைவதாகும். அஞ்ஞானம் (ஆணவமலம்) விலகி பூரண ஞானம் பெறும்போது ஒருவன் முத்தியடைகிறான். அஞ்ஞானத்தைப் போக்கி மெய்யறிவைப் (மெய்ஞ்ஞானத்தை) புகுத்துவது குருவாகும். ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீகம் மறைந்துள்ளது. உள்ளொழிந்திருக்கும் தெய்வீகம் வெளிப்படும்போது, அது உங்களைப் பேரானந்த வாழ்விற்கு இட்டுச் செல்லும். இதை ஏற்படுத்துவதே இந்து சமயத்தின் குறிக்கோள்.

இந்து சமயம் பெரிய அகண்டாகார சாகரம் போன்றது. ஒவ்வொருவருக்கும் ஆன்ம வளர்ச்சியைக் கொடுத்து இறுதியில் பேரின்பப் பெரு வாழ்வை (முத்திநிலையை)ப் பெறுவதற்கு வழிசமைத்துக் கொடுக்கின்றது. இதற்காகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு நியமங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சரியை என்பது: ஆலயவழிபாடு, ஆலயத்தொண்டு என்பனவாகும். இவர்கள் பக்தர்கள். இவர்கள் இறைவனைத் தலைவனாகவும் தம்மை அடியவர்களாகவும் எண்ணி வழிபடுபவர்கள். கிரியை என்பது: ஆலயக் கிரிகைகள் சமயக்கிரியைகள் ஆகும். இவர்கள் சிவ சின்னங்களை அணிந்து சிவவேடம் தாங்கி சிவபூசை செய்து வழிபடுபவர்கள். இவர்கள் சிவாச்சாரியர்கள், பூசாரிகள், சாமிமார்கள் ஆவர். இவர்கள் இறைவனைப் பெற்றோராகவும் தம்மைப் பிள்ளைகளாகவும் எண்ணி வழிபடுபவர்கள். யோகம் என்பது இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புக்களை உணர்ந்து அவ்வழியில் (யோகவழியில்) நிற்பதாகும். இவர்கள் யோகிகள் ஆவர். இவர்கள் இறைவனைத் தோழனாக எண்ணி வழிபடுபவர்கள். ஞானம் என்பது இறைவனைத் தன்னுள் கண்டு அதனுடன் ஒன்றி நிற்பது. இவர்கள் சித்தர்கள், அவதாரபுருஷர்கள், ஞானிகள், ஜீவன் முத்தர்கள் ஆவர். இவர்கள் இறைவனைக் குருவாகவும் தம்மைச் சீடனாகவும் எண்ணி வழிபடுபவர்கள். மேற்கூறப்பட்டுள்ள வழிகளைப் படிமுறையில் ஒவ்வொன்றாகப் பின்பற்றியும் முன்னேறிச் செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஒரே காலப்பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகளைக் கூட்டாகப் பின்பற்றியும் முன்னேறிச் செல்லலாம். எப்படிச் சென்றாலும் மனிதரின் இறுதி இலக்கு மோட்சத்தைப் பெறுவதாகவே இருக்க வேண்டும்.

ஹிம்சைப்படுபவனை அதிலிருந்து விடுவிப்பதற்கு முயல்வது ஹிந்து (இந்து) சமயம். வேறு வார்த்தையிற் சொன்னால், இம்சைப்படுபவனை (துன்பப்படுபவனை) அதிலிருந்து விடுவிப்பதற்கு வழிசமைத்துக்கொடுப்பது இந்து (ஹிந்து) சமயம். ஆன்ம ஈடேற்றத்துக்கு வேண்டியவற்றைச் சமைத்துக் கொடுப்பதனாலேயே சமயம் என்ற பெயர் வந்தது. ஆன்ம ஈடேற்றத்துக்கு வேண்டியவை ஞானிகளால் சமைத்து அளிக்கப்பட்டன. அதனை மாற்றுவதற்கு சாதாரண மக்களாகிய எமக்குத் தகுதி இல்லை. மகாஞானி பகவான் ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கையை இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன. அதன் அடிப்படையிலேயே ஆறுபிரிவையும் இந்து சமயத்துள் அடக்கி ஒரு மாபெரும் சக்தியை பரதக்கண்டத்தில் ஆதிசங்கரர் உருவாக்கினார்.

ஹிம்சைப்படுவதை (இம்சைப்படுவதை) நீக்க முயல்வது அன்பின் வெளிப்பட்டாகும். எனவே இந்துசமயம் அன்பை அடிப்படையாய்க் கொண்டது. இதனாலேயே **"அன்பே சிவம்"** என்றும் **"அன்பே கடவுள்"** என்றும் சொல்லப்படுகின்றது. எந்த உயிருக்கும் ஹிம்சை (இம்சை) ஏற்படாதிருக்க வேண்டும் என்பதே இந்து சமயத்தின் கொள்கையாகும். இதன் காரணமாக எந்த உயிராவது இம்சைப்படுவதையோ எந்த உயிருக்காவது இம்சை செய்வதையோ தடுப்பதற்கு இந்து சமயம் முயலுகின்றது. இதனால் இந்து சமயம் சனாதன தர்மம் என்றும் அழைக்கப்படுகின்றது. அத்தோடு இது அழிவற்றது என்றும் நம்பப்படுகின்றது. "அன்பே கடவுள்" என்ற கூற்றுக்கு உலகிலுள்ள எந்தச் சமயமும் முரண்டவை அல்ல. உலக இயக்கத்தின் அச்சாணி அன்புதான். அதை யாரும் மறுப்பதற்கில்லை. அப்படிப்பட்ட அன்பு எனும் மாபெரும் சக்தியை அடிப்படையாய்க் கொண்ட இந்து சமயத்திலிருந்து தமிழர்களைப் பிரித்து, **தமிழர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்துக்களல்லர்,** என்பதனால் என்ன நன்மை தமிழ் இனத்துக்கு ஏற்படப்போகின்றது? எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயமும் **"அன்பே சிவம்"** என்றுதான் சொல்கின்றது. இதைச் சரியாகப் புரிந்து கொண்டால் தமிழர் இந்துக்களல்லர் என்ற கூற்றுக்கு அவசியம் இருக்கவே முடியாது.

சனாதன தர்மமாகிய இந்து சமயத்தில் இல்லாத கொள்கைகள் கோட்பாடுகள் வேறு எந்த சமயத்திலும் கிடையாது. இந்து சமயம் சமயநெறி மட்டுமல்ல, அது வாழ்க்கை நெறியுமாகும். வேறு வார்த்தையிற் சொன்னால், இந்து சமயம் பரலோகப் பேரின்ப வாழ்விற்கு மனிதனை இட்டுச் செல்வதற்கு உதவுவது மட்டுமல்லாது, பூவுலக சுகபோகங்களைக் கொண்ட சிற்றின்ப வாழ்வை முறைப்படி வாழ்வதற்கும் வழிகாட்டி நிற்கின்றது. இதனாலேயே இது சனாதன தர்மம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த உண்மையை அறிந்த பிற சமயப் பெரியார்கள் இந்து சமயம் பெரிய விருட்சம் என்றும் பிறசமயங்கள் அதன் சில கிளைகளாகும் என்றும் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

இந்து சமயம் மற்றைய எல்லாச் சமயங்களுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தோன்றியபடியாலும் பூலோக, பரலோக இன்பங்களுக்கு வேண்டிய எல்லாத் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதாலும், மற்றைய சமயங்களில் காணப்படும் கொள்கைகள் கோட்பாடுகளெல்லாம் இந்து சமயத்திலிருந்தே சென்றிருக்க வேண்டும் என்பது யதார்த்தமாகும். அதன் அடிப்படையிலேயே இந்துசமயம் விருட்சமாயும் மற்றைய சமயங்கள் கிளைகளாகவும் கருதப்படுகின்றன. இந்த உண்மையை அறியாத சிலரும், அறிந்திருந்தும் காழ்ப்புணர்ச்சி காரணமாய் இக்கூற்றை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற மற்றையோரும் மானிடசமூக நலனுக்காக உழைப்பவர்களல்லர். குறுகிய சுயலாப நோக்கம் கொண்டு செயற்படுபவர்கள். அந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான் தமிழர் இந்துக்களல்லர் என்றும், **"தமிழர் இந்து என்ற பெயரைப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துவது தம்மைத்தாமே தாழ்த்துவது போலாகும்" என்றும் கூறுபவர்கள். அவர்களை இனங்கண்டு தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது தமிழரின் கடமையாகும். அவர்களின் பசப்பு வார்த்தை களுக்கு அடிமைப்பட்டால் தமிழினம் முதலிற் பலவீனப்படுவதும் பின் அது மறைவதும் உறுதி.

தமிழ் இனத்துக்குத் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சோதனைகளையும் வேதனைகளையும் பார்க்கும் போது, ஒரு பகுதி வெளியிருந்து வருவதையும் மற்றைய பகுதி தமிழ்ச் சமூகத்தினுள் இருந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. தமிழினத்துக்குள் இருந்து வரும் சோதனையும் வேதனையும் தமிழ் இனத்துக்கே உரிய சிறப்பம்சமாகும். இதிலிருந்து இவ்வினத்தை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.

இந்து சமயத்தினுள் அடங்கும் ஆறு பிரிவினரிடையே போட்டிகள், பொறாமைகள், கருத்து முரண்பாடுகள் இருக்கலாம், அவற்றையெல்லாம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயொழிய, அதற்காக அதிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்று சொல்லுவதோ அதற்காக முயற்சிப்பதோ புத்திசாலித்தனமான விடய மல்ல. எனவே பிரிந்து செல்வதை தமிழினம் ஏற்றுக்கொள்ளப்படாது. மாபெரும் வல்லமை கொண்ட ஓர் அமைப்பை உடைத்துவிடுவது அல்லது அழித்துவிடுவது என்பது இலகுவான காரியம். ஆனால் அதுபோன்ற ஓர் அமைப்பை உருவாக்குவது, அதைப் பேணிப் பாதுகாப்பது என்பது மிகமிகக் கடினமான விடயம். அவதார புருஷராகிய மகாஞானி பகவான் ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்ட மாபெரும் சக்தியாகிய இந்து சமயத்தை உடைத்து விடுவது இலகுவான செயற்பாடு. உடைப்பவர்களையும் அதற்கான காரணத்தையும் (தேவையையும்) தமிழ்மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இந்து சமயத்தை உடைக்க முயற்சிப்பவர்கள், "பகவான் ஆதிசங்கரர் ஒரு பயித்தியம்," என்று சொல்லுவதற்கும் தயங்க மாட்டார்கள். அப்படிப்பட்ட பயித்தியங்களுடைய பேச்சைக் கேட்டு ஏமாறாமல் இருக்கவேண்டியது தமிழரின் பொறுப்பாகும். சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தை எந்தளவிற்கும் வளர்க்கலாம். அதற்கு எந்தவொரு தமிழனும் மறுப்புத் தெரிவிக்கப் போவதில்லை. சைவசமயத்தை வளர்ப்பதற்கு தமிழர் இந்து சமயத்திலிருந்து விலக வேண்டும் என்பதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன்? இது தமிழினத்தைப் பலவீனப்படுத்தி காலகதியில் அதன் மறைவிற்கே வழிசமைக்கும்.

உலகிலுள்ள படைப்புக்கள் அனைத்தும் இணைந்து வாழ வேண்டுமென்று இறைவன் விரும்புகிறான். **"அன்பு"** ஒன்றே அதற்குப் பொருத்தமான கருவி. அன்பை வளர்த்துக்கொண்டு இணைந்து வாழ்பவன் உலகில் வாழ்கிறான். முரண்பட்டுக்கொண்டு எதிர்ப்பைச் சம்பாதிப்பவன் வாழ்க்கையை வீணாக்குகிறான். எம்முள் அன்பு வளரும்போது ஆணவம் எழுவதில்லை. அன்பு வளரும்போது அகங்காரம் நீங்கி எல்லோரையும் மதிக்கும், போற்றும் பண்பு நம்முள் வளர்கின்றது. அதனால் இறைவன் எதிர்பார்ப்பது போன்று எல்லோரும் ஒன்றிணைந்து வாழமுடிகின்றது; இது சத்தியம்.

இந்த மாபெரும் சக்தியாகிய "அன்பு" என்றால் என்ன? அன்பு, அன்பு என்று பலகோடி தடவைகள் சொன்னால் அன்பு உருவாகுமா? அல்லது பலகோடி தடவைகள் எழுதினால் அன்பு உருவாகுமா? மேடை, மேடையாய்ப் பேசினால் அன்பு உருவாகுமா? புத்தகம், புத்தகமாய் எழுதினால் அன்பு உருவாகுமா? வார்த்தைக்கு வார்த்தை அன்பு, அன்பு என்று சொன்னால் அன்பு வெளிப்படுமா? இவ்வாறு எந்தவகையிலாவது பரப்புரைகளை மேற்கொண்டால் அன்பு உருவாகுமா? வேசம் போட்டு மோசம் செய்யும் பாசாங்கு நடிப்பில் அன்பு உருவாகுமா? எங்கு அன்பு உருவாகின்றது? எங்கு அன்பு வெளிப்படுகின்றது? எங்கு அன்பு பயன்படுகின்றது? இன்று அன்பு எனும் வார்த்தையை உச்சரிப்பதற்குக்கூடத் தகுதியற்ற மாக்களின் வார்த்தைகளில் மட்டும் அன்பு பிறந்து, தவழ்ந்து, பெருக்கெடுத்து ஓடுகின்றது. அன்பு என்ற பேச்சுக்கும், எழுத்துக்கும், பரப்புரைக்கும் பஞ்சமே இல்லை. ஆனால், உண்மையில் அன்பு எனும் செழுநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றி, வரண்டுவிட்டது. இதன் உண்மையை உணர்ந்தவர்கள் உலகம் அழியப்போகின்றதோ! என்று எண்ணி ஏங்குகின்றனர். ஏன்? உலக இயக்கத்தின் அச்சாணி அதுவன்றோ! "அன்பே கடவுள்" என்னும் போது, அந்த அன்பு வற்றிவிட்டது, வரண்டுவிட்டது என்றால், அப்புறம் கடவுளை, அவருடைய அருளை எப்படி நாங்கள் எதிர்பார்க்க முடியும்? முடியவே முடியாது.

அன்பின் வெளிப்பாடு தர்மம் ஆகும். "அன்பே கடவுள்" என்றால், கடவுளின் வெளிப்பாடு தர்மம். அதென்ன தர்மம்? தர்மம் என்றால் உதவுதல், ஆதரவு அளித்தல், தாங்குதல், வாழ்வளித்தல், தியாகம், தொண்டு, கொடை என்றெல்லாம் பொருள்படும். தர்மம் என்பது தெய்வத்தின் பண்பு, அதாவது தெய்வீகப் பண்பு. இது எண்ணத்தாலோ, பேச்சாலோ பயனளிக்காது. எண்ணம், பேச்சு என்பவற்றுடன் காயமும் சேரவேண்டும். அதாவது செயலுருவம் பெறும் போதுதான் பயனளிக்கும். எண்ணமும் பேச்சும் செயலுருவம் பெறுவதற்குத் தூய மனம் வேண்டும். தூயமனம் பெறுவதற்கு நம்பிக்கை, விசுவாசம் வேண்டும். பாசாங்கு, நடிப்பெல்லாம் உதவவே உதவமாட்டா. கோயிலுக்குச் சென்று பத்து டொலர் கொடுத்து அர்ச்சனை செய்விக்க மனமில்லாதவன், "எனக்கு இறைவன் மீது நம்பிக்கை உண்டு, பக்தி உண்டு", என்பதில் என்ன அர்த்தமுண்டு? அர்த்தமில்லை, அது வெறும் வார்த்தை ஜாலம் மட்டுமே. இரந்து பிச்சை கேட்பவனுக்கு இரண்டு டொலர்தானும் கொடுக்க மனமில்லாதவனுக்கு தர்மம் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை உண்டு? தேவை அறிந்து, தருணம் அறிந்து உதவுவதற்கு மனமில்லாதவனிடம் பொருள் இருந்தென்ன! பொன்னிருந்தென்ன! இவர்களெல்லாம் இந்த உலகத்துக்குப் பெரிதாக என்னத்தைச் செய்துவிடப் போகின்றார்கள்? எதையுமே செய்யப்போவதில்லை. எனவே மனிதகுலம் இன்றும் என்றும் வேண்டிநிற்பது அன்பின் பெருக்கம். அன்பு பெருக்கெடுத்து ஆறாக ஓடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தினதும் சைவசமயத்தினதும் அடித்தளம் அன்புதான். மக்களுக்குத் தேவையானது. இந்துவா, சைவமா என்ற பெயரல்ல. மக்களுக்கு வேண்டியது சமயங்களினால் ஏற்படக்கூடிய நற்பலன்கள். அதற்காக முயற்சிக்க வேண்டுமேயொழிய, இந்து வேண்டாம் சைவந்தான் வேண்டுமென்ற கோசம் அல்ல. மக்களுக்கு வேண்டியது பலகாரமே தவிர, சிலுசிலுப்பு அல்ல. தேவையற்ற கோசமிட்டு மக்களைக் குழப்ப முற்படுவதையோ அல்லது மக்களைப் பிரிக்க முற்படுவதையோ சமூக விரோதச் செயலாகவே பார்க்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்மக்கள் விழிப்படைய வேண்டும்.

இன்று சைவசமயம், தன்னுடன் சக்தி, கணபதி, முருக வழிபாடுகளை ஒன்றிணைத்துக்கொண்டு பேருருக்கொண்டு நிற்பதை தமிழர் எல்லோரும் அறிவோம். அநேக தமிழர்கள் அம்மனையும், விநாயகனையும், முருகனையும் தமது குலதெய்வமாய்ப் போற்றி வணங்குகின்றார்கள். தமிழ் நாட்டுக்கு அடுத்தபடியாகத் தமிழர்கள் அதிகமாய் வாழும் இலங்கையில் இன்று பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயங்கள் நல்லூர்க் கந்தன் ஆலயம், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் என்பனவாகும். விநாயகனும், முருகனும், அம்மனும் தமிழருடைய சமயமாகிய சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் அல்ல என்று கூறி இவ் மூர்த்திகளை ஒதுக்கி வைத்தார்களா? இல்லையே! இவ்வால யங்கள் எப்படி உருப்பெற்றன? இவை எப்படி வளர்ந்தன? இவை இன்று எப்பெரும் அருள் வழங்கும் ஸ்தலங்களாக விளங்குகின்றன? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழர்கள் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்கள் என்று கூறி இத்தெய்வ மூர்த்தங்களை ஒதுக்கி வைத்தார்களா? இல்லையே! இக்கோயில்களை உருவாக்கியவர்கள், வளர்த்தவர்கள் எல்லோரும் அறிவில்லாதவர்கள் என்றும், "இக் கோயில்களையெல்லாம் சிவன் கோயில்களாக மாற்ற வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இன்று கோசமிடுபவர்கள் மட்டும் புத்திசாலிகள் என்றும் சொல்ல முடியுமா? முடியாது. இந்து வேறு சைவம் வேறு என்று பாகுபாடு காட்டாமல் எல்லாவற்றையும் ஒன்றிணைத்துக் கொண்டு, பேருருக் கொண்டு நிற்கும் சைவத்துள் வேற்றுமையை உருவாக்கி அதை உடைத்துவிட்டால், அதனால் இலாபம் அடையப்போறவர்கள் சமயம் பரப்புபவர்கள்தான் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். **“ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்”** என்னும் பழமொழியை ஞாபகப்படுத்த வேண்டிய வேளை இதுவாகும்.

பிறசமயங்கள் தமிழர் மத்தியிற் புகுந்து ஆதிக்கம் பெற்றுவிட்டால், தமிழரின் இன அடையாளங்களாகிய கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கைமுறை எல்லாமே காலகதியில் அழிந்து போய்விடும். காரணம் தமிழரின் கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கைமுறை அனைத்தும் இந்துசமயம் எனும் தளத்தில் கட்டப்பட்டவை ஆகும். சைவமும் தமிழும் சேர்ந்தவன்தான் தமிழன். இந்த உண்மையை எவ்வளவு வேகமாய்த் தமிழன் மறக்கிறானோ அவ்வளவு வேகமாய்த் தமிழினம் மறைந்து போவது உறுதி. தமிழர் இந்துக்களல்லர், அவர்கள் இந்து என்ற பெயரைப் பயன்படுத்தக் கூடாது எனும் குரல்களின் முன்யோசனை அற்ற செயலினால் விளையப்போவது, **“குளத்தைக் கலக்கிப் பருந்துக்குக் கொடுத்த மாதிரி”**. எனும் பழமொழிக்கு ஒத்ததாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. தமிழர் பிளவுபட்டால் வரப்போகும் பேராபத்தை முன்கூட்டியே உணர்ந்து செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும். இந்தக் காலகட்டத்தில் தமிழனம் விழிப்படைந்தேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 7

"தமிழர் இந்துக்கள் அல்லர், அவர்கள் சைவர்கள், எனவே இந்து என்ற பெயருக்கும் தமிழர்களுக்கும் எந்த வகையான இணைப்போ, பிணைப்போ கிடையாது. தமிழர் இந்து என்று சொன்னால், அது தம்மைத்தாமே தாழ்த்திக்கொள்ளும் செயலாகும்" என்று பரப்புரை செய்வதும் ஒருவகையான சமயமாற்றமே ஆகும். புறச்சமயங்களாகிய சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறீஸ்தவம் என்பன கடந்த காலத்தில் இந்து சமயத்துடன் மோதின. இன்று மறைமுகமாக மோதுகின்றன. இது உலகறிந்த விடயம். எனினும் இந்து சமயத்தை அழிக்கமுடியவில்லை. அவைகள் வெளிப்புற மோதல்களாய் (external fight) இருந்தன. இன்று இந்து வேறு சைவம் வேறு என்பது உள்ளக மோதல் (Internal fight) ஆகும். இது ஆபத்தானது, காரணம் வெளியிலிருந்து மோதுபவனைவிட உள்ளிருந்து மோதுபவன் பேராபத்தானவன், இது உலகறிந்த உண்மை. எதிரியை இனங்கண்டு தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடலாம். ஆனால் உட்பகைக்கு அந்த வாய்ப்பு இல்லை. எனவே இந்த விடயத்தில் தமிழ் இனம் மிக்க விழிப்படைய வேண்டும்.

இந்த விடயத்தைச் சற்று ஆழமாகப் பார்த்தால் : தமிழர் தம்மை வெளிப்புற மோதலிலிருந்து காப்பாற்றிக் கொள்வதா! அல்லது உட்புற மோதலிலிருந்து காப்பாற்றிக் கொள்வதா! என்று திண்டாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று சொல்ல வேண்டியுள்ளது. உட்பகை, **"படுக்கையின் கீழ் பாம்பு"**, போன்றது. அதிலிருந்து தப்புவது மிகவும் கடினமான காரியம் ஆகும். இது உடனிருந்து, நம்பவைத்து கழுத்தை அறுப்பது போன்றது, பேராபத்தானது. தமிழ் மக்கள் விழிப்படைய வேண்டிய தருணம் இதுவாகும், தவறின் தமிழினம் மறைவது உறுதி. **"வருமுன் காப்போம்"** என்னும் முதுமொழியை ஞாபகப்படுத்திச் செயற்பட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரபஞ்சத்துக்குக் கடவுள் ஒருவரே, இந்துக்கள் அவரை பரம்பொருள் அல்லது பிரம்மம் என்று அழைக்கின்றனர். இந்து சமயத்தில் அடங்கும் ஆறு பிரிவினருக்குரிய சிவன், சக்தி (அம்மன்), விஷ்ணு, கணபதி, முருகன், சூரியன் ஆகிய மூர்த்தங்களை அவரவர் தமது முழுமுதற் கடவுளாய்க் கொள்ளும் பொழுது, அது பிரம்மத்தையே குறிக்கின்றது. பெயர்கள் வேறே தவிர பொருள் ஒன்றுதான். இந்த ஆறு மூர்த்தங்களில் ஒரு மூர்த்தத்தை மூலமூர்த்தியாய் வைத்து கோயில் ஒன்றைக் கட்டும்போது, அந்த மூலமூர்த்தியின் பெரால் அந்தக்கோயில் அழைக்கப்படும். உதாரணமாக – முருகனை மூலமூர்த்தியாய் வைத்து ஒரு கோயிலை அமைக்கும்போது, அது முருகன் கோயில் என்று அழைக்கப்படும். மற்றைய மூர்த்தங்கள் பரிவார மூர்த்திகளாக அக்கோயிலில் பிரதிஸ்டை செய்யப்படலாம். இங்கு முருகன் பெரிய கடவுள் மற்றையவை சிறிய கடவுட்கள் என்று கொள்ளப்படுவதில்லை. சிவன் கோயிலில் சிவன் மூலமூர்த்தியாய் (சிவலிங்கம்) பிரதிஸ்டை செய்யப்படுவார். எல்லாமே பிரம்மத்தின் வடிவங்களேயாகும். இங்கு மூர்த்தங்களின் வடிவம் வேறுபடுகின்ற போதும், எல்லாம் பிரமத்தையே (பரம்பொருளையே) குறிக்கின்றன. சிவனும் சக்தியும் ஒன்று, அதனால் அர்த்தநாரீஸ்வரர் எனப்படுகின்றான். திருவருட்பயன் 'திருவருளே' சிவனின் சக்தியாகும் என்கிறது.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், சிவன் பெரிது, மற்றையவை சிறிது என்றோ அல்லது இது ஆண் தெய்வம் அது பெண் தெய்வமென்றோ, பெண்தெய்வம் ஆண் தெய்வத்திலும் தாழ்வானது என்றோ கருதுவதற்கு இடமேற்படாது. சிவனிடமிருந்து அம்மனைப் பிரிக்கப்படாது என்று சொல்லுவதும், அம்மன் சிவனுடைய துணைவியார் என்பதும், விநாயகரும், முருகனும் சிவனுடைய பிள்ளைகள் என்பதும் அறியாமையின் வெளிப்பாடாகும். அவ்வாறு புராணங்களில் பல்வேறு இடங்களில் சொல்லப்பட்டிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். அவ்வாறு சொல்லப்பட்டிருப்பதற்கான காரணங்களை நோக்கினால்: இந்து சமயத்திலுள்ள இறைத்தத்துவங்களை மெய்ஞ்ஞானிகளைத் தவிர மற்றைய சாதாரண மக்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடிவதில்லை. இறைத்தத்துவங்களைப் புரிந்தாற்தான் இறையருளைப் பெறலாமென்றில்லை. எல்லோரும் பெறலாம். எல்லோரும் இறையருளைப் பெற்று இன்புற்று வாழவேண்டும் என்பது இந்து சமயத்தின் கொள்கை.

ஒரு சமுதாயத்தில் சாதாரண மக்களுடைய தொகை 98 வீதம் என்று சொல்லலாம். எனவே அவர்களுடைய சிறப்பான வாழ்க்கை ஒவ்வொரு சமூகத்துக்கும் இன்றியமையாதது. மனிதன் இப்பூவுலகில் இன்புற்று வாழ்வதற்கு இறையருள் அவசியம் என்பது இந்து சமயத்தின் கொள்கையாகும். ஆன்மீகத்துக்கு மட்டுமல்லாது பூவுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வழிசமைத்துக் கொடுக்கும் இந்து சமயம் சாதாரண மக்களை எப்படிப் புறக்கணிக்க முடியும்? முடியாது. எனவே சாதாரண மக்கள் இறையருளைப் பெறும்பொருட்டு: அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளவும், இறைவன் மீது பக்தி கொள்ளவும், நீதிநியாயத்துக்குக் கட்டுப்படவும், சத்தியம் தர்மத்தைப் பின்பற்றவும், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும், பாவத்திற்கு அஞ்சவும், பொய், களவு, கொலை என்பனவற்றைத் தவிர்க்கவும் என்று பலவிதமான கதைகள் புராணங்கள், இதிகாசங்களில் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையினுள்ளும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உண்மைத் தத்துவங்கள் பொதிந்துள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை ஆகும்.

சாதாரண மக்கள் பொதிந்து கிடக்கும் உண்மைத் தத்துவங்களை முழுமையாக புரியாதபோதும் அந்தக் கதைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் இறையருளைப் பெறுவதற்குரிய நல்வழிக்கு இட்டுச் செல்லப்படுகின்றார்கள் என்பது அனுபவம் தந்த உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு விரதத்திற்கும் ஒவ்வொரு கதை இருக்கிறது. உதாரணமாக கேதாரகௌரி விரதத்தை எடுத்துக் கொண்டால்: கௌரி அம்மன் விட்ட சிறிய தவறுக்காக அவ சிவனைப் பிரிந்து பூவுலகுக்கு வரநேரிட்டது என்றும், அதனால் கவலை அடைந்த கௌரி அம்மன் மறுபடியும் சிவனை அடைவ தற்காக கேதாரநாதராகிய சிவனை நினைத்து இருபத்தியொரு நாட்கள் விரதம் அனுட்டித்ததாயும், அதன் பயனாக மறுபடியும் சிவனை அடைய முடிந்தது என்றும் சொல்லப்படுகின்றது. இந்தக்கதை உண்மையா? அல்லது கற்பனையா? என்று விமர்சிப் பதைத் தவிர்த்து, அந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் இறையருளைப்பெற்று தம்பதியினர் இன்புற்று வாழமுடிகின்றது என்பது அனுபவம் தந்த உண்மை.

சூரன்போர் என்று அழைக்கப்படும் விழாவும் அவ்வாறான ஓர் உண்மைத் தத்துவத்தை அடிப்படையாய்க் கொண்டு உருவாக்கப் பட்டதாகும். இக்கதையில் கதாபாத்திரங்களாக வரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய சூரர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களைக் குறித்து உருவாக்கப்பட்டவையாகும். முருகன் ஏந்திய வேல் ஞானத்தைக் குறித்து உருவாக்கப்பட்டது. வேலினால் சூரர்கள் அழிக்கப்பட்டார்கள் என்பதன் அர்த்தம் ஞானம் ஏற்படும்போது மும்மலங்களும் நீங்கிவிடும் என்பதாகும். சாதாரண மக்கள் சூரன்போர் விழாவைப் பார்ப்பதன் மூலம் அசுரப் பண்புகளை அழிக்கவும் பாவகாரியங்களைச் செய்யாமல் இருக்கவும் தூண்டப் படுகின்றனர். அதன் விளைவாக அவர்கள் இறையருளைப் பெற்று இன்புற்று வாழ வழிசமைகின்றது. இவ்வாறு நூற்றுக்கணக்கான கதைகள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் உண்டு.

ஆகமவிதிப்படி கட்டவேண்டிய கோயில்களை, வழிபாட்டு முறைகளை ஆகமத்திற்குப் புறப்பாக இக்கதைகளின் வெளித் தோற்றத்தை அடிப்படையாய் கொண்டு கட்டுவதோ, போதிப்பதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாகும். அம்மனுக்குத் தனிக்கோயில், அதாவது அம்மனை மூலமூர்த்தியாய் கொண்ட கோயில் கட்டப்படாது என்பது, அவ்வகையான தப்பான பரப்புரைகளில் ஒன்றாகும். அம்மன் கோயிலில் சிவனைப் பரிவார மூர்த்தியாய் வைக்கப்படாது என்பதும் இவ்வகையான ஞானமற்ற பரப்புரையேயாகும். இவ்வகையான பரப்புரைகளைக்கேட்டு அப்படியே அவற்றை ஏற்றுக்கொள்ளாமல், அவை சரியா? அல்லது தவறா? என்று உய்த்துணர வேண்டியது தமிழ் மக்களுடைய பொறுப்பாகும்.

இந்து சமயக் கோயில்களிலும் கிரிகைகளிலும் விநாயகனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான காரணம்: பிரபஞ்சத்தின் தோற்றம் ஆகும். பிரபஞ்சம் ஓ என்ற ஒலியுடனே ஆரம்பமாகியதனால், ஓ என்ற ஒலியே பிரணவ மந்திரமாய்க் கொள்ளப்படுகின்றது. அதற்குள்ளே பிரபஞ்சம் அடங்குகின்றது. பிரபஞ்சம் பசு, பதி, பாசம் எனும் மூன்றினை அடக்கியுள்ளது. பிரபஞ்சம் பிரம்மத்தைச் சார்ந்து இருப்பது. ஓ எனும் பிரணவ மந்திரம் பிரம்மத்தைக் குறிக்கும். பிரம்மத்திலிருந்து உருப் பெற்ற பிரபஞ்சம் ஓ என்ற முதல் ஒலியுடன் உருவாகியதால், பிரணவ மந்திரத்தின் ( ஓ ) வடிவத்தின் மூர்த்தமாயுள்ள விநாயகனை முதலில் வணங்குகிறோம். அதாவது பிரம்மம் (பரம்பொருள்) பிரபஞ்சத்துக்குக் கொடுத்த முதல் ஒலி ஓ என்பதாலும், அதன் சொரூபமே விநாயகன் என்பதாலும் விநாயகனை முன்னிருத்தி இந்துக்கள் தமது சமயகாரியங்களைச் செய்து வருகின்றனர். அதற்காக விநாயகன் உயர்ந்த கடவுள், மற்றைய மூர்த்தங்கள் அவருக்குக் கீழ்ப்பட்ட வர்கள் என்று அர்த்தமாகாது. எல்லாம் பிரம்மத்தின் (பரம்பொருளின்) சொரூபங்களே ஆகும்.

இப்பிரபஞ்சத்துக்குப் பிரம்மம் ஒன்றே. அதிலிருந்தே பிரபஞ்சம் தோன்றியது. இந்த ஒவ்றை மனதில் ஆழமாய்ப் பதித்துக்கொண்டால் எல்லாம் இலகுவாய்ப் புரியும். எந்தக்குழப்பமும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உருவாகாது. விநாயகனை வணங்கும்பொழுது விநாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருளின் ஓங்கார சொரூபம் என்று நினைந்துக் கொள்ள வேண்டும். முருகனை வணங்கும்பொழுது முருகன் பரம்பொருளின் ஆனந்த சொரூபம் என்று நினைந்துக் கொள்ள வேண்டும். இது போன்று சிவனை வணங்கும்பொழுது சிவனை உலகத் தந்தையாகவும், அம்மனை வணங்கும்பொழுது உலகத் தாயாகவும், விஷ்ணுவை வணங்கும் பொழுது சர்வவியாபகராகவும், சூரியனை வணங்கும்போது உலக ஒளியாகவும் நினைந்து கொள்ள வேண்டும். இவை அனைத்தும் பிரம்மத்தின் (பரம்பொருளின்) சொரூபங்களே என்பதை ஒருபோதும் மறந்துவிடப்படாது.

ஒரே பொருளின் (பரம்பொருளின்) வேவ்வேறு சொரூபங்களை வைத்துக்கொண்டு மனிதர்கள் தமக்குள் வேற்றுமைகளை உருவாக்கிக் கொள்வதும், அதன் பெயரால் பகைமைகளையும் வன்முறைகளையும் வளர்த்துக்கொள்வதும் மக்களுடைய மிகப்பெரிய அறியாமை ஆகும். தமிழர் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்கள் என்பதும், இந்துக்கள் என்று தமிழர் தம்மை அழைப்பது கேவலமாகும் என்பதும் அம்மனுக்குத் தனிக்கோயில் கட்டப்படாது என்பதும், சிவன்தான் உயர்ந்த கடவுள் என்பதும், மற்றைய மூர்த்தங்களின் கோயில்களில் சிவனைப் பரிவார மூர்த்தியாய் வைக்கப்படாது என்பதும் இவ்வகை அறிவீனமே ஆகும். அறியாமையைத் தளமாகக் கொண்ட இவ்வாறான பரப்புரைகளி லிருந்து தமிழினம் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாயின், எமது புத்திக்கூர்மையைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் பரந்த சமய அறிவும் ஞானமும் கொண்ட பெரியவர்களை அணுகி அவர்களுடைய அறிவுரைகளைப் பெறவேண்டும். சந்தர்ப்பவாதி களிடமும் வேடதாரிகளிடமும் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்பு, அவசியம் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ளது. இந்த உண்மையை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 8

இன்று உலகத்தில் வளர்ந்து வரும் வயிற்றுப் புழைப்புக்கான கல்வி முறையால் மானுடதர்மத்தையும் மானுடப் பிறப்பின் இலட்சியத்தையும் காப்பாற்ற முடியாது. தெய்வீகத்தையும், ஆன்மீகத்தையும், மானுடதர்மத்தையும் வளர்ப்பதற்கும் பேணுவதற்கும் உருவாக்கப்பட்ட கோயில்கள், அவற்றை மறந்து பணம் சேர்க்கும் செயற்பாடுகளில் முந்தியடிப்பதிலும் போட்டிபோடுவதிலும் குறிக் கோளாய் இருக்கின்றன. ஆன்மீகத்தின் பிறப்பிடமாய்க் கருதப்படும் பாரததேசத்திலுள்ள கோயில்களெல்லாம் ஊழல் சாவடிகளாய் மாறிவிட்டன. கைக்கூலி கொடுத்தாற்தான் மூலமூர்த்தியைத் தரிசிக்க முடியும் என்ற கேவல நிலை உருவாகிவிட்டது. ஊழல் செய்வதையே தொழிலாகக்கொண்டு, கோயில் மூலஸ்தானத்திலிருந்து முன்வீதி பின்வீதி வரை கழுகுப் பார்வையுடன் திரியும் மோசடிக் கூட்டம் வளர்ந்துகொண்டே போகின்றது. ஆட்சிக் கதிரையைப் பிடிக்க முயலும் அரசியல்வாதிகளைக் கொண்ட அரசுகளாலும் அதன் நிர்வாகத்தாலும் இதைக் கட்டுப்படுத்தவே முடியாது.

பணலாபத்தை இலக்காக வைத்து வளர்ந்து வரும் சர்வதேச பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகள் ஊழலையும் பிரிவினை யையும், போட்டியையும் உருவாக்க உதவுகின்றனவே தவிர அவற்றைக் கட்டுப்படுத்த உதவவில்லை. சமய ஸ்தாபனங்களும் பணத்தை இலக்காக வைத்துச் செயற்படப் புறப்பட்டிருக்கின்றன என்பதன் வெளிபாடுதான் இந்து வேறு, சைவம் வேறு என்பதும், தமிழர் இந்துக்களல்லர் என்பதும் ஆகும். எவர் எதைச் சொன்னாலும் அதன் உண்மைத் தன்மையை அறிந்து 'செயற்படுவது அறிவுடையார் பண்பாகும். அதன்படி தமிழ் மக்களும் தமது அறிவுக்கூர்மையைப் பயன்படுத்தி நல்லவை தீயனவற்றின் வேறுபாட்டைக் கண்டறிந்து செயற்பட வேண்டியது தற்போதைய காலத்தின் கட்டாயமாகும். காரணம் ஆட்சியாளர்கள், கோயில்கள், சமயஸ்தாபனங்கள், தர்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனங்கள் நல்லனவற்றையே செய்யும் என்பதற்கு தற்காலத்தில் எந்தவித உத்தரவாதமும் கிடையாது. எல்லாமே பணலாபத்தை இலக்காகக் கொண்ட வியாபார அமைப்புக்களாய் மாறிவிட்டன.

தமிழர் தங்களுடைய கோயில்களில் மட்டுமல்ல, தமது வீடுகளிலும் இந்து சமயத்தினுள் அடங்கும் எல்லா மூர்த்தங்களையும் வைத்து நாளாந்தம் வணங்கி வருகின்றார்கள். இன்று தமிழர் தங்களுடைய வீடுகளிலும், கோயில்களிலும் சிவனைவிடப் பிற மூர்த்தங்களையே அதிகமாய் வணங்கி வருகின்றனர். இது நாம் அறிந்த உண்மை. இவ்வாறு வணங்குவதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது. எனவே தமிழர் இந்துவல்ல, அவர்கள் சைவர் என்ற கோசம் தேவையற்றது. இது நன்மைக்குப் பதில் தீமையையே ஏற்படுத்தும். எனவே இந்த விடயத்தில் மக்கள் விழிப்படைய வேண்டும். தமிழர் சைவர் என்பது சரி; அதேவேளை தமிழர் இந்து என்பதும் சரியே ஆகும். எந்தப் பெயரைக்கொண்டு அழைத்தாலும் அது பரம்பொருளுக்குப் புரியும்.

சிவனே ஐந்தொழில்களையும் புரிபவர் என்றும் மற்றைய மூர்த்தங்களெல்லாம் சிவனை வணங்குகின்றனர் என்றும், இதனால் சிவனே முழுமுதற் கடவுள், சிவனே உயர்ந்த கடவுள் என்று சைவசமயத்திலுள்ள சிலர் கூறுவது ஏற்புடையதல்ல. காரணம், காணபத்தியத்தின் முழுமுதற் கடவுளாகிய கணபதி (விநாயகர்) கொண்டிருக்கும் ஐந்து கரங்கள் ஐந்தொழில்களை உணர்த்துகின்றன என்று காணபத்திய நெறியில் சொல்லப்பட்டுள்ளது. அவையாவன:

1. எழுத்தாணி வைத்துள்ள கரம் படைத்தலையும்
2. மோதகம் ஏந்திய கரம் காத்தலையும்
3. அங்குசம் ஏந்திய கரம் அழித்தலையும்
4. பாசக்கயிறு ஏந்திய கரம் மறைத்தலையும்
5. துதிக்கை அருளலையும் உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுமுர்வமாய்ச் சிந்தித்தால் இதையும் ஏற்றுக் கொள்ள வேண்டித் தான் உண்டு. ஏனெனில் ஓங்கார ஒலியின் (பிரணவத்தின்) சொரூபனே விநாயகன். ஓங்காரம் பிரம்மத்தின் (பரம்பொருள்) ஒலி வடிவமாகும். வேறு வார்த்தையிற் சொன்னால் பிரம்மம் ஓங்காரத்தின் மூலம் ஒலி வடிவாய்ச் செயற்படுகிறார் என்பதாகும். இந்த உண்மை,

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே:

உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே" எனும் தேவார வரிகளால் வெளிக்கொணரப்படுகின்றது. இதிலிருந்து பெறக்கூடிய உண்மை என்னவென்றால் சிவனும் கணபதியும் பிரம்மத்தைக் குறிக்கும் இருவேறு மூர்த்தங்களே என்பதாகும். எனவே சிவனை உயர்ந்தவர் என்றோ, விநாயகனைத் தாழ்ந்தவர் என்றோ கூறுவது பொருத்தமாகாது. விநாயகன் சிவனின் மூத்தபிள்ளை, முருகன் சிவனின் கடைசிப்பிள்ளை என்று சைவசமயத்தவர்கள் கூறலாம். அதில் தப்பில்லை. அதை மற்றைய பிரிவினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது ஏற்புடைத்தல்ல. எவர் என்ன பெயர் கொண்டு வணங்கினாலும் இறைவன் அதை ஏற்றுக்கொண்டு அருள்புரிவான்.

ஆத்மஞானம் பெற்றவர்கள் சிவன் வேறு நாராயணன் வேறு என்றோ, சைவம் வேறு வைணவம் வேறு என்றோ, இந்து வேறு சைவம் வேறு என்றோ ஒருபோதும் பார்ப்பதில்லை. எல்லாவற்றையும் பிரம்மத்தின் சொரூபமாகவே பார்க்கின்றனர். உதாரணமாக சுவாமி இராமதாசர் அவர்களிடம் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் பெற்ற தரிசனத்தைப் பார்க்கலாம். இராமதாசர் பெற்றுக்கொண்ட உபதேச மந்திரம்,

"ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்" என்பதாகும். இந்த மந்திரத்தின் துணைகொண்டு ஆன்மீக சக்தியை வளர்த்துக் கொண்டவர் சுவாமி இராமதாசர். அவருடைய சிஷ்யை கிருஷ்ணபாய் ஆவர். இவர்களுடைய தரிசனம் பெற்று தனது ஆன்மீக சக்தியை வளர்த்துக் கொண்டவர் ஆத்மஜோதி முத்தையா சுவாமி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம் பெற்றது மட்டுமல்ல, சுவாமி இராமதாசரும் அவருடைய சீடர்களிற் சிலரும் உலகச் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்ட பொழுது அவர்களைச் சில இடங்களுக்கு அழைத்துச் சென்றவர் ஆத்மஜோதி முத்தையா சுவாமி ஆவார். அப்பொழுது சுவாமி இராமதாசரிடமும் கிருஷ்ணபாயிடமும் தான் கண்ட ஆன்மீக ஆற்றலை தனது நூலாகிய : தரிசனம் என்ற நூலில் முத்தையா சுவாமி விளக்குகின்றார்.

சைவம் வேறு வைணவம் வேறு, இந்து வேறு சைவம் வேறு என்று முத்தையா சுவாமி பாகுபடுத்திப் பார்த்திருந்தால், மேற் குறிப்பிட்ட அனுபவத்தையும் அருளாட்சியையும் அவர் பெற்றிருக்க முடியாது. பரம்பொருளின் அருளைப் பெறுவதற்கு பெயரோ, மந்திரமோ ஒருபோதும் தடையாயிருப்பதில்லை. தடையாயிருப்பது மனிதமனமே! அதைப் பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டால் எல்லாம் பிரம்மத்தின் சொரூபமே என்ற உண்மை புலப்படும்.

தமிழரின் சமயம் சைவம், சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன் என்பதற்காக சிவன் தமிழர்களுக்கு மட்டும் உரியதென்றோ, சிவன் உயர்ந்த கடவுள் என்றோ கருதப்படாது. சிவனும் மற்றைய மூர்த்தங்களைப் போன்று பரம்பொருளைக் குறிக்கும் ஒரு மூர்த்தமே ஆகும். இன்னொரு உதாரணமாக, திருநாவுக்கரசு நாயனார் சிவனை ஆரியன் என்றும் தமிழன் என்றும் கூறுகின்றார். பின்வரும் தேவாரம் சான்றாகும்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலையுறையெம் மண்ணல் கண்டாய்",

"செந்தமிழோடாரியனைச் சீரியானை", என்ற வரிகள் எமக்குப் புலப்படுத்தும் உண்மையாவது: திருநாவுக்கரசு நாயனாருடைய கருத்துப்படி சிவன் தமிழனுக்கு மட்டுமல்ல ஆரியனுக்கும் உரியவர். இதே கருத்தைத்தான் பின்வரும் தேவார வரிகளும் எடுத்துக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை

............................

கரியானை நான்முகனைக் கனலைக்காற்றை"

இவற்றின்படி திருநாவுக்கரசு நாயனார் சிவனைப் பரம்பொருளின் ஒரு வடிவமாய்ப் பார்க்கின்றாரேயொழிய, சிவன் தமிழருக்குரிய கடவுள் என்று பார்க்கவில்லை. மேற்காட்டப்பட்ட உண்மைகள் மூலம் அறியமுடிவது: மனப்பக்குவம், ஆன்மீக வளர்ச்சி பெற்றவர்கள் சைவம் வேறு, இந்து வேறு, வைணவம் வேறு என்று ஒருபோதும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. எல்லாம் பரம்பொருளின் சொரூபங்கள் என்றே பார்க்கின்றனர். அதுவே உண்மை ஆகும்.

"எல்லாவுலகமும் ஆனாய் நீயே

ஏகம்பமேவி இருந்தாய் நீயே..." என்று பாடும் திருநாவுக்கரசு நாயனார் சிவனைத் தமிழருக்கு உரிய கடவுள் என்று குறுகிய கண் கொண்டு பார்த்திருக்க முடியாது. ஞானிகள் அப்படி ஒருபோதும் பார்ப்பதில்லை.

மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைப் "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே! என்று பாடுகின்றனர். இதன் அர்த்தம் சிவன் தமிழர்களுக்கு மட்டும் என்று இருக்கமுடியாது. பாரினிலே தமிழர் மட்டும் வசிக்கவில்லை. எனவே மாணிக்கவாசகசுவாமிகளும் சிவனைப் பரம்பொருளின் வடிவமாகவே பார்க்கின்றார். இந்நிலையில் சிவனையும் தமிழரையும் சைவம் என்ற ஒரு சிறிய வட்டத்துக்குள் அடக்குவது வரவேற்கத்தக்கது அல்ல.

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒழித்தாய் போற்றி
ஓவாத சத்தத்தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தேவாரத்தை நோக்கும்போது, நாயன்மார் சிவனைப் பரம்பொருளாகவே கருதினார்கள் என்பது வெள்ளிடை மலை. இதற்கு மேலும் சிவன்வேறு நாராயணன் வேறு, அம்பாள் வேறு என்று கருதுவோமானால் அது எமது அறியாமையாகவே இருக்க முடியும். எனவே நாயன்மார்கள் சிவன், சைவம் என்ற வட்டத்திற்குள் நிற்கவில்லை. அவர்கள் பரந்த பரம்பொருளை நன்கு உணர்ந்த வர்கள். இவ்வாறான பரந்த உள்ளம் படைத்த நாயன்மார்களால் வளர்க்கப்பட்ட சைவ சமயத்தையும் அதைப் பின்பற்றும் தமிழர்களை யும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் இழுத்துச் செல்ல முயற்சிப்பது மகா தவறாகும். "தமிழர் சைவர்கள், இந்துக்களல்லர்," என்று கூறிச் சிறிய ஒரு வட்டத்திற்குள் தனிமைப்படுத்துவதன் எதிர்விளைவு, தமிழரின் சமய, சமூக வாழ்க்கையை மட்டுமல்ல, அவர்களுடைய மொழி, இலக்கியம், கலை என்பவற்றையும் பெரிய அளவில் பாதிக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்மொழியில் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரம் மட்டுமே சைவ சமயத்தை அடிப்படையாய்க் கொண்டது. மற்றைய வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி, மணிமேகலை சைவ சமயத்தைச் சாராதவை. தற்பொழுது தமிழரின் பயன்பாட்டிலுள்ள இதிகாசங்களில் மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை என்பனவும் சைவ சமயத்தைச் சாராதவை ஆகும். கந்தப்புராணமும் அவ்வாறே, சிவனைக் கதாநாயகனாகக் கொள்ளாத பக்தி இலக்கியங்களை, அவை சைவத்துடன் தொடர்பற்றவை எனும் காரணம் காட்டி ஒதுக்கிவிட்டால் தமிழனுக்கு மிஞ்சப்போவது என்ன? என்று அங்கலாய்க்க வேண்டி இருக்கு, சிவனைக் கதாநாயகனாகக் கொண்ட திருமுறைகள் பக்தி இலக்கியமாகத் திகழ்வது போன்று, நாராயணனைக் கதாநாயகனாகக் கொண்ட நாலாயிரந் திவ்விய பிரபந்தமும் பக்தி இலக்கியமாகத் திகழ்கின்றது. தமிழன் சைவன் என்ற காரணம் காட்டி இதை ஒதுக்கிவிடலாமா? அப்படி ஒதுக்கினால் தமிழ் இலக்கியம் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்பது வெள்ளிடை மலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமது பயன்பாட்டிலுள்ள பக்திப் பாடல்களை எடுத்துக் கொண்டால், அவை கர்நாடக சங்கீத வடிவிலிருந்தாலென்ன, திரை இசை வடிவில் இருந்தாலென்ன, கிராமிய மெட்டில் இருந்தாலென்ன இவையெல்லாம் சிவனை மட்டும் கதாநாயகனாய்க் கொண்ட பாடல்களல்ல. இந்து சமயத்தில் அடங்கும் எல்லா மூர்த்தங்களையும் பற்றிய பாடல்கள் ஆகும். தமிழர் சைவர்கள் என்ற காரணம் சொல்லி மற்றைய பாடல்களை ஒதுக்கிவிட்டால் எத்தனை ஆயிரம் பாடல்களை இழக்க வேண்டி வரும்? என்பதை எண்ணிப்பாருங்கள். அவைமட்டுமா! தமிழரின் கலைப் பொக்கிசங்களாகிய சிற்பக் கலையையும் சித்திரக் கலையையும் எடுத்துக் கொண்டால், இவையெல்லாம் சிவனை மட்டும் சித்தரிப்பவையா? இல்லை, எல்லா மூர்த்தங்களையும் சித்தரிப்பவை. சைவசமயத்தைக் காரணம் காட்டி இவற்றையெல்லாம் ஒதுக்கிவிடலாமா? அவ்வாறு ஒதுக்கிவிட்டால் தமிழரின் மொழி, இலக்கியம், கலை என்பவற்றின் நிலை என்னவாகும்? இவற்றைப் பற்றிய சிந்தனை சிறிதுகூட இல்லாமல் "தமிழர் இந்துவல்ல" என்று கோசம் போடுபவர்களுக்குப் பின்னால் தமிழ் இனம் சென்றால், தமிழனின் நிலமை என்னவாகும் என்று சிந்தித்துப் பார்த்து விழிப்படைய வேண்டிய நேரம் இதுவாகும். தமிழ் இனமே விழிப்படையுங்கள்! தவறின் பேராபத்தில் வீழ்வீர்கள்.

தமிழனுக்கு இருக்கின்ற வேதனைகள் போதாதென்று, இன்னும் வேதனைகளைத் தருவதற்கு முயல்பவர்களை இனங்கண்டு கொள்ளத் தவறாதீர்கள். ஏற்கனவே தமிழன் நல்லதொரு காரியத்தைச் செய்வதற்குக்கூட ஒன்று சேரமாட்டான் என்ற பழியைச் சுமந்து கொண்டிருப்பவன். இந்த லட்சணத்தில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் செயலாகத்தான் "தமிழன் இந்துவல்ல" என்ற கோசத்தையும் பார்க்க வேண்டியுள்ளது. மெய்ஞ்ஞானிகள் சிவனைப் பரம்பொருளின் சொரூபமாயே பார்க்கின்றனர். எனவே சிவன் தமிழருக்கு மட்டும் உரியவரல்லர். அவர் பிரபஞ்சத்திற்கு உரியவர். ஆனபடியால், சிவன் சைவத்துக்கு மட்டும் உரியவரென்றோ, சைவம் தமிழருக்கு மட்டும் உரியதென்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல முடியாது. சைவத்தில் பல பிரிவுகள் உண்டு. அவற்றைத் தமிழர் அல்லாதவர்களும் பின்பற்றுகின்றனர். சைவத்தை யாரும் தழுவலாம். சிவனை யாரும் வணங்கலாம். உலகம் பூராகவும் இன்று சைவம் வளர்கிறது. உலகம் பூராகவும் இன்று சிவனை வணங்குகின்றார்கள்.

இதுவரை இக்கட்டுரையிற் சொல்லப்பட்டிருப்பவற்றில் இருந்து இதன் நோக்கத்தை நன்கு புரிந்திருப்பீர்கள். இருந்தபோதும் இறுதியில் எனது கருத்தை இரத்தினச் சுருக்கமாய்ச் சொல்வதானால்: தமிழர்கள் சைவர்கள் என்பதற்கு மறுப்புக் கிடையாது. அதே வேளையில் சைவம் இந்து சமயத்தின் ஒரு பிரிவாய் அடக்கப் பட்டிருப்பது சரி ஆகும். இது சைவத்துக்கும் தமிழருக்கும் மேலதிக பலமாகும். வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், சித்தாந்தம், புராணம் என்பவற்றை அடிப்படையாயக்கொண்டு இயங்கும் வைதீக சமயங்களில் சைவமும் ஒன்றாகையாலும், இது ஸ்ரீ பகவான் ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்ட அத்வைதக் கொள்கைக்கு அமைவாக உள்ளதாலும் இந்து சமயத்திற்கு வித்திட்ட ஆதிசங்கரரின் பெயரால் தமிழர்கள் தம்மை இந்துக்கள் என்று அழைப்பது சரியே. அதில் எந்தத் தவறும் இல்லை.

உலகம் தமிழரை இந்துக்களென்றே அழைக்கின்றது. தமிழர் தம்மை இந்துக்கள் என்று அழைப்பதனால் தமிழர்கள் பரந்த உள்ளம் படைத்தவர்கள், பரம்பொருளை உணர்ந்தவர்கள், தெய்வீகக் கோட்பாட்டுக்கு அர்த்தம் கொடுத்து வாழ்பவர்கள் என்ற தகுதியைப் பெறுகின்றனர். இந்தவகை நற்பெயரும் ஒற்றுமை உணர்வுந்தான் இன்று எமக்குத் தேவையாகும். ஒவ்வொரு மனிதனிலும் இறைவனைக் காணவேண்டும் என்றுதான் சைவ சமயம் கூறுகின்றது. இதையே மற்றைய சமயங்களும் கூறுகின்றன. எனவே சைவசமயம் மற்றைய சமயங்களுக்கு முரண்பட்டதல்ல ஆகையால் அதைத் தனிமைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தம்மை இந்துக்கள் என்று அழைப்பதால் சைவத்தின் இருப்பு, வளர்ச்சி எந்த வகையிலும் பாதிப்பிற்கு உட்படாது. சைவம் என்ற பெயர் கொண்டு சைவத்தை வளர்ப்பதும் இந்து என்ற பெயர் கொண்டு சைவத்தை வளர்ப்பதும் தமிழ் மக்களுக்கு ஒரே வகையான நன்மையையே அளிக்கும். எனவே சைவம் வேறு, இந்து வேறு என்பதும் தமிழர்கள் இந்துக்களல்லர் என்பதும் தமிழருக்கு வேண்டப்படாத விடயம். இந்துக்கள் என்று அழைக்கப்பட்டாலும் சைவர்கள் என்று அழைக்கப்பட்டாலும் தமிழர் தமிழரே ஆவர். ஒன்றே பலவாகும், பலவே ஒன்றாகும். எத்தனை சமயங்கள் இருந்தாலும் அத்தனைக்கும், இறைவன் ஒன்றே. "வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே" இன்று மனித குலத்துக்கு வேண்டியது.

உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் உண்மையைச் சொல்வதானால், எல்லாச் சமயத்தையும் மதித்து, அரவணைத்து மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்துச் செல்லக்கூடியவர்களினாற் தான் இவ்வுலகிற்கு நன்றைச் செய்யமுடியும். மற்றையவர்கள் பிரிவினையையும், வெறுப்பையும் ஏற்படுத்தி அதன் மூலம் போட்டி, பூசல்களுக்குள் மக்களைத் தள்ளி ஆக்கத்துக்குப் பதிலாக அழிவையும், நன்மைக்குப் பதிலாகத் தீமையையும், நிம்மதிக்குப் பதிலாக நிம்மதியற்ற அவல வாழ்க்கையையும் தான் அளிக்க முடியும். இந்த உண்மையை இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இவர்களை இனங்கண்டு ஓரங்கட்டாதவரை நிம்மதியான வாழ்வு மனிதகுலத்துக்கு கிட்டப்போவதில்லை.

ஒற்றுமையே உறவு!
ஒற்றுமையே பலம்!
ஒற்றுமையே சமாதானம்!
ஒற்றுமையே அமைதி!
ஒற்றுமையே அன்பு!
அன்பே இறைவன்!

ஒன்றாகிப் பலவாகி நிற்பவன் பரம்பொருளே! அதை உணர்வதற்கு ஞானம் வேண்டும். ஞானமற்றோர் கூற்றெல்லாம் வீண்பிதற்றல்; அதை நன்கு அறிந்திடுவர் அறிவுடையோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 9

"தமிழர் இந்துக்களல்லர், அவர்கள் சைவர்களே, சிவன்தான் பெரிய தெய்வம், மற்றைய மூர்த்தங்களெல்லாம் சிறிய தெய்வங்கள். பெரிய தெய்வமாகிய சிவனை வணங்கினால், சிறிய தெய்வங்கள் தாமாகவே முன்வந்து அருள் புரிவார்கள்," எனும் கூற்றிலிருந்து வெளிப்படும் உண்மையாவது: சைவமக்களாகிய தமிழர்கள் சிவனை மட்டும் வழிபட்டாற்போதும், மற்றைய மூர்த்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வணங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதாகும். எனவே தமிழர் மத்தியிலுள்ள சிவன் கோயில்களைத் தவிர்ந்த மற்றைய கோயில்கள் அனைத்தும் சிவன் கோயில்களாக மாற்றப்படுவது நன்மை பயக்கும். அப்பொழுது சிவன் மூலமூர்த்தியாகவும் மற்றைய மூர்த்தங்கள் பரிவார மூர்த்திகளாகவும் நிறுத்தப்படுவர். அதுதான் உண்மையான சைவக்கோயில். சிவனை மூலமூர்த்தியாய்க் கொள்ளாத எந்தக்கோயிலும் சைவக்கோயில்கள் ஆகா. சிவனை மூலமூர்த்தியாகக் கொள்ளாத எந்தவொரு கோயிலிலும் சிவனைப் பரிவார மூர்த்தியாய் வைப்பது பெரும் குற்றமாகும். அதிலும் அம்மனை மூலமூர்த்தியாய் வைத்து சிவனைப் பரிவார மூர்த்தியாய் வைப்பது மகாகுற்றமாகும் என்பது சைவத்துவ வாதிகளின் வாதமாகும்.

இறைவன் ஒன்றின் பலவாகவும் பலவின் ஒன்றாகவும் திகழ்பவன். இந்த உண்மையைத் தமிழன் பண்டுதொட்டே உணர்ந்துள்ளான். அதனாலோ என்னவோ, பண்டைய தமிழன் மத்தியில் கொற்றவை (அம்மன்) வழிபாடு, சேயோன், குறிஞ்சிக்குமரன், முருகன் வழிபாடு, மாயோன், ஆயர்குலக் கண்ணன் வழிபாடு, சூரிய (சௌரம்) வழிபாடு என்பன தொன்றுதொட்டே இருந்து வந்துள்ளன. இவை தமிழரின் இலக்கியங்கள், புராணங்கள் மூலம் நிரூபணமாகின்றன. விநாயகர் வழிபாடுதான் தாமதமாக 6ம் நூற்றாண்டில் வந்ததாக அறியப்படுகின்றது. எனவே சிவனை மட்டுந்தான் தமிழர் வழிபட்டார்கள் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட மூர்த்தங்களை வழிபடுவதன் மூலம் தமது வேறுபட்ட பிரச்சனைகளுக்குப் பரிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று நம்பிய தமிழர், திருமணப் பாக்கியத்திற்குத் துர்க்கை அம்மனையும், நோய்நொடி தீர மாரி அம்மனையும், பிள்ளைப் பேற்றிற்கு முருகனையும், பாவவினைகள் நீங்க விநாயகனையும், கல்விக்குச் சரஸ்வதியையும், செல்வத்திற்கு இலட்சுமியையும், வல்லமைக்குத் (ஆற்றல்) துர்க்கையையும், பாதுகாப்பிற்கு வயிரவர், வீரபத்திரர், ஐயனாரையும், நீண்ட ஆயுளுக்குத் திருமாலையும், வெப்பநோய் தீரச் சூரியனையும் மோட்சத்துக்கு சிவனையும் வணங்கினார்கள். அது இன்றுவரை தொடர்கின்றது. இத்தனை வழிபாடுகளும் சைவர்களாகிய தமிழர் மத்தியில் நிலவியது, இன்றுவரை நிலவுகின்றது. இவற்றிலிருந்து வெளிப்படும் உண்மை, தமிழன் சிவனை மட்டும் வழிபடவில்லை, பரம்பொருளாகிய இறைவன் ஒன்றாயும் பலவாயும் நின்று அருள் புரிபவன் என்ற நம்பிக்கையில் மற்றைய மூர்த்தங்களையும் வழிபட்டனர் என்பதாகும். இறைவனை (பரம்பொருளை) சிவன் என்ற பெயர் கொண்டு தமிழர் அழைக்கிறார்கள் என்பதும், அதன் காரணமாய்ச் சிவனை முழுமுதற் கடவுளாய்க் கொள்கிறார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. அதனால் மற்றைய மூர்த்தங்களை சிவன் சொரூபங்களாகப் பார்க்கின்றனர் என்பதே உண்மையாகும்.

இந்து சமயத்தினுள் அடங்கும் ஆறு மூர்த்தங்களையும் தமிழன் தொன்றுதொட்டே வணங்கி வருகிறான். அப்படியானால், தமிழனை இந்து என்று சொல்வதில் என்ன தவறு? தவறே இல்லை. இந்து சமயத்துக்கும் சைவசமயத்துக்கும் தொடர்பு இல்லை என்பதில் எந்தளவிற்கு உண்மை உண்டு? அது உண்மையில்லை. தொடர்பு உண்டென்பதுதான் உண்மை. சிவனைத் தவிர மற்றைய மூர்த்தங்கள் சைவத்தைச் சாராதவை என்று சொல்லி அவற்றை ஒதுக்கி வைக்கத் தமிழர்கள் தயாராயில்லை. சிவனை மூலமூர்த்தியாகக் கொள்ளாத மற்றைய கோயில்களை ஒதுக்கவோ அன்றி மாற்றவோ தமிழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராயில்லை. இந்த உண்மையை சைவக்கோசம் போடுபவர்கள் உணர வேண்டும். மேற்கூறப்பட்டுள்ள உண்மைகளைச் சைவக் கோசம் போடுபவர்கள் அறியாதிருக்க முடியாது. காரணம் அவர் களும் தமிழர் மத்தியில் தமிழர்களாகவே இருந்து கொண்டிருக் கின்றனர். எனவே அவர்களின் கோசம் உள்நோக்கம் கொண்ட தாகவே இருக்க வேண்டும் என்று கருத வேண்டி உள்ளது.

சிவன் தமிழருக்கு மட்டும் சொந்தமான தமிழ்க்கடவுள் அல்லர். சிவனை மற்றைய பிரிவினரும் வணங்குகின்றனர். சிவனுக்கு ஓதப்படும் மந்திரங்கள் தமிழில் இல்லை. சமஸ்கிருதத்திலேயே இருக்கின்றன. இந்து சமயத்துள் அடங்கும் ஆறு மூர்த்தங்களுக்குரிய மந்திரங்கள் அனைத்தும் சமஸ்கிருதத்திலேயே உள்ளன. அதாவது இந்துசமயத்துக்கு சமஸ்கிருதம் பொதுமொழியாக உள்ளது. இந்து சமயத்தின் ஆணிவேரான வேதங்கள் அனைத்தும் சமஸ்கிருதத் திலேயே உள்ளன. சைவத்திருமுறைகளில் அடங்கும் பாடல்கள் அனைத்திலும் வடமொழிச் சொற்கள் பெருமளவு இடம்பெற்றுள்ளன. அதிலும் முருகனைப் போற்றும் திருப்புகழில் வடமொழிச் சொற்கள் மிகமிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சமஸ்கிருதம் தமிழர்களுடைய மொழியல்ல என்பதை நாம் எல்லோரும் அறிவோம். திருமுறைப் பாடல்கள் அனைத்திலும் மற்றைய மூர்த்தங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக.

"கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே ..." என்ற தேவாரத்தைக் காட்டலாம்.

இந்நிலையில் இந்துவிற்கும் சைவத்திற்கும் தொடர்பில்லை என்பதும் சைவத்தைத் தழுவும் தமிழர்கள் இந்துக்களல்லர் என்பதும் ஏற்புடையதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைவம்" என்ற பதம் மச்சம் மாமிசம் சேராத மரக்கறி உணவைக் குறிக்கின்றது. சைவ உணவு, சைவச் சாப்பாடு என்றால் மச்சம் மாமிசம் சேராத உணவைக் குறிக்கும். சைவ உணவகம், சைவக்கடை என்றால் மச்சம் மாமிசம் சேராத உணவகம் என்றும், மச்சம் மாமிசம் தவிர்ந்த பொருட்கள் விற்கப்படும் கடை என்றும் கருதப்படுகின்றது. சைவக்காரன் என்றால் மச்சம் மாமிசம் தவிர்ந்த உணவை உண்பவன் என்பதைக் குறிக்கும். அதேவேளையில், சைவசமயத்தைச் சார்ந்தவனையும் குறிக்கும். Vegetables களை உண்பவன் Vegetarian. இதிலிருந்து பிறக்கும் ஓர் உண்மை என்ன வென்றால்: சைவசமயம் மச்சம் மாமிசம் உண்பதைத் தவிர்க்கும் சமயம் என்பதாகும். மச்சம் மாமிசம் உண்பதைப் பாவச் செயலாகக் கருதும் சமயம். எனவே சைவசமயத்தைப் பின்பற்றுபவன் சைவ உணவை மட்டும் சாப்பிட வேண்டும். அவன் மச்சம் மாமிசத்தை உண்ணப்படாது. இதனால் சைவசமயம் கொலை, புலாலுண்ணலை வெறுக்கின்றது. "சைவசமயம் என்றால் மச்சம் மாமிசம் சேராத சமயம் என்பது பொருளாகும். எனவே சைவசமயத்தைப் பின்பற்றுபவர்கள் அதாவது சைவர்கள் சைவ உணவை உண்பவர்கள். இது இந்தச் சமயத்தின் முக்கிய விதிகளில் ஒன்று.

மேற்கூறப்பட்ட விதிகளின் அடிப்படையில், சைவக் கோயில்களில் பூசகர், வழிபாட்டு முறைகள், கோயிற் சுற்றாடல் முழுவதும் சைவசமயமாகவே உள்ளன. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயம் சுத்த சைவத்தை வலியுறுத்தும் பொழுது, சிவன் சுத்த சைவன் என்பது வெளிப்படை ஆகும். சுத்த சைவனாகிய சிவனை முழுமுதற் கடவுளாய்க் கொண்ட சைவ சமயிகள் மத்தியில், எப்படி மாமிச உணவு, உயிர்ப்பலி அபிஷேகம், யாகம் என்பன இடம் பிடித்தன? இன்றும் இடம்பெறுகின்றன என்பது ஆராயப்பட வேண்டியவை. இந்த உயிர்ப்பலி அபிசேகம், யாகம் என்பனதான் தமிழர் மத்தியில் ஒரு காலத்தில் சமண, பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களின் எழுச்சிக்குக் காரணமாய் அமைந்தன. இதற்கு விடைகாண முடியாதவர்களாகவே இன்றுவரை சைவர்கள் திணறுகின்றார்கள். இன்றும் இலங்கை, இந்தியா நேப்பாளம் ஆகிய நாடுகளில் உள்ள கோயில்களில் உயிர்ப்பலி அபிசேகம் நடைபெறுகின்றது. இதை நிறுத்துவது பெரியவொரு சிரமமான காரியமாய் உள்ளது. இதை மேற்கொள்பவர்கள், இது தங்களுடைய பாரம்பரிய வழிபாட்டுமுறை என்றும், அதனால் அதை நிறுத்த முடியாது என்றும் கூறுகின்றார்கள். இது சைவசமயத்துக்கு முற்றிலும் முரணானது என்பது வெள்ளிடைமலை.

சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள், அதாவது சைவ சமயத்தவர் சுத்த சைவ உணவையே உண்ண வேண்டும்; அவர்கள்தான் உண்மையான சைவர்கள். அப்படியாயின் மச்சம், மாமிசத்தை உண்ணும் சைவர்கள் பெயரளவில் சைவர்களே தவிர, உண்மையான சைவர்களல்லர். அதாவது சைவசமய விதிமுறைகளுக்கு அமைய வாழ்பவர்களல்லர். அப்படிப் பார்த்தால் இன்றைய காலக்கட்டத்தில் பெயரளவில் சைவர்களாக வாழ்பவர்கள் தான் பெரும்பகுதியினர். எனினும் அவர்களும் சைவசமயத்துக்குரிய கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். அத்துடன் கோயில் வழிபாடுகள், விரதங்கள், சமய அனுட்டானங்களை மேற்கொள்ளும் வேளைகளில் சைவ உணவை மட்டும் உண்ணுகின்றனர் என்பதும் கண்கூடு.

சைவசமயத்தவர் மட்டுமல்ல, மற்றைய சமயத்தவரும் அந்தந்தச் சமயங்களுக்குரிய விதிமுறைகள், கட்டுப்பாடுகளை நூற்றுக்கு நூறு வீதம் சரியான முறையில் கடைப்பிடிக்கின்றனர் என்று சொல்லுவதற்கில்லை. எனினும் சைவசமயத்தவர் மத்தியில் காணப்படும் கோயில் உயிர்ப்பலி வேள்விகள், மச்சம்மாமிச உணவுப்பழக்கம், மதுபானப்பழக்கம் என்பன சைவசமயத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனப்படுத்தும் அம்சங்களாகவே உள்ளன. இன்று உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், உலகச்சுருக்கம், பல்வேறு இனங்கள் சேர்ந்து வாழவேண்டிய சூழல், என்பனவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கும் பொழுது, காலத்துக்கேற்ற மாற்றமும் விட்டுக்கொடுப்பும் அவசியமாகின்றன. எனவே இந்தக் காலகட்டத்தில் தமிழர் அனைவரும் சைவர் என்றும், தமிழர்களுக்கும் இந்து சமயத்துக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது என்றும் அடம்பிடிப்பதில் அர்த்தம் இருக்க முடியாது. வேறு வார்த்தையிற் சொன்னால், இவ்வாறு அடம்பிடிப்பதனால் பெரிய நன்மை ஒன்றும் தமிழ் இனத்துக்கு ஏற்படப் போவதில்லை. **மீண்டும் ஒரு சமயகுரவர்கள் காலம் வருமென்றோ மீண்டும் ஒரு சோழசாம்ராட்சியம் உருவாகுமென்றோ** எண்ணுவதில் எந்தப் பிரயோசனமும் கிட்டப்போவதில்லை. அவ்வாறு எண்ணுவது வெறும் கற்பனையாகவே கழிந்துபோகும்.

எனவே உலக மாற்றத்துக்கு ஏற்ப, வாழும் சூழலுக்குக்கேற்ப தமிழர்களும் இயைந்து கொடுத்து உலகத்தோடு ஒத்தோடுவது தான் சாலச்சிறந்தது. மறுபடியும் இங்கு கூறுகின்றேன்.

"மாறக்கூடியது உயிர்வாழும்
மாறமுடியாதது மாண்டுபோகும்" என்னும் உண்மையை உணர்ந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். புலம்பெயர் நாடுகளிலும், இளஞ்சந்ததியினரின் மத்தியிலும் **சைவம்** என்ற பதம் அருகிவருவது கண்கூடு. **இந்து** என்ற பெயரின் பயன்பாடுதான் வளர்ந்து வருகின்றது. மற்றைய இனத்தவர்களும் தமிழரை இந்துக்கள் என்றுதான் அழைக்கின்றார்கள். சைவர்கள் என்று யாரும் அழைப்பதில்லை. தமிழரின் சமயம் பற்றி எந்த ஆவணங்களிலேயோ அல்லது பத்திரங்களிலேயோ குறிப்பிடும் பொழுது "HINDU" என்று தான் குறிப்பிடுகின்றனர். சைவம் என்ற பதத்தை எவரும் பயன்படுத்துவதில்லை. இதை யாரும் மறுக்க முடியாது. தங்களைச் சைவர்கள் என்று அழைப்பவர்களும் பத்திரங்களில், ஆவணங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து என்றுதான் குறிப்பிடுகின்றனர். தமிழர்களைச் சைவர்கள் என்று அழைப்பது தவறு என்று நான் கூறவில்லை. அவர்கள் சைவர்களே, ஆனால் தமிழரை இந்துக்கள் என்று அழைக்கப்படாது; அப்படி அழைப்பது தவறு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழரை இந்துக்கள் என்று அழைப்பதில் எந்தத் தவறுமில்லை.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழகங்களில் உலகச் சமயங்களைப் பற்றிய ஒரு பாடம் படிக்கின்றார்கள். அதன் மூலம், எல்லாச் சமயங்களையும் பற்றிய பொது அறிவை அவர்கள் பெறுகின்றனர். அந்தப் பாடத்திட்டத்தில் இந்துசமயம் என்ற பதம் பயன்படுத்தப் படுகின்றதேயொழிய சைவசமயம் என்ற பதம் பயன்படுத்தப் படுவதில்லை. இதனால் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழரின் பிற்சந்ததியினர் மத்தியிலும், மற்றைய இனத்தவர் மத்தியிலும் இந்து சமயம் என்ற பதமே பயன்பாட்டில் உண்டு. சைவசமயம் என்றால் அவர்களுக்கு அதைப்பற்றி எதுவுமே தெரியாது.

முற்காலத்தில் தமிழன் சைவன் என்பதற்கு ஓர் அடையாளம் இருந்தது. உடையைப் பொறுத்தமட்டில் ஆண்களுக்கு வேட்டி, சால்வை, தலைப்பாகை என்பனவும், பெண்களுக்கு சேலை, சட்டை, பாவாடை, அரைத்தாவணி இருந்தன. சிவசின்னங்களாக திருநீறு, உருத்திராட்சம் மாலை அணிந்திருந்தனர். பண்பாட்டுக் கோலங்களாக குடுமி, பூவும் பொட்டும், தாலி என்பன காணப்பட்டன. இன்று சைவத்தமிழனுக்குரிய அடையாளங்கள் படிப்படியாய் மறைந்து போவது யாவரும் அறிந்த உண்மை. அதற்குக் காரணம் உலக மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் பல்வேறு மாற்றங்கள். இதை நிறுத்த முடியாது; காலவோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் இயற்கையின் நியதி. உதாரணமாக, இன்று கனடாவில் வாழும் எண்பது வயது முதியவர் கூட வேட்டி கட்டி, திருநீறு பூசி, பொட்டு வைத்து கோயிலுக்குச் செல்வதற்குத் தயாராயில்லை, காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலாதிக்கம். இந்நிலையில் தமிழர்களெல்லாம் சைவர்கள், அவர்கள் தம்மை இந்துக்கள் என்று அழைக்கக் கூடாது என்று அடம்பிடிப்பதில் என்ன பயன்? இந்துக்கள் என்று எம்மை அழைக்கும் மற்றையவர்களுடன் நாங்களும் இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு போவதனால் இனங்களுக்கிடையே ஒற்றுமை, பலம் வளரும். அதை விடுத்து நாங்கள் சைவர்கள் என்று பிரிவினை காட்டுவதனால் பிளவும் பலயீனமுந்தான் மிஞ்சும். எமக்குள் நாம் "சைவர்" என்று எம்மை அழைப்பதனால் பெரிதாக எதுவும் நடக்கப்போவதில்லை. மகாகவி பாரதியார் பாடியது போன்று,

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று மற்றயவர்கள் போற்ற வேண்டும். எமக்குள் இரண்டு வானொலியில் பேசுவதனாலோ, மூன்று பத்திரிகைகளில் எழுதுவதனாலோ எதையும் சாதித்துவிட முடியாது.

இந்நூலாசிரியர் என்ற வகையில் எனக்கிருக்கும் அக்கறை என்னவென்றால், **"தமிழர்கள் இந்துக்களல்லர்"** என்ற ஒரு பரப்புரையை உருவாக்கி, தமிழர்களை, விசேடமாக பிற்சந்ததியினரை சைவர்கள், இந்துக்கள் என்று இரண்டாக எவரும் பிளவுபடுத்தி விடக்கூடாது என்பதாகும். அப்படியான ஒரு தேவை, அவசியம் கிடையாது என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டுவது தான் இந்நூலின் நோக்கமாகும். ஏற்கனவே இலங்கைத் தமிழன் நொந்து, நலிந்து, மெலிந்து தனது பாரம்பரிய பூமியைவிட்டு வெளியேறி புலம்பெயர் நாடுகளில் தனக்கென்று ஒரு நிலமையை உருவாக்கவும் தனது இருப்பை உறுதிப்படுத்தவும் முயற்சித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இவர்களுக்கிடையில் இவ்வாறான ஒரு பிளவை ஏற்படுத்துவது பாரதூரமான பின்விளைவுகளை உருவாக்கும். எனவே, எந்த வகையிலும் தமிழர்களிடையே பிளவு ஏற்படக்கூடாது என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத அக்கறை கொண்டதின் விளைவாகவே இந்நூல் வெளிவருகின்றது என்பதை உறுதிபடக் கூறுகின்றேன். இதற்குமேல் எந்த உள்நோக்கமோ வெளிநோக்கமோ எனக்குக் கிடையாது.

ஒற்றுமையே பலம், ஒற்றுமையே வாழ்வு
ஒற்றுமையே வளர்ச்சி, ஒற்றுமையே நிம்மதி

விநாயகன், முருகன், அம்மன் ஆகிய மூர்த்தங்களை மூலமூர்த்தியாய் கொண்ட கோயில்களை சைவக் கோயில்கள் என்று அழைக்கலாமா? என்று கேட்டால், "இல்லை" என்றுதான் சைவ வாதிகள் பதில் சொல்லுவார்கள். அப்படியாயின் அவற்றை இந்துக் கோயில்கள் என்றுதான் அழைக்க வேண்டும். அப்படியானால், தமிழர்களை இந்துக்களென்று அழைப்பதில் என்ன தவறு? என்று கேட்டால், அது தவறு என்கிறார்கள் சைவவாதிகள்.

சைவ சமயத்தைப் பாரம்பரியமாகக் கொண்ட தமிழர்களை இந்துக்கள் என்று அழைப்பதன் மூலம், சைவத்தின் தனித்தன்மை இழக்கப் பட்டுவிடும் என்று சைவவாதிகள் கருதலாம். அப்படியாயின், தனித் தன்மை கொண்ட சைவசமயத்தினுள் எவ்வாறு மற்றைய மூர்த்தங்களின் வழிபாடுகள் வந்து சேர்ந்தன? என்ற கேள்வி எழுகின்றது. இதற்குச் சரியான விடை பகிரமுடியாதுண்டு. காரணம் சிவனுடன் மற்றைய மூர்த்த வழிபாடுகளும் தொன்று தொட்டே தமிழர் மத்தியில் நிலவுகின்றன. சுத்த சைவக் கோயிலாகக் கருதப்படும் சிவன் கோயில்களிலும் விநாயகனுக்குத்தான் முதலில் பூசை ஆரம்பமாகின்றது. இந்த வழக்கம் எப்படி வந்தது? ஏன் வந்தது? என்ற கேள்விகளுக்குப் பதில் காண்பதாயின் பிரபஞ்சம் தோன்றிய கோட்பாட்டுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

"ஓம்" என்ற ஒலியுடன் பிரபஞ்சம் தோன்றியதாயும், அதுவே ஒலியின் ஆரம்பமென்றும், அதுவே பிரணவந்திரம் என்றும், அதன் வடிவமே விநாயகன் என்றும், அதனாலே விநாயகனிலிருந்து பூசை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய கிரிகைகள் ஆரம்பிக்கப்படுகின்றதென்றும் சொல்லப் படுகின்றது. “பிரணவம் என்றால் அது பிரம்மம் என்பதிலிருந்து பிறக்கும் பதமாகும். பிரம்மன் என்பது வேதாந்தத்துக்குரிய பதமாகும். வேதாந்தத்துக்குரிய “ஓம்” என்ற பிரணவ மந்திரத்தை சித்தாந்தமும் ஏற்றுக்கொண்டு பயன்படுத்துகின்றது. அதைப் பிரதிபலிக்கும் விநாயகமூர்த்தத்தை சித்தாந்தமும் ஏற்றுக்கொண்டு சிவன் கோயில்களில் அதற்கு முதலிடம் கொடுக்கின்றது. இந்நிலையில் வேதாந்திகள், சித்தாந்திகள் என்றோ, இந்துக்கள், சைவர்கள் என்றோ பாகுபாடு காட்டிக்கொள்வதில் அர்த்தமிருக்க முடியாது. சித்தாந்திகள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்களில் விநாய கனைத் தமது குலதெய்வமாகக் கொண்டிருக்கும் பலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் இடையே அடிபடக்கூடிய பெரிய வேறுபாடுகள் இருப்பதாய்த் தெரியவில்லை.

இதன் அடிப்படையிலேதான் பகவான் சங்கராச்சாரியார் பாரத பூமியில் நிலவும் சமயக்கோட்பாடுகள், கலாசாரம், பண்பாடுகளின் மத்தியில் ஒரு சமரசப் போக்கை ஏற்படுத்தும் வகையில் அவற்றை ஆறாகப் பகுத்து, பின் அவற்றைத் தொகுத்து ஒரு பொது சமய, கலாசார, பண்பாட்டு முறையை உருவாக்கினார். அந்த இலக்கில் அத்வைதக் கொள்கையை உருவாக்கினார். சங்கராச்சாரியார் உருவாக்கிய அத்வைதத்துக்கும் சைவசித்தாந்தத்திற்கும் இடையில் சிறிய வேறுபாடுகள் இருக்கின்ற போதும், அவை பதி, பசு, பாசம் என்ற அடிப்படைத் தத்துவத்தை உடைப்பவையாயில்லை. வேற்று மையில் ஒற்றுமை காணக்கூடிய, அதாவது சமரசம் காணக்கூடிய வேறுபாடுகளாகவே உள்ளன. ஆறு பிரிவுகள் பரதக் கண்டத்திலுள்ள போதும், வைஷ்ணமும் சைவமுமே பெரிய பிரிவுகளாகும். வைஷ்ணவம் வேதாந்தத்திற்கும் சைவம் சைவசித்தாந்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற போதும், இரண்டும் இணைந்து இயங்கக்கூடிய நிலையிலேயே இருக்கின்றன. பகவான் சங்கராச்சா ரியார் அவர்களால் உருவாக்கப்பட்ட அத்வைதம் பாரதம் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், தமிழ்நாட்டில் சிறப்புற வளர்ந்து வருவது அனைவரும் அறிந்த உண்மை. காஞ்சிக்காமகோடிப் பீடம் அதற்கு எடுத்துக்காட்டாகும்.

இன்று இந்து சமயம் என்று அழைக்கப்படுவது வைஷ்ண வத்தையும் சைவத்தையும் இணைத்த ஒரு பொது வாழ்க்கை நெறி ஆகும். இதனுள் சமயம், கலாசாரம், பண்பாடு மூன்றும் அடங்குகின்றன. இது பரதக் கண்டத்திலுள்ள நூறுகோடிக்கு மேற்பட்ட மக்கள் திரளை ஒன்றிணைத்து வைத்துள்ளது. இதை உடைப்பதற்கு எவரும் முயற்சிக்கப்படாது. இன்று தமிழ் இளஞ்சந்ததியினர் மத்தியில் சைவம் என்ற பெயரும் உணர்வும் அருகி இந்து என்ற பெயரும் உணர்வும் வளர்ந்து வருவது கண்கூடு. ஏன்? இன்று உலகம் ஒரு கிராமம் போன்று சுருங்கிவிட்டது. வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாய் வாழ வேண்டிய தேவையும் சூழலும் ஏற்பட்டுள்ளது. எனவே பண்டைக் காலம் போன்று ஒற்றுமையில் வேற்றுமை கண்டு, குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிய காலம் மலை ஏறிவிட்டது. முன்னொரு நாள் வெள்ளைக்காரனுக்குப் பக்கத்தில் கருப்பன் நிற்பதற்குக்கூடத் தகுதியற்றவனாய்ப் பார்க்கப்பட்டான். இன்று அதே கருப்பன் அமெரிக்க நாட்டின் தலைவனாகி நிற்கிறான்.

இந்தக் காலகட்டத்தில் தமிழர் இந்துக்களல்லர் அவர்கள் சைவர்கள் என்று சொல்லி, தமிழினத்தைப் பிரித்தெடுத்து மறுபடியும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்ட எண்ணுவது மிகப்பெரிய அறிவீனம். இன்று மக்களுக்கு வேண்டியது ஆக்கத்துக்குத் தேவையான வழிவகைகளே அன்றி அழிவுக்கான வழிவகைகளல்ல. இன்று மக்களுக்கு வேண்டியது ஒற்றுமைக்கான வழிவகைகளே அன்றி வேற்றுமைக்கான வழிவகைகள் அல்ல. சமயரீதியாகவும், சமூகரீதியாகவும், சட்டரீதியாகவும் மனித இனத்துக்கு வேண்டப் படுவது அமைதி ஒன்றே! அதுவே நிம்மதியை அளிக்கவல்லது. அதற்காகவே மனிதகுலம் ஏங்கி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனத்துக்கு வேண்டப்படுவது என்ன? சிங்கள இனத்துக்கு வேண்டப்படுவது என்ன? மராட்டிய இனத்துக்கு வேண்டப்படுவது என்ன? என்ற கேள்விகளை மறந்து, மனித இனத்துக்கு வேண்டப்படுவது என்ன? என்று கேள்வி கேட்கும் காலம் இது. அறுபதுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் கனடா நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நீண்ட காலத்துக்கு நிம்மதியாய் வாழ வேண்டுமெனில், எமது பிற்சந்ததி நிம்மதியாய் வாழவேண்டுமெனில், நாம் கனேடியன் என்ற உணர்வோடு வாழப் பழக வேண்டும். மனித இனத்தில் நாம் கனடியன் என்னும் உணர்வுடன் வாழப் பழக வேண்டும். அதைவிடுத்து, நாம் தமிழன், சைவன், இந்து என்று வாழப்பழகினால், யானை தன்தலையில் தானே மண்ணை வாரிக்கொட்டிக் கொண்டு அவஸ்தைப்படுவதுபோன்று அவஸ்தைப்பட நேரிடும் என்பது மட்டுமல்ல, காலகதியில் மறைந்து போக வேண்டியும் நேரிடலாம். இந்த விடயத்தில் தமிழ் இனம் விழிப்படைய வேண்டும் சுயநலவாதிகள் எவரினதும் சதிவலையில் வீழ்ந்துவிடக் கூடாது.

இந்து என்ற சொல் தமிழ் இனத்துக்கு வேண்டப்படாத ஒன்றல்ல. அது வடமொழிச் சொல்லாயிருப்பினும் தமிழர் மத்தியில், ஏனைய பல சொற்களைப் போன்று, நீண்ட காலமாகப் பயன்பாட்டிலிருந்து வருகின்றது. உதாரணமாக:

"ஐந்து பேரறிவுங் கண்களேகொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும் .........
இந்து வாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையிற் தனிப்பெருங்கூத்தில்,"

என்ற புராணத்தில் சேக்கிளார் இந்து எனும் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார். இந்து வாழ் சடையான் எமது சிவன் ஆவார். எனவே இந்து என்ற சொல்லைப் பார்த்து நாம் அச்சமடையவோ அல்லது அதை வெறுக்கவோ வேண்டிய தேவையில்லை. இந்து என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லைப் பயன்படுத்தி எம்மிற் பலர் தமக்குப் பெயர் சூட்டியுள்ளார்கள். உதாரணமாக : இந்துமதி, இந்துஜன் போன்ற பெயர்களைப் பார்க்கலாம்.

இலங்கையில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் அழிவுப் பாதையிலிருந்த சைவசமயத்தைக் காப்பாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானே வேதம், ஆகமம், உபநிடதம் என்பவற்றை வெறுக்கவில்லை. சைவசித்தாந்தத்தை ஆதரித்த போதும் இவற்றுடன் சமரசப் போக்கையே கடைப்பிடித்தார். எடுத்துக்காட்டாக: பைபிளை (BIBLE) தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தபொழுது, பைபிளுக்கு ஆறுமுகநாவலர் பெருமான் இட்ட பெயர் "வேதாகமம்" ஆகும். இவ்வாறு பெயரிட்டதற்கான காரணம் : வேதம் தமிழரின் பொது நூல், ஆகமம் தமிழரின் சிறப்புநூல் இரண்டையும் சேர்த்து "வேதாகமம்" என்று பெயரிட்டார். ஏன் இப்படிப் பெயரிட்டார்? வேதத்திலும் ஆகமத்திலும் சொல்லப்பட்டதே பைபிளில் சொல்லப் பட்டிருந்தது. புதிதாக எதுவும் சொல்லப்படவில்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வேதம், ஆகமம், உபநிடதங்களில் சொல்லப் பட்டிருந்ததற்கு மேலாக அல்லது வித்தியாசமாக அல்லது புதிதாக எதுவும் சொல்லப்படவில்லை. வேறு வார்த்தையிற் சொன்னால், பைபிளில் சொல்லப்பட்டிருப்பது வேதம், ஆகமம், உபநிடதங்களில் சொல்லப்பட்டிருப்பவற்றின் ஒரு சிறு பகுதியே. வேதம், ஆகமம் என்பனவற்றில் சொல்லப்பட்டிருப்பதை விஞ்சிப் போவதற்கு பைபிளில் எதுவுமில்லை. ஆகையால் பைபிளுக்கு வேதாகமம் என்று பெயரிடுவது பொருத்தமாகவும் எமது படைப்பாகவும் இருக்குமென்றும் ஆறுமுக நாவலர் பெருமான் கருதினார்.

பைபிளுக்கு வேதாகமம் என்று தமிழில் பெயரிடப்பட்டதால், அதைப் பின்பற்றிய தமிழர்கள் "வேதக்காரர்" என்று யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படலாயினர். அவர்கள் தான் கிறிஸ்தவர்கள் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான வேதக்காரர் யார்? வேதத்தையும் ஆகமத்தையும் பொதுநூலாகவும் சிறப்பு நூலாகவும் கொண்ட இந்துக்கள் (சைவர்கள்) ஆவர். தமிழர் மத்தியில் வேதக்காரர் என்ற பெயரை கிறீஸ்தவர் பெற்ற நிகழ்வு காலம் செய்த கோலம் என்றே கருத வேண்டி உள்ளது. காலவோட்டத்தை யார்தான் வெல்ல முடியும்! இது இறைவனின் திருவிளையாடலாயும் இருக்கலாம். இவற்றின் மூலம் நான் சொல்ல வருவது என்னவென்றால், ஆறுமுகநாவலர் பெருமான் வேதத்தையும் ஆகமத்தையும் தமிழர்களுடைய பொது நூலாகவும் சிறப்பு நூலாகவும் ஏற்றுக்கொண்டார் என்பதாகும். எனவே வேதாந்த சமயங்களாகிய சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு பிரிவையும் உள்ளடக்கிய இந்து சமயத்துக்கு ஆறுமுகநாவலர் பெருமான் முரணானவர் அல்லர் என்பதாகும். அவர் சில சீர்திருத்தங்களை விரும்பினாரேயொழிய வேண்டாமென்று சொல்லவில்லை.

ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தைப் போலல்லாது ஓரளவிற்குச் சமயச் சுதந்திரம் நிலவியது. கிறீஸ்தவ சமயங்களை வளர்ப்பதற்கு ஆட்சியாளர்கள் உதவியபோதும், பிற சமயங்களின் இருப்பை அல்லது வளர்ச்சியை முற்றாகத் தடைசெய்யவில்லை. அதன் காரணமாக, சைவ சமயத்தவர்கள் சைவசமயம் என்ற சிறிய வட்டத்துக்குள் மட்டும் நிற்காமல், சிறிது வெளியிற் சென்று இந்து சமயம் என்ற வட்டத்துக்குள் இறங்கி, தமது வழிபாட்டு முறைகளையும் அவற்றின் வளர்ச்சியையும் விரிவுபடுத்தினர். இதன் பயனாகவே இராமகிருஷ்ண பரமகம்சர், விவேகானந்தர் போன்ற மகான்களுடைய போதனைகளும், இராமகிருஷ்ண மிசன் போன்ற தாபனங்களின் வளர்ச்சியும் தமிழ் மக்களிடையே இடம் பிடித்தன. இவ்வளர்ச்சியின் பெறுபேறாகவே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி போன்ற கல்விக்கூடங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பல இடங்களிலும் உருப்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதெல்லாம் சைவம் வேறு இந்து வேறு என்ற கோசம் எழுப்பி இவற்றின் வளர்ச்சியைத் தடைசெய்யவில்லை. ஒரு சிலரிடையே கருத்து முரண்பாடு இருந்த போதும், அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவில் வெளிப்படவில்லை. விவேகானந்தரின் பெயரால் உருவாக்கப்பட்ட விவேகானந்தா பரீட்சைக்கு சைவசமயப் பாடத்திட்டமே கற்பிக்கப்பட்டது. இவ்வாறு வேற்றுமையில் ஒற்றுமை கண்டிருந்தனர் என்பது எமது வரலாறு.

யாழ்ப்பாணமுனி என்று கருதப்படும் சிவயோக சுவாமிகள் (யோகர் சுவாமி) வேதாந்தத்திற்கும் சைவசித்தாந்தத்திற்கும் இடையில் சமரசம் காணப்பது போன்றே தனது போதனைகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். இது, ஆன்மிகவாதிகள் ஒரு போதும் சிறிய வட்டத்துக்குள் நிற்காது, மனிதகுலம் உய்யும் பொருட்டு பரந்த நோக்கத்தோடு செயலாற்றுபவர்கள் என்பதை வெளிப்படுத்துவதாய் அமைந்தது எனலாம்.

சைவசமயம் என்ற பதம் மறைந்துபோனால் தமிழர் தமது தனித்துவத்தை, அடையாளத்தை இழந்துவிடுவார்கள் என்று சிலர் ஆதங்கப்படுவது ஏற்புடையதல்ல. ஏனெனில், சைவசமயம் தமிழர்க்கு ஒருவகையான கலை, கலாசாரம், பண்பாட்டுடன் கூடிய ஒரு வாழ்வியல் அடையாளத்தை அளித்திருப்பதுபோல், இந்துசமயமும் அதே வகையான அடையாளத்தை அளித்துள்ளது. அந்த வாழ்க்கை நெறிதான் தமிழினத்துக்கான அடையாளம். அது நீடிக்கும் வரை அடையாளம் நீடிக்கும். வாழ்க்கை நெறியை விட்டுவிட்டு பெயரைப் பிடிப்பது அர்த்தமற்றது. அந்த வகையிற்தான், சைவசமயம் இந்து சமயத்தின் ஒரு அங்கமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே தமிழினத்தின் அடையாளம் பாதிக்கப்படும் என்பது தேவையற்ற கற்பனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினத்தின் பிற்சந்ததி தாங்கள் இந்துக்களா? அல்லது சைவர்களா? என்ற தேவையற்ற குழப்பத்திற்கு உட்படக்கூடாது என்பதில் தமிழர் எல்லோரும் அக்கறை செலுத்தக் கடமைப் பட்டுள்ளனர். எமது பிற்சந்ததியினரைக் குழப்பத்திற்கு உள்ளாக்குவதோ அல்லது பிளவுபடுத்துவதோ நாம் அவர்களுக்குச் செய்யும் துரோகமாகவே கருதப்படவேண்டும். எனவே, இந்த விடயத்தில் தமிழர் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவது சாலச் சிறந்தது. பண்டுதொட்டு தமிழருக்கென்று ஒரு சமயம் இருந்தது; அது சைவசமயம் ஆகும் என்பதைத் தொடர்ந்துபேண வேண்டுமென்ற தேவையின் நிமித்தம், "சைவ-இந்து" (SAIVA – HINDU) என்ற பதத்தைப் பேணலாம். அதில் தவறு இருக்காது என்பது எனது கருத்தாகும். தமிழரை சைவ-இந்துக்கள் (SAIVA HUNDUS) என்று அழைப்பது பொருத்தமாய் அமையலாம்.

சைவசமயம் என்ற சொல்லில் மாற்றம் ஏற்படுவதனால் எதையும் நாம் இழக்கப்போவதில்லை. உள்ளது உள்ளபடியே தான் இருக்கும். பெயர்மாற்றம் காலவோட்டத்துக்கு ஏற்ப நிகழ்ந்த மாற்றமாயே கருதப்பட வேண்டும். சைவ - இந்து (SAIVA – HINDU) என்னும் சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் எமது பழமையையும் புதுமையையும் பேணமுடியும். இந்து என்பது எமது பொதுப்பெயர், சைவம் என்பது எமது சிறப்புப் பெயர். "சைவ - இந்து," என்று அழைப்பது சாலச் சிறந்ததாகும். இந்த மாற்றத்தைத் தமிழர் ஏற்றுக்கொள்வதில் தப்பில்லை என்று நான் அழுத்திக் கூறுவதற்கான காரணம்: ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த சைவத் தமிழன் இன்று இல்லை என்பதும், அன்று சைவத்தமிழன் கொண்டிருந்த அடையாளங்கள், பண்பாடுகள் இன்று இவனிடம் இல்லை என்பதும் ஆகும். இது எல்லோரும் அறிந்த உண்மை. காலவோட்டத்துக்கேற்ப மாற்றம் நிகழத்தான் செய்யும். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் ஏற்படும் வேகமான மாற்றங்கள் எமது கற்பனைக்கே எட்டாதவையாய்க் காணப்படுகின்றன. இந்நிலையில் எமது சமயத்தில் மாற்றம் ஏற்படுவதையிட்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

நான் கனடாவுக்கு வந்து இப்படியான ஒரு நூலை எழுதுவேன் என்று 30 வருடங்களின் முன் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை. கடந்த முப்பது ஆண்டு இடைவெளியில் உலகில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை எண்ணிப் பார்க்கும் பொழுது பிரமிப்படையாமல் இருக்க முடியாது. எதிர்வரும் முப்பது ஆண்டுகளில் ஏற்படப்போகும் மாற்றங்கள் கடந்த முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமாயிருக்கும் என்பது உறுதி. அந்த அளவுக்கு மாற்றத்தின் வேகம் அதிகரித்துச் செல்லுகின்றது. இந்த நிலையில் தமிழரின் சமயத்தில் ஏற்பட்டிருக்கும் பெயர் மாற்றம் நிகழக்கூடாத ஒன்றல்ல.

இன்று தமிழர் மத்தியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமயமாற்றத்தை உற்று நோக்கும் போது, தமிழரின் சமயமாகிய சைவசமயம் மறைந்து போகக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அன்றொரு நாள் ஐரோப்பியர் பிறசமயத்தை எம்மிடையே பரப்பினார்கள். இன்று எம்மவரே பிறசமயத்தை எம்மிடையே உக்கிரமாகப் பரப்பி வருகின்றார்கள். இந்த நிலையில் எப்படிச் சைவசமயம் தப்பிப் பிழைக்க முடியும்! என்று ஏங்கிக்கொண்டிருக்கும் வேளையில், பெயர் மாற்றத்தைப் பற்றி முகாரிராகம் பாடுகின்றனர் சிலர். "தலையையும் உடலையும் விட்டுவிட்டு வாலைப் பிடித்த" கதையாய்த்தான் இதைப் பார்க்க வேண்டி உள்ளது. இறுதியில் வால் தானாகவே வழுக்கிச் சென்றுவிடும் என்பதை சைவத்துவ வாதிகள் உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறை அத்தனையும் காலவோட்டத்துக்கு ஏற்ப மாறிக்கொண்டிருக்கும் பொழுது மேற்கூறப்பட்ட அத்தனையோடும் பின்னிப் பிணைந்த எமது சைவசமயம் எப்படி மாறாதிருக்க முடியும்? உள்ளடக்கம் அத்தனையும் மாறிய பிற்பாடு பெயர் மட்டும் மாறாமல் இருப்பதனால் என்ன பயன்? சைவசமயம் உச்ச வளர்ச்சி பெற்றிருந்த காலத்திலிருந்த தமிழனா இன்று இருக்கிறான்? இல்லவே இல்லை. எல்லாமே மாறிய பிற்பாடு பெயரை மட்டும் மாற்றாமல் வைத்திருப்பதன் மூலம் என்னத்தைச் சாதிக்கப் போகிறோம்? உள்ள டக்கமெல்லாம் மாறிய பிற்பாடும், பெயரை மட்டும் மாற்றாது வைத்திருக்க வேண்டுமென்று கூறுபவர்களின் நிலை: "சிலுசிலுப்பு வேண்டுமா? பணியாரம் வேண்டுமா?" என்று கேட்டால், எமக்குப் பணியாரம் வேண்டாம் சிலுசிலுப்புத்தான் வேண்டும் என்று சொல்வது போன்றுள்ளது. சிலுசிலுப்புத்தான் வேண்டுமென்று சொல்பவர் களுடைய கூற்று, செயற்பாடுகள் யாருக்கு என்ன பயன் அளிக்கப் போகின்றது? எல்லாமே வீண் பிதற்றல் ஆகும். இவர்களுக்குப் பின்னால் போவது தமிழனுக்கு நன்மை அளிக்குமா என்று தமிழ் மக்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 10

தமிழர் மத்தியில் தமிழ் மொழியிலுள்ள மந்திரம் "திருமூலர் திருமந்திரம்," ஆகும். சைவத் திருமுறைகளில் இது பத்தாந் திருமுறையாகவும் விளங்குகின்றது. திருமந்திரத்தை இயற்றிய திருமூலரை சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடிய திருத்தொண்டர் தொகையில் "நம்பிரான் என்றும், திருஞானசம்பந்தர்மூர்த்தி நாயனாரை "எம்பிரான்" என்றும் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் சைவத்துக்குத் தலைவர்களாக திருமூலரையும் திருஞான சம்பந்தரையும் அடையாளப்படுத்திக் காட்டியுள்ளார் சுந்தரமூர்த்தி நாயனார். திருஞானசம்பந்தர் நமது சைவநெறியை நிலைநாட்டிய பெருமைக்குரியவர், திருமூலர் வேதாகமக் கருத்துக்களை மக்கள் மனங்கொள்ளுமாறு தமிழால் மூவாயிரம் பாடல்களினாலே எமக்கு அளித்து நிலைநிறுத்தினார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், திருமூலர் வேதாகமக் கருத்துக்களையே தமிழ்ப் பாடல்கள் மூலம் எமக்கு அளித்துள்ளார் என்பதாகும். எனவே திருமூலர் திருமந்திரத்தைத் தமிழில் இயற்றுவதற்கு முன் வேதாகமத்தை நன்கு கற்றுத் தெளிந்துள்ளார் என்பது புலனாகின்றது. திருமூலர் வேதாகமங்களை நந்தியம் பெருமானிடம் கற்றுத் தெளிந்தார் என்பது புராண வரலாறு. அப்பொழுது இவருடைய பெயர் சுந்தரநாதன் என்பதாகும். திருமந்திரத்தின் பெருமையை எடுத்துக்காட்ட, "தோத்திரத்துக்குத் திருவாசகம், சாத்திரத்துக்குத் திருமந்திரம்," என்னும் முதுமொழி வழக்கிலுண்டு. திருமூலர் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் திருமந்திரத்தில் தெளிவாகக் கூறியுள்ளார் என்று போற்றப்படுகின்றது. இங்கு நான் எடுத்துக்காட்ட விரும்புவது என்னவென்றால் : வேதாகமக் கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்தும் திருமந்திரம் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகக் கூறுகின்றது என்று சொல்லும் போது, வேதாந்தக் கருத்துக்களுக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இல்லை என்பது புலனாகின்றது.

சிவாகமங்களைத் தமிழ் மூலம் கேட்க விரும்பிய இறைவன் திருமூலரைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பித் திருமந்திரத்தைத் தமிழில் பாடச் செய்தார் என்பது சைவத் தமிழர் புராணங்களிலிருந்து அறியும் உண்மை ஆகும். ஆன்மா இறைவனோடு இணைவதற்கும் சிவகதி பெறுவதற்கும் திருமந்திரம் திசைகாட்டியாய் உள்ளது. இறைவனை அகத்திலே காண்பதற்கும் இறையருளை நுகர்வதற்கும் திருமந்திரம் துணையாக உள்ளது. அதேவேளையில் மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழ்வியல் நெறிகளையும் திருமந்திரத்தில் கூறியுள்ளார். இதே கருத்துக்கள் வேதாகமங்களிலும் கூறப்பட்டுள்ளன. இதனாலேயே திருமூலர் திருமந்திரம் தமிழ் மந்திரமாய்க் கொள்ளப்படுகின்றது. வேதங்கள் தமிழரின் பொது நூலாகவும் ஆகமங்கள் தமிழரின் சிறப்பு நூலாகவும் கொள்ளப் படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு பார்க்கும் பொழுது வைஸ்ணவத்திற்கும் சைவத்திற்கும் அடித்தளம் ஒன்றே என்பது தெளிவாகின்றது. இதேநிலைதான் இந்து சமயத்துள் அடங்கும் மற்றைய நான்கு பிரிவிற்கும் உள்ளது. இவ்வாறான அடித்தளத்தையும் பிணைப்பையும் கொண்டிருக்கும் சைவ சமயத்தை இந்து சமயத்திலிருந்து பிரித்தெடுக்க வேண்டிய தேவை அறவே இல்லை. இந்த உண்மைகளைத் தமிழ்மக்கள் நன்கு புரிந்து கொண்டு செயற்பட வேண்டுமே ஒழிய, சந்தர்ப்பவாதத்திற்கு ஒருபோதும் இடமளிக்கப்படாது.

வேதத்தைப் பொது நூலாகவும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் ஏற்றுள்ள தமிழர், வேதத்தை மந்திரம் என்றும் ஆகமத்தைத் தந்திரம் என்றும் கொள்ளுவது வழக்கமாகும். இதன் அடிப்படையிலேயே திருநாவுக்கரசு நாயனார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திரமும் தந்திரமும் ஆயினான் காண்,"

என்று தனது தேவாரத்தில் சிவனைக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து வெளிப்படும் உண்மை: சிவன் சைவசித்தாந்தத்திற்கு மட்டும் உரியவரல்லர் வேதாகமங்களுக்கும் உரியவர் என்பதாம். இதிலிருந்து நாயன்மார்கள், சிலர் எண்ணுவது போன்று, சைவசித்தாந்தத்துக்குள் மட்டும் நிற்கவில்லை என்பது தெளிவாகின்றது. மெய்ஞ்ஞானிகள் ஒருபோதும் குறுகிய வட்டத்துக்குள் நிற்கமாட்டார்கள் என்பது உலகறிந்த உண்மை. மனிதகுலம் மட்டுமல்ல எல்லா ஜீவராசிகளும் உய்ய வேண்டும் என்பதுதான் ஞானிகளின் எதிர்பார்க்கை. எம்மைப் போன்று தமிழன் மட்டும் உய்ய வேண்டும் மேன்மையடைய வேண்டும் என்று குறுகிய கண் கொண்டு ஞானிகள் ஒருபோதும் பார்ப்பதில்லை. எனவே இந்து சமயத்துக்கும் சைவ சமயத்துக்கும் தொடர்பு இல்லை என்பதோ, தமிழர் இந்துக்களல்லர் என்பதோ ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்தல்ல. இந்த உண்மையைத் தமிழர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களைச் சித்தாந்திகள் வேதாந்திகள் என்றும் சைவர்கள் இந்துக்கள் என்றும் பிரித்து பார்ப்பது தேவையற்றது. இது பேராபத்தை விளைவிக்கும். இப்படியான ஒரு தேவை தமிழனைப் பிரித்து ஆழ நினைக்கும் வேறு இனத்துக்கு வரலாம், தமிழனுக்கு வரவேண்டியதில்லை. தமிழன் பிளவுபட்டால் எம்மை ஆழ நினைப்பவர்களுக்கு, அடக்க நினைப்பவர்களுக்கு வாய்ப்பாய்ப் போய்விடும். எனவே இந்த விடயத்தில் தமிழினம் விழிப்படைய வேண்டும்.

தமிழர் மத்தியில் நிலவும் முருகன் வழிபாட்டைச் சிறிது ஆழமாய்ப் பார்ப்பதன் மூலம் சில உண்மைகளை மேலும் தெரிந்து கொள்ளலாம். சேயோன், குறிஞ்சிக் குமரன் என்னும் பெயர்களுடன் முருகன் வழிபாடு தமிழர் மத்தியில் தொன்று தொட்டு இருந்தது. பிற்காலத்தில் முருகன் தமிழ்க் கடவுள் என்றும் தமிழை வளர்க்க உதவியவர் என்றும் கருதப்பட்டு தமிழரின் இறைவழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிமுக்கிய இடத்தைப் பெற்றார். இதற்கு தமிழ்ப் புலவராகிய ஔவைப் பாட்டியும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் முக்கிய பங்கு வகித்தனர் என்றால் மிகையாகாது. கந்தபுராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியாரும் முக்கிய இடம் பெறுகின்றார். இன்று தமிழர் மத்தியில் காணப்படும் வழிபாட்டுத் தலங்களில் பெரும் பங்கை வகிப்பது முருகன் கோயில்கள் என்றால், இதை யாரும் மறுக்கமாட்டார்கள். தமிழர்களுடைய சமயமாகிய சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாய்க் கருதப்படும் சிவனுக்கு இல்லாத அளவுக்கு முருகனுக்கு முக்கியத்துவம் கிடைத்துள்ளது என்றால், இதற்கொரு ஆழமான காரணம் இருக்க வேண்டும். முருகன் பக்தர்களுக்கு இலகுவாய் அருள் பொழிபவன் என்னும் நம்பிக்கையே அந்தக் காரணமாகும். இவ்வாறான பெருங்கருணை படைத்த முருகனைச் சைவ சமயத்துடன் இணைத்துவிட வேண்டும் என்பதற்காக முருகனைச் சிவனின் கடைசிப் பிள்ளையாகத் தமிழர்கள் கருதி வழிபடுகின்றனர்.

முருகன் இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் ஒன்றான கௌமாரத்தின் முழுமுதற் கடவுள். இவர் பரம்பொருளின் பேரின்ப வடிவினராய்க் கருதப்படுகின்றார். கௌமாரத்தின் முழுமுதற் கடவுளாயும் பரம்பொருளின் பேரின்ப வடிவினராயும் கருதப்படும் முருகப் பெருமான் தமிழர் மத்தியில் முதலிடத்தைப் பிடித்திருக்கும் நிலையில், தமிழர் இந்துக்களல்லர் என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? முடியவே முடியாது. இந்து சமயத்துக்கும் தமிழருக்கும் இணைப்பு, பிணைப்பு இல்லை என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? முடியாது என்பதுதான் யதார்த்தமாகும்.

யாழ்ப்பாணத் தமிழன் கந்தபுராணக் கலாசாரத்தில் திளைத்தவன் என்று சொல்லப்படுகின்றது. அந்தளவிற்கு கந்தப் புராணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்பவர்கள். கந்தசட்டி விரதமும் சூரன்போரும் தமிழனுடன் பின்னிப் பிணைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான வாழ்க்கை வாழ்ந்துவரும் தமிழனை அவன் சைவ சமயத்தைச் சேர்ந்தவன் என்ற ஒரே காரணத்துக்காக, இந்து சமயத்திலிருந்து பிரித்துவிட முடியாது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். எளிதில் அருள் புரிபவன் முருகன் என்ற காரணத்துக்காக முருகனை வழிபடுவது போன்று, வெவ்வேறு காரணங்களுக்காக விநாயகனையும் அம்மனையும், நாராயணனையும், சூரியனையும் தமிழர் வழிபடுகின்றார்கள்; சிவனை மட்டும் வழிபடவில்லை. இந்நிலையில் தமிழர் இந்துக்கள் அல்லர் என்று எப்படிக் கூறமுடியும்? முடியாது. தமிழர் இந்துக்களுமாவர் என்பதுதான் யதார்த்தம். யதார்த்த நிலையைக் குழி தோண்டிப் புதைப்பதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

காலவோட்டத்தின் ஆதிக்கத்தை சில உதாரணங்களோடு பார்ப்பது இவ்விடத்திற் பொருத்தமாய் இருக்குமென்று எண்ணுகிறேன். இன்று தமிழர் தங்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுக்கு வைக்கும் பெயர்களை நோக்கின் : முன்னைய தமிழர் பண்பாட்டுடன் சேராத வட இந்தியப் பெயர்களைச் சூட்டுவதை அவதானிக்க முடிகின்றது. சில பெயர்களின் முதல் எழுத்துக்கள் தமிழ் இலக்கணத்துக்கு மாறாக இடம்பெறுகின்றன. உதாரணமாக டில்லிராசா, றங்கன், ரஜனி, லோகன் போன்றவற்றைக் கூறலாம். வேறு சில பெயர்களின் முடிவில் வரும் எழுத்துக்கள் தமிழ் இலக்கணத்துக்கு முரணாக அமைகின்றன. உதாரணமாக : அபிஷேக், சித்தார்த், பாரத் போன்றவற்றைக் கூறலாம். இதை எம்மாற் தடுத்து நிறுத்த முடியாதிருக்கின்றது. காரணம் : போக்குவரத்து, செய்தித் தொடர்பு அற்ற பண்டைய காலத்தில் எமது தனித்தன்மையைப் பேணமுடிந்தது. போக்குவரத்து, செய்தித் தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சியடைந்து உலகம் ஒரு கிராமம் போன்று சுருங்கி வரும் இன்றைய நிலையில், எமது தனித்தன்மையைப் பேணமுடிவதில்லை. எனவே மாற்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவை ஏற்றே ஆகவேண்டும், இது காலத்தின் கட்டாயம். இவ்வாறான தாக்கம் எமது இறைவழிபாட்டு முறையிலும் ஏற்படத்தான் செய்யும். அதை நிறுத்த முடியாது, ஏற்றுத்தான் ஆகவேண்டும். எனவே இன்றைய நவீன உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இளஞ்சந்ததியையும் இனி வரப்போகும் பிற்சந்ததியையும், "சைவம்" என்ற பெயரையே பிடித்துக் கொள்ளுங்கள் என்று நாம் திணிக்க முடியாது. இளஞ்சந்ததியும் பிற்சந்ததியும் "இந்து" என்ற சொல்லுத்தான் பொருத்தமானது என்று கருதினால், அதற்கு நாம் இயைந்து கொடுத்தே ஆகவேண்டும். அதுதான் இன்றைய யதார்த்தம் ஆகும். இளஞ்சந்ததியின் சிந்தனையும் செயற்பாடுகளும் சூழலுக்கேற்றதாய், எம்மிலிருந்து வேறுபட்டுச் செல்வது கண்கூடு. எனவே காலவோட்ட மாற்றத்துக்கு ஏற்ப இயைந்து கொடுக்கத் தவறின் நாம் எமது கடமையிலிருந்து தவறியவர்களாகக் கருதப்பட்டுப் புறந்தள்ளப்படுவோம்.

இந்துசமயம் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் எனும் பரந்த நோக்கில் அதற்காக சீரியமுறையில் வழிசமைத்துக் கொடுத்துள்ளது. சமணசமயம், பௌத்தசமயம் என்பன ஊழ்வினையைப் போக்கமுடியாது, அதை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற கருத்தைக் கொண்டவை ஆகும். ஊழ்வினையிலிருந்து தப்பவேண்டுமாயின், தவத்தினை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஊழ்வினை மனத்தினூடாகவே செயற்படுகின்றபடியால், தவத்தை மேற்கொண்டு மனதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஊழ்வினை செயற்படாது அதைத் தடுக்கலாம் என்பது அவர்களுடைய கொள்கை. இதனாலேயே சமண, பௌத்த சமயங்கள் பூவுலக சிற்றின்ப வாழ்வுக்கு உதவாதவையாய்க் கருதப்பட்டுப் புறந்தள்ளப்பட்டன. இந்து சமயம், இறைவனுடைய அருளை மக்கள் பெறுவதன் மூலம் ஊழ்வினையை மாற்றலாம், தடுக்கலாம் அல்லது குறைக்கலாம் என்று கூறுகின்றது. இதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நாயன்மார்கள், ஆழ்வார்கள், மற்றும் சித்தர்கள், ஞானிகள் அவற்றை நிரூபித்துக் காட்டினார்கள். அந்தவகையில், இறையருளைப் பெற்றுப் பூவுலக வாழ்க்கையை இன்பமாய் அனுபவிப்பதற்கும் பிற்பாடு பரலோக பேரின்ப வாழ்வைப் பெறுவதற்கும் இந்து சமயம் வழிசமைத்துக் கொடுத்துள்ளது. இதனாலேயே சனாதன தர்மம் என்றும் அழைக்கப்படுகின்றது. இது நூறுகோடிக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தால் பின்பற்றப்படுகின்றது.

இதன் அடிப்படையிலேயே தென்னிந்தியாவில் தோன்றிய பக்தி இயக்கம் இந்தியா முழுவதும் பரவியது. இறைவன் மீது செலுத்தும் ஆழ்ந்த பக்தியால் அவனுடைய அருளைப் பெற்று எமது துன்பங்கள், துயரங்கள், இடைஞ்சல்களைத் தீர்த்து இன்பமாக வாழ்வை அனுபவிக்க முடியும் என்பது இவ்வியக்கத்தின் கொள்கையாகும். இந்து சமயம் உடம்பை வெறுக்கவில்லை. உடம்பினுள் இறைவன் இருக்கிறான். உள்ளிருக்கும் இறைவனை அறிந்து அவனுடன் கலப்பதன் மூலம் பேரின்பப் பெருவாழ்வைப் பெறலாம். எனவே மானுடப்பிறவி பெறுமதி மிக்கது, கிடைத்தற் கரியது. உடலை விட்டு உயிர் பிரியும் வரை உடம்பை நன்கு பேணி உள்ளிருக்கும் இறைவனைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். எம்முள் கடந்து பார்த்தால் கடவுளைக் காணலாம் என்பதையே “கடவுள்” என்ற பதம் தாங்கி நிற்கின்றது. இவ்வாறு இம்மைக்கும் மறுமைக்கும் வழிசமைத்துக் கொடுத்துள்ள இந்து சமயத்தைப் போற்றிப் பேணவேண்டியது ஒவ்வொரு தமிழனுடையதும் கடமையும் உரிமையும் ஆகும்.

இந்துசமயம் ஒரு சமயமாகாது என்று கூறுபவர்கள் அதற்கான காரணமாக: ஒரு சமயத்திற்கு ஒரு கடவுள் இருக்கவேண்டும் என்கின்றனர். இந்து சமயத்துக்கு ஒரு கடவுள் இல்லை; ஆகையால் இது ஒரு சமயத்திற்குரிய தகுதியைப் பெறவில்லை, எனவே இதை ஒரு சமயமாகக் கொள்ளமுடியாது என்கின்றனர். இந்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை (கடவுளை) பிரம்மம் என்றும் ஆதிபரம்பொருள் என்றும் அழைக்கின்றனர். பெயரோ உருவமோ இல்லாத இறைவனுக்குப் பெயரையும் உருவத்தையும் கொடுத்தவன் மனிதன். இந்து சமயத்தின் அகப்பிரிவுகளான ஆறு சமயங்களுக்கு கணபதி, முருகன், நாராயணன், அம்பாள், சிவன், சிவசூரியன் என்று பெயர்களைக் கொடுத்தவன் மனிதன். இவையெல்லாம் பிரம்மத்தையே (ஆதிபரம்பொருளையே) குறிக்கின்றன. பகவான் ஆதிசங்கரருடைய அத்வைதமும் கடவுளைப் பிரம்மம் என்றே குறிப்பிடுகின்றது. எனவே இந்து சமயத்துக்கு கடவுள் இல்லை என்று கூறுவது சிறுபிள்ளைத்தன்மாகும். பல்வேறு சமயங்கள் வேறுபட்ட பெயர்களைக் கொண்டு இறைவனை அழைக்கின்றபோதும், இந்தப் பிரபஞ்சத்துக்கு இறைவன் ஒருவரே என்பது பகுத்தறிவு படைத்த அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். அந்தப் பரம்பொருளைக் கடவுளாகக் கொண்டதே இந்து சமயம். இது உலகத்திலுள்ள அத்தனை சமயங்களுக்கும் தாய்ச் சமயமாகும். இந்த உண்மையை அனைவரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

இறைத்தத்துவத்தைக் கூறும் ஆறு பிரிவுகளும் சித்தாந்த சைவத்தோடு தொடர்புடையன. இவை பதி, பசு, பாசம் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுகின்றன. இந்த ஆறு சமயங்களும் ஒரே பொருளாகிய பிரம்மத்தை (ஆதிபரம்பொருளை) அடைவதற்குச் சாதனமாக உள்ளன என்பதுதான் உண்மை. ஓர் இடத்தைச் சென்றடைவதற்கு ஆறு வேறுபட்ட வழிகள் உதவுவதுபோன்று, இந்த ஆறு சமயங்களும் உள்ளன. இவற்றுள் இது சிறந்தது அது சிறப்பற்றது என்றோ இது பெரியது அது சிறியது என்றோ அல்லது இது தீயது அது நல்லது என்றோ சொல்ல முயற்சிப்பது அறிவீனமாகும். எங்களுடைய சைவசமயந்தான் சிறந்ததென்பதோ இதன் முழுமுதற் கடவுளாகிய சிவன்தான் உயர்ந்தவர் என்பதோ ஆணவமலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடாகும். இந்த அறிவீனத்தை வெளிப்படுத்துமாப்போல் திருமூலர் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

"ஒன்றது பேரூர் வழி ஆறதற்குள்
ஒன்றது போல இருமுச்சமயமும்
நன்றிது தீதிது என்று உரையாளர்கள்
குன்று குரைத்து எழுநாயை ஒத்தாரே"

மலையின் மாண்பை அறியாத நாய் அதைப் பார்த்துக் குரைப்பதுபோல, இறைத்தத்துவத்தை அறியாத மனிதர்கள் தம்முள் ஏற்றத்தாழ்வு பேசுகின்றனர்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு," என்ற எமது முன்னோரின் பொன்மொழியைக் கருத்திற் கொண்டு இன்புற்று வாழ்வதற்கு முயற்சிப்போமாக.



முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுந்தீவு கோவிந்தன் ஒரு சிறந்த எழுத்தாளர். எழுத்துத்துறையில் நாவல் எழுத்தாளராகக் கால் பதித்த இவர் இதுவரை பத்துக்கு மேற்பட்ட நாவல்களை எழுதிப் பத்திரிகையில் பிரசுரித்ததோடு மட்டும் நின்றுவிடாமல், அவற்றை ஐந்து நூல்கள் வடிவில் வெளியிட்டுள்ளார். இவருடைய படைப்புக்கள் வாசகர்களின் பாராட்டைப் பெற்றன என்பது சிறப்பம்சமாகும்.

பிற்பாடு தனது சமயத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாகவும் அதன்மீது கொண்ட பற்றின் காரணமாகவும் சமயம் மாறுவோரைக் கண்டு வேதனைப்பட்ட நிலையில், 2013ம் ஆண்டு "நாங்கள் ஏன் சமயம் மாறக்கூடாது?" எனும் தலைப்பில் விழிப்புணர்வை ஊட்டும் ஒரு நூலை எழுதினார். அந்நூல் ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை - கனடாவினால் வெளியிடப்பட்டது. தற்பொழுது தமிழர் மத்தியில் இடம்பெறும் "தமிழர் இந்துக்களல்லர்," எனும் பரப்புரையைப் பொருளாகக் கொண்டு, தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக "தமிழர் இந்துக்களா?" எனும் தலைப்பில் இந்நூலை எழுதி வெளியிடுகின்றார்.

இந்நூல் தமிழ்மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி இவருடைய எதிர்பார்க்கையைப் பூர்த்திசெய்ய உதவும் என்று பூரணமாக நம்புகின்றோம். இவர் தெய்வ நம்பிக்கையும், பக்தியும் கொண்ட ஒரு பண்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. பசுந்தீவு கோவிந்தன் ஒரு சிறந்த சிந்தனையாளரும் கற்பனாசக்தி கொண்டவரும் ஆவார் என்பதற்கு இவர் பெற்றுள்ள "சிந்தனைச் செம்மல், கற்பனைச் சிற்பி," எனும் கௌரவப் பட்டங்கள் சான்றாகும். இவரின் முயற்சி வெற்றிபெற எங்களது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

***பதிப்பகத்தார்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org